தத்ஸத்

பரப்பிரஹ்மணே நமஃ

# நன்மதிதீபம்.



ஸ்ரீமத்

தே. அ. சாமிகுப்புசாமி யவர்களால்

இயற்றப்பட்டது.

சென்னை

கந்தன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.


இரண்டாம் பதிப்பு

1930.



விலை அணா 4.

தபால் சார்ச்சுப் பிரத்தியேகம்.



ஓம்
தத்சத்
பரப்பிரஹ்மணேநம:

# நன்மதி தீபம்.



இது
திருத்துருத்தி-இந்திரபீடம்
ஸ்ரீ. காபாத்திரசுவாமிக ளாதீனம்
ஸ்ரீ. ஈசூர் - சச்சிதாநந்தசுவாமிகள் திருவடித்தொண்டரும்
39-வது பட்டாளம் சுபேதார் மேஜாராயிருந்தவருமான
ஆத்மஞானி
ஸ்ரீ. ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகளின்
மாணவரு ளொருவராகிய

**ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி யவர்களால்**
இயற்றப்பட்டுச்

சென்னை, ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்
வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய
மகாவித்துவான்

**ஸ்ரீமத் - கோ. வடிவேலுசெட்டியாரவர்களால்**
பார்வையிடப்பட்டுக்

**காளத்தி. இ. சிதம்பரசாமி புராணிக ரவர்களால்**
சென்னைக்
கந்தன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.


இரண்டாம் பதிப்பு.

இதன் விலை] [அணா 4

1930


*Registered Copy Right.*

# இந்நூலி னதிகார வட்டவணை



திருத்துருத்தி. இந்திரபீடம். ஸ்ரீ. கரபாத்திரசுவாமிகளாதீனம்

ஸ்ரீமத். ஈசூர். சச்சிதாநந்த சுவாமி.



திருத்துருத்தி. இந்திரபீடம். ஸ்ரீ. கரபாத்திர சுவாமிகளாதீனம்

ஸ்ரீமத். ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகளின் மாணவர்

ஸ்ரீமத். ஐயாக்கண்ணு தேசிகமூர்த்தி.



திருத்துருத்தி. இந்திரபீடம். ஸ்ரீ. கரபாத்திர சுவாமிகளாதீனம்

ஸ்ரீமத். ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகளின் மாணவர்

ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி.

ஓம்

தத்ஸத்.

பரப்பிரஹ்மணேநம:

# சாத்து கவிகள்.

ஸ்ரீ சகத்குருபீடம்
நியாய சந்திரரும், வேதாந்த பாஸ்கரரும்
ஸ்ரீ ஆன்மபுராண ஸ்ரீ பகவத்கீதா கூடார்த்த தீபிகை முதலிய
நூல்களின் மொழிபெயர்ப் பாசிரியருமாகிய
மகா மடண்டலேசுவர வீரசேகர
ஸ்ரீமத். சுப்பைய ஞான தேசிகேந்திர சுவாமி
யவர்க ளியற்றிய

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இன்மதி யணிந்த விறைவனு ரீன்ற விபமுகத் திறைதிரு வருளால்
புன்மதி யருகற் புண்ணிய மீட்டிப் புவிதிவி சிவமுறை பொருந்தச்
சின்மதிச் சாமி குப்புசா மியெனுஞ் சீருளன் றேருநூ லோர்ந்தே
நன்மதி தீப மென்னுநன் னூலை நல்கினன் நல்லவர் தமக்கே.

சென்னை. கோமளேச்சுரன்பேட்டை.

ஆசிரியர்.

ஸ்ரீமத். கோ-வடிவேலு செட்டியாரவர்க ளியற்றிய

நேரிசை வெண்பா.

உறுதிப் பொருளனைத்து மோதுவார்க் கீயு
மறுதியிலா வானந்த மாக்கு—மிறுதியினிற்
றன்னைமற வாதுணர்த்துஞ் சாமிகுப்பு சாமிசொற்ற
நன்மதிதீ பந்தா னயந்து.

சென்னை-புரசை-வி-ஆர்-வி-ஹைஸ்கூல்
தமிழ்ப் பண்டிதர்-கம்பர் கவிநயம்
பிர்மஸ்ரீ. எஸ். வெங்கட்டராம சாஸ்திரியா
ரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

வள்ளுவர் நூற்பொருளை வண்மையா வாராய்ந்து
கள்ளமெலா நீங்கக் கருத்தாக—வுள்ளுபொரு
ளெல்லா மியம்பு மெழினன் மதிதீப
மெல்லாருங் கொள்ளுபொரு ளே.

சென்னை, மேரி மகாராணி மாதர் கலாசாலைத்
தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத் கா. நமச்சிவாய முதலியாரவர்க ளியற்றிய
நேரிசை வெண்பா.

ஆன்றோர்கள் சொன்ன வறவுரைக ணன்காய்ந்து
தேன்றோயும் வெண்பாவிற் செப்பினான்—சான்றோர்தேர்
தன்மம் புரிஞானச் சாமிகுப்புச் சாமிமால்
நன்மதி தீபநூ னன்கு.

சென்னை, கீழ்ப்பாக்கம், வி. எஸ். எம். கால்ஸ், ஐஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத். கொ. இராமலிங்கத் தம்பிரானவர்க ளியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கன்மனத்தி லடர்ந்துள்ள வஞ்ஞானக் காரிருளைக் கடிந்தி யாரு
நன்மனத்த ராய்த்தமது சொரூபநிலை கண்டதனி னண்ணி வாழ
நன்மதிதீ பம்மதனை யளித்திட்டா னதன்சீர்த்தி நவிலற் பாற்றோ
தன்மதியைக் கண்டின்பந் தழைத்துமன்னுஞ் சாமிகுப்புச் சாமி
[மாதோ.

திருமயிலைச் செந்தோம் ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத். செல்வநாத முதலியாரவர்க ளியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சான்றவர் வகுத்த பற்பல நூலிற் றதையற நெறிமுறை யாய்ந்தே
யேன்றதாய் தந்தை யாதியா வியம்பு மியலமை நீதிகள் பலவுந்
தேன்றருஞ் சுவையுங் கைப்புறும் வண்ணந் திண்புவி வழக்கினைச் சுட்டி
மான்றவல் வினைகால் சீத்திடு நாமம் வயங்குறு நன்மதி தீபம்.

என்றமைத் தரிய நூலது செய்தோ னின்றமிழ்ப் புலவரைக் காணிற் [ந்தோ
றன்பெரும் வாழ்வென் றகமகிழ்ந் தளிப்போன் றத்துவப்பொருணிலையுணர்
னன்னதா னத்தின் மான்மியம் விளக்கி யன்னதற் கிலக்கிய மானோன்
பன்னருஞ் சாமி குப்புசா மிப்பேர் பாவல னுருவ னம்மா.

சென்னை, பச்சையப்பன் காலேஜ்
தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் கா ர. கோவிந்தராஜமுதலியாரவர்க ளியற்றிய
நேரிசை வெண்பா.

பன்மத நூலவரும் பண்புடைத்தா மென்றுரைப்ப
நன்மதி தீப நவின்றுன்சீர்—மன்மதியோன்
சாமிகுப்பு சாமியெனுஞ் சாய்வி லருட்டகையோன்
தோமிலெழி னூலறிவிற் றோய்ந்து.

செந்தமிழ் இரத்தினகரம் - மருத்துவமணி
ஸ்ரீமத் வல்லை-சண்முக சுந்தர முதலியாரவர்க ளியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நன்னலமல் லனவாகுந் திமிரமகன் றிடவெழுந்த ஞானபானு,
பன்னலமு மன்பதைக்குப் பரிந்தளிக்கப் பரந்தொளிரும் பயோத
ரந்தான், கன்னலமு தொடுகண்டின் சுவையெனுநன் மதிதீபங் கனி
விற் சொற்று, ளின்னலிலாப் புகழ்படைத்த சாமிகுப்பு சாமி
யெனு மியல்வல் லோனே.

## K. GOVINDASWAMI MUDALIAR
(HEAD CLERK, G. P. O., MADRAS.)

AND

DIRECTOR ANANDASRAMA SADHUMAHASANGHUM AND CHENNAI VEDANTHA SANGHAM ETC., MADRAS.

I have read through the book named "Nanmathi Deepam" by Swami Kuppuswamy Avargal. The arrangement of the subjects dealt with is very sensible and the style easy flowing, forcible and convincing. All that a person who wants to lead a virtuous life ultimately leading to ever lasting and perfect bliss should know, is taught in this little book. The discourses about God, between the Teacher and the disciple are splendid. I think the book may be prescribed, with advantage, as a text book in Tamil poetry for boys and girls in Secondary Schools.

I heartily congratulate the author for having produced as work which will prove useful to one and all.

ஷை ஆங்கில மொழி பெயர்ப்பு.

சென்னை. தபாலாபீஸ் தலைமைக் குமாஸ்தாவும், ஆனந்தாஸ்ரம
சாது மஹா சங்கம், சென்னை வேதாந்த சங்கம்
ஆகிய இவைகளின் நிர்வாக கர்த்தாவுமான

## கெ. கோவிந்தசாமி முதலியா

ரவர்கள் எழுதியது.

சாமி குப்புசாமி அவர்கள் எழுதியுள்ள நன்மதி தீபம் என்னும் புத்த கத்தை வாசித்துப் பார்த்தேன். விஷயக் கோவை பகுத்தறிவோடு இயற் றப்பட்டிருப்பதுடன், தமிழ் நடையும் எளிதாயும், பெருக்குடையதாயும், படிப்போர்க்கு உறுதி பயக்கக்கூடியதாயும் இருக்கிறது. நல்லொழுக்கத்தால் அடையக்கூடிய அழிவிலாப் பேரின்பத்தை எய்த விரும்புவோன் இவ்வுலகில் அறிந்து கொள்ளவேண்டிய விடயங்கள் யாவும் இச்சிறுநூலில் பொதிந்து கிடக்கின்றன. கடவுளைப்பற்றிய விவாதமும், குரு மாணவ சம்பாஷணையும் வெகு சிறந்தவைகளா யமைந்துள்ளன. உயர்தரப் பாடசாலைகளில் ஆண் பெண் மாணவர்களுக்குப் பாடசாலைப் புத்தகமாக இந்நூல் ஏற்படுத்தப்பட் டால் நன்மையைத் தருமென்று நான் எண்ணுகிறேன்.

பெரியோரும் சிறியோருமாகிய எவர்க்கும் உபயோகமாகக்கூடிய ஒரு நூலை எழுதித்தந்த நூலாசிரியரை நான் ஆசீர்வதிக்கிறேன்.

வித்துவான். சென்னை. வண்ணாரப்பேட்டை

## ஸ்ரீமத். வ. சே. சேஷாசல கிராமணியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சித்தசுத்தி ஞானமுத்தி சேர்நன் மதிதீப
மத்த னருளா லருணூலாய்க்—தெத்துணையு
மிப்புவியோ ரின்புறவே யீந்தானண் பன்சாமி
குப்புசா மிச்சற் குணன்.

சென்னை "செங்குந்தமித்திரன்" பத்திராதிபர்

வண்ணக்களஞ்சியம்

## குகஸ்ரீ காஞ்சி. நாகலிங்க சுவாமியவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

புன்மதியைத் தீய்த்துப் புகழுடைய வேயாரு
நன்மதிதீ பம்மென்னு நன்னூலைப்—பன்மறைதேர்
சாமிகுப்பு சாமியெனுஞ் சன்மார்க்க மேவுதிரு
நாமத்தோன் சொற்று னயந்து.

வித்துவான். சென்னை. இராயபுரம்

## ஸ்ரீமத். சிந்நய நாயகரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

உலகிலுளோ ரெளிதாக நீதியினைத் தினையுமோர்ந் துய்யு மாறு
பலகலையின் சாரமெலாம் பண்பாகத் திரட்டியிந்தப் படிமே லென்றுந்
திலகமதாய் நிலையுறுநன் மதிதீப நூலதனைச் செய்தான் பூமேற்
கலகமறு நிலையுணர்ந்த சாமிகுப்பு சாமியெனுங் கலைவல் லோனே.

சென்னை. பச்சையப்பன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமத். மணி. திருநாவுக்கரசு முதலியா ரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

விழுமிய வொழுக்கம் வாய்ந்து விளங்குநன் மதிதீ பத்தைக்
கழுமிய வுவகை கூர்ந்து காசினிக் களித்தா னந்தஞ்
செழுமிய குணத்தின் செல்வன் செந்தமிழ்ப் புலமை யெல்லாந்
தழுவிய சாமி குப்பு சாமியாஞ் சான்றோன் மாதோ.

சென்னை. சூளை. பட்டாளம். அறப்பிரசாரக சபை
திருக்கழுக்குன்றம், வேதகிரீச்சுரர் அன்னதான சங்கம் ஆகிய
இவ்விரண்டு சபைகளி னதிபர்.

## வித்துவான் ஸ்ரீமத்-செ. தங்கவேலு முதலியாரவர்கள்

எழுதிய வசனம்.

சுத்தசட்குண சுயம்பிரகாச சொரூப நிலையேதானென்றுணர்ந்தவராய் மிகமேதாவியாய், வள்ளற்றன்மைவாய்ந்தவராய், கள்ளமகன்ற உள்ளத்தினராய், அன்னதாதாவாய், அகிலம்பரவும் அருங்குணத்தினராய் அமர்ந்து விளங்கும் ஸ்ரீமத்-தே. அ. சாமிகுப்புசாமி யெனும் அண்ணலியற்றிய நன்மதிதீபமெனும் நன்னூல் மிகமிக வினிது.

அந்நூலின் மாட்டுத் தாய்தந்தையரின் அருமை பெருமை, குரு, தெய்வம் அரசு நெறியாதி இறைபணி புரிதல் ஈருகவுள்ள இருபானெண் விஷயங்கள் நன்கு விளக்கி ஆன்றோர்களின் அரும்பெருஞ் சாத்திர சரிதைகளையும் ஆங்காங்கு அமைவுடன் உதகரித்துப் போதியகல்விசாலார்க்கும் பொருணனிபடும்படி பொறிக்கப்பட்டுள்ளன.

அன்றியும், ஒவ்வொரு பாவின் தாற்பரிய சங்கிரகத்தையும் தனித்தனி தலையங்கத்தின்கண் தீட்டியபெற்றி தேனோடு கலந்த சீனியை மானும்.

சுருங்கச் சொல்லின், இவ்வரியநூல் நன்மை தின்மை இன்னதென உன்னவிடாது காண்டல் கேட்ட லுண்ண லுடுத்தலிலே உயர்பிறவியாம் மானிட மக்களை உய்ப்பித்துலவும் அஞ்ஞானமெனும் அந்தகாரமழிய மந்தகாசத்துடன் மலர்ந்த ஓர் ஞானபானுவை யொக்கும்.

இப்பாவலர்கள் மானிடர்கள் இறுதிவரை கடைப்பிடிக்கவேண்டிய இன்றியமையாப்பொதுவான ஒழுக்கங்களையும் வரிசைக் கிரமங்களையும், இதோபதேசங்களையும் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதின் விளக்குகின்றன வாதலால் இந்நூலை எத்திறத்தவரு மதித்துப்பொன்போற் போற்றல் வேண்டுமென்பதே எம்கோரிக்கை. நனித்த மதியுடை யந்நூலாசிரியர் பனித்தமதியணி பரம னருளால் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்திடுக.

சைவசித்தாந்த பிரசங்காமிருதம்

## ஸ்ரீமத். பெ. கந்தசாமிப்பிள்ளை யவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சாமிருப்பு சாமியெனுந் தத்துவஞா னப்புலவன்
தேமிருப்பச் சொன்னன்மதி தீபநூ—லாமிதனி
லில்லாத தொன்றில்லை யேதமின்றிக் கற்றோர்கள்
வல்லாராய் வீற்றிருப்பார் வாழ்ந்து

சென்னை சிந்தாதிரிப்பேட்டை, சதாவதானம்

## ஸ்ரீமத். தெ. பொ. கிருஷ்ணசாமிப்பாவலரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

அறநான் முழுதறிந்தே யவ்வண்ணஞ் சொல்வோன்
மறநோய் மகிதலத்தே மாய—வுறவுரைத்தான்
தன்னொப்பி லாப்புகழோன் சாமிருப்புச் சாமிக்கோன்
நன்மதி தீபநா ளுடு.

## ஸ்ரீமத் தெ. பொ. மீநாக்ஷி சுந்தரம்பிள்ளை, B.A. B.L.
## ஹைகோர்ட்டு அட்வகேட். சென்னை. முனிசிபல் கௌன்சிலர் அவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சாமிருப்புச் சாமியெனுந் தக்கவனு மெற்கினியோன்
பூமியுளார் போற்றிப் புகழ்ந்திடவே—சேமித்த
ஞானப் பொருளையெலா நன்மதி தீபமென
மோனவுரு வாயுரைத்தான் முன்.

வித்துவான். செங்கற்பட்டு.

## ஸ்ரீமத். அரங்கசாமி நாயகரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

நன்மதி தீப நலிவின்றிக் கேட்டுணர்ந்தோர்
நன்மதியை யார்க்கு நலமாகச்—சொன்முறையிற்
சொல்வார் புகழுறுவார் சோர்வற்று வாழ்ந்திடுவா
ரெல்லாம் படித்துணர்ந்தா ரே.

திருக்கழுக்குன்றம். வரகவி

## ஸ்ரீமத். கன்னியப்ப முதலியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகிலே யொருங்குணர்ந்த வாவறுத்தார்க் கன்றியிங்கே யுண்மையாகச்
சிலகலையைப் படித்துணர்ந்து சிற்சிலஞா னந்தேறித் தேடித் தேடிப்
பலகலையைப் படித்தற்கு வழிபார்க்கும் பக்குவற்கே பரிவாய்ச் சொன்ன
நிலைகுலையா விந்நூலே பெரியதுணை யாமெனவே நேர்ந்த தாமால்.

கோச்சகம்:

நீதிநூ லுலகதனி னிறைந்திருக்க வவ்வவற்றி
னூதியந்த முளரசமீ தன்றியிலை யெனப்பொங்கச்
சோதிநன் மதிதீப மென்னுமொரு தூய்நூலைக்
கோதகன்ற சாமிகுப்பு சாமியென்பான் கொடுத்ததுவே.

சென்னை. புரசை. அஷ்டாவதானம்

## ஸ்ரீமத். சபாபதி முதலியாரவர்கள் மாணவரும் சைவத்திருமுறை போதகா சிரியருமாகிய

## ஸ்ரீமத். ம. தங்கவேற் பிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

ஆற்கணான் சொன்னசி வாகமம்போ னூற்று
நாற்பத்தெண் வெண்பாவா னூலேழாய்—பாற்பகுத்துச்
சாமிகுப்பு சாமி தருநன் மதிதீபம்
பூமிக்கு வைப்பாம் புகல்.

தமிழ்ப் பண்டிதர். சென்னை.

## ஸ்ரீமத். வல்லி. ப. தெய்வநாயக முதலியாரவர்களியற்றிய

நிலைமண்டல வாசிரியப்பா.

குணகடல் குமரி குடகு வேங்கட
மணைவுறு மறிஞர்க ளியாவரு மடைய
நன்மதி தீபம் பொன்னிதி யாமெனச்
சொற்ற நூலிற் றாய்ப்பல நீதிக
ளமைவுட னிருக்க வறிந்ததிற் சிலவே
யுரைப்பே னதனை யுற்றுக் கேண்மின்
தாய்சொல் லொழித்தாற் றாய்வழி யில்லையே
யாண்சேய் பிறக்க வருந்தவஞ் செய்தாள்
மகான்களுந் தாயின் மலரடி பணிவா
ரன்னை யில்லையே லறுசுவை யில்லையே

தந்தையைப் போற்றுதல் தவமெனக் கருதே
குடிகளை யோம்பியக் கோமகற் கண்டோம்
போலி ஞானியைப் போற்றுத லொழிமின்
ஞானியி னுறவை நலமெனக் கொளுமி
னுத்தமர் நட்பைச் சத்தெனக் கொளுமின்
மத்திமர் நட்பை மனதிற் றுதிமி
னதமர் நட்பைப் பதரெனக் கழிமி
னன்மனை வாக்கா னள்ளிருட் புலரும்
தீமனை தன்னைத் தீயெனக் கழிமின்
தீய மருவியாற் செகமது கெடுமே
நன்மரு வியாலே ஞாலம் புகழும்
மெய்ம்மை பேசின் மேலுல கடைவான்
பொய்ம்மை பேசில் போவா னரகம்
களவா னன்மைகள் கனவிலு மிலையே
பொறுமை யாலே போகு முளதுங்
கோபத் தாலே பாவஞ் சேரு
மடியார் பணியை யாளுக் கொளுமின்
செல்வச் செருக்கா லல்ல லடைவா
னெனும்பல நீதிக ளெடுத்துக் காட்டிய
நுண்ணறி வுடைய புண்ணிய வளவன்
பணத்தினு மேலாங் குணத்தினுஞ் சிறந்தோ
னீதியாய்ப் பன்னு னேர்மையாய் முன்ன
ராதியா வுரைத்தா னறிவிற் பெரியோன்
சாமி குப்பு சாமிமா தவனே.

சென்னை-சபாரஞ்சித பிரசங்க சிந்தாமணி

புராணிகர்

## ஸ்ரீமத். இராஜா. தங்கவேலு பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தண்ணோங்குந் தொடையிதழி பிறையரவு தனிநதிசெஞ் சடையிற் சூடும், பெண்ணோங்கு மொருபாகத் திறைவனடி மறவாது பேணு நோன்பால், விண்ணோங்கும் புகழ்பெறுநல் லங்கப்பச் சீமானும் விழைந்து வாழும், பண்ணோங்கு மொழிபயிலு மம்மணிப்பேர் மடவாலும் பயந்த கோமான்.

தத்துதிரைச் சூழுலகி லுபநிடதத் துட்பொருளைச் சார்ந்தோர்க் கோது, மெத்துபுக ழிந்திரபீ டக்காபாத் திரசாமி மேன்மை வாய்ந்த, சித்திரமார்ந் திடுமோதி னச்சச்சி தாநந்தச் செல்வன் றன்பால், பத்திநிறைந் திடுமுளத்த னடைந்தவரைப் புரந்தெவரும் பாச நல்லான்.

அன்னவன்யா ரெனிலென்பா லன்புமிகக் கொளுஞ்சாமி யடியார்க் கென்று, மன்னியநல் லமுதமுத லறுசுவையோ டினிதருத்தி மகிழுஞ் சாமி, பன்னரிய பலகலையும் பயின்றதனுற் பயனனைத்தும் படைத்த சாமி, தன்னிகரிற் சாமிகுப்புச் சாமியெனப் பலர் புகழுஞ் சாமி யாமால்

அவம்பெருக்குந் தீயொழுக்கம் புரிந்தெவரு மதோகதியி லடையா வண்ண, நவம்பெருக்குஞ் சொற்செறியும் பொருட்பொலிவு நனிபெருக நாடி யோர்ந்து, தவம்பெருக்கு நன்மதிதீ பம்மெனவே யொருபெருநூற் சமைத்தீந் தானச், சிவம்பெருக்குந் திருவாளன் சீர்த்தியா வரசாலுஞ் செப்பற் காமோ.

ஸ்ரீமத். திருநீல மேகசுவாமி யவர்களின் மாணவராகிய

முனுகப்பட்டு ஸ்ரீமத். அருளாநந்தசுவாமி

யவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

தண்மை நிலைவிளங்கித் தாரணியெ லாமோங்க
வுண்மை நெறியனைத்து மொன்றாக்கி—வண்மையுடன்
சாமிகுப்பு சாமி தருநன் மதிதீப
மேமிளிரு நூற்களுளே மிக்கு.

சென்னை. சிந்தாதிரிப்பேட்டை

ஸ்ரீமத். அங்கமுத்துச் சுவாமியவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சன்மார்க்க வாணரினச் சாமிகுப்பு சாமிமா
னன்மதிதீ பப்பெயர்நூ ளுட்டினு—னின்னிலத்தி
லெம்மதத்து ணிற்பாரு மெத்தேயத் துள்ளாருஞ்
சம்மதமாக் கொண்டிடவே தான்.

வித்துவான்-வல்லநகர்

ஸ்ரீமத். வைத்தியலிங்கம் பிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

வெய்ய விருள்கடிந்து வீட்டிற் குறியநெறி
கையிற் கனியனைய காட்டுமே—யையமறத்
தன்மதியி னூலேற்றிச் சாமிகுப்பு சாமிதரு
நன்மதிதீ பந்தா னயந்து.

ஆரணிஜாகிர் - கீழ்நகர்

ஸ்ரீமத் - வேணுகோபால நாயகரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

பாங்குடைய நல்லறஞ்சொல் பல்விளக்க நூலியற்றி
யோங்குபுகழ் கொண்டிலங்கு முத்தமனுந்—தாங்குஞ்சீர்
சாமிகுப்பு சாமிநிதஞ் சாதமிடு வோன்றாய
பாமிகுத்த பாவலன்றான் பார்த்து.

தாய்தந்தை யாதியிறை தன்பணிசெய் தல்கடையா
யாய்ந்தளிரு பானெட்டி னங்கமதா—வாய்ந்திடவே
நண்ணியவர் முத்திபெற நன்மதிதீ பப்பெயர்நூல்
பண்பினொடு சொற்றான் பரிந்து,

திருவள்ளூர், கலவலகண்ணன் செட்டியார் மத்தியதரப் பாடசாலைத்
தமிழ் உபாத்தியாயர்.

ஸ்ரீமத். ச. கந்தசாமி முதலியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

நன்மதி தீபமென நம்நாட்டார் நன்மை பெற்றுத்
துன்மதித் தாபந் துடைத்துய்யச்—சொன்மதிசேர்
சாமிகுப்பு சாமியெனுஞ் சற்குணனார் சாற்றியே
பூமியினிற் பெற்றார் புகழ்.

சென்னை R. M. S. ஆபீசில்
அசிஸ்டேண்ட் அக்கவுண்டேண்ட்

ஸ்ரீமத். வா. சிதம்பர வுடையாரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகுயிர்க் குயிராய் நிற்கு மொப்பிலா விறைவன் றன்னை
நலமிகு மளவை யானு நாடரும் பொருளென் றேதுஞ்
சலமிகு துயர நீக்குந் தருக்கவே தாந்த நூற்கள்
பலவுமே யுணரக் கற்றோன் பாவல ரேத்துங் கோமான்.

தண்ணளிச் சாமி குப்பு சாமியென் றறையுந் தூயோ
னெண்ணிலாக் கலியின் சார மினிதெடுத் தியம்ப வேண்டி
நண்ணிய கருணை யாலே நன்மதி தீப மென்னும்
புண்ணிய நூலொன் றீந்தான் புவியுளோ ரருந்த மாதோ.

ஸ்ரீமத். ஆறுமுக முதலியாரவர்களின் மாணவர்
சென்னை. சூளை, பட்டாளம்
ரா. சுப்பிரமணிய ஆசாரியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகெலாம் புகழிந்ர பீடமா பினில்வந்தோ னுண்மை சொல்வோன்
சலமிலா மெய்ஞ்ஞான வாதித்தன் சாமிகுப்பு சாமி தந்த
நலமெலாந் தந்திடுநன் மதிதீப மெனுநூலை நயந்தோர் யாருஞ்
சலமுலாங் கற்பனையைக் கடந்தேதா னுண்மைநிலை சார்கு வாரால்

சென்னை. வண்ணையம்பதி.

ஸ்ரீமத். த. பூ. முருகேச நாயகரவர்க ளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முன்பிருந்த மூதறிஞர் முடிபனைத்து முற்ருய்ந்து முறைதொ டுத்து, பன்னூலின் சிரங்கிடப்பப் பகர்ந்தனன்வெண் டளைபிழை யாப் பனுவ லான்ற, நன்மதிதீ பப்போர் நன்னூலிந் நானிலமே னல்லோர் பல்லோ, ரன்பிருந்த சாமிகுப்பு சாமியெனு மதிஞன ருட் குன்றன் னனே.

சென்னை. சிந்தாதிரிப் பேட்டை

ஸ்ரீமத். பொன்னுசாமி நாட்டாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

எளிதா வெவருந்தம் மின்புருவங் காண
வொளிதாவு நூல்யாதென் றேதின்—சுளியாத
சாமிகுப்பு சாமிவேள் சாற்றுநூ லென்பேன்யா
னுமிதனை யயந்தா னான்.

சென்னை. தண்டையார்பேட்டை

ஸ்ரீமத். ம. மாசிலாமணி கிராமணியா ரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீருலவு நன்னாட்டின் முன்னாட்டிற் றிகழ்ந்திலகு சென்னை வாழ்வா
னேருலவு திருமார்ப னெழிற்குப்பு சாமியெனு மேந்த லின்று
நாருலவு நலமுறுநன் மதிதீப நல்கினனு னல்லோர் மெச்ச
நேருலவு தமிழணங்கு களிகாட்ட வொளிகூட்ட நினைத்து மாதோ.

செந்தமிழ்க்கவி. சென்னை. வண்ணையம்பதி
ஸ்ரீமத். வி. சண்முகவேலு முதலியா ரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

நன்மதியாந் தீபமதை நாடெங்க ணும்வியக்க
தன்மதியாந் தீபந் தனைக்கொண்டு—சின்மயந்தேர்
சாமிகுப்பு சாமிவள்ளல் சாற்றினு னரிதனைப்
பூமியிடைப் பூணு தவர்.

இந்நூலாசிரியரின் பாதசேகரர்
திருவான்மியூர்
பிரசங்க சித்தாமணி. ஸ்ரீமத். த. கோவிந்தசாமிப்பிள்ளை
யவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

கல்லாருங் கற்றருங் கண்டேத்துங் கண்ணுடையான்
பொல்லா மனமாதி போக்கினவன்—பல்லோருஞ்
சாமிகுப்பு சாமியெனச் சாற்றுதிரு நாமமுளான்
சாமிகுரு வெற்கானன் றன்.

குணமெனுங்குன் றேறிக் குவலயத் தோர்கள்
குணமெனத்துங் கண்டொருங்கே கூட்டி—யணலருளா
னன்மதி தீப நறுநூ லியற்றினான்
பொன்மதியைக் கொள்ளப் புவி.

காளத்தி. இ. சிதம்பரசாமி புராணிகரவர்க ளியற்றிய

நிலைமண்டல வாசிரியப்பா.

பொன்னென மிளிரும் புதுமலர்க் கொன்றை
மின்னென மிளிரும் வேணியின் மிலைந்த
ஒப்புயர் வில்லா வுமாபதி யருளாற்
றப்புத லின்றித் தழைந்து நிலவு
மெப்புவி தன்னினு மேற்ற முற்ற
விப்புவி மாதுக் கெழின்முகம் போன்ற
செப்பருஞ் சீர்சால் சென்னை புரியினி
லப்பிறை நுதலி லணிதில கம்மென
விலகிமெய்ஞ் ஞானியர்க் கிருக்கை யாகி
யலகிலா வளங்க ளார்தாக் கொண்ட

வாணும் விபுதரும் வறிய விழையுந்
தேனும் பேட்டைத் திருநக ரதனிற்
செங்கதி ரவன்வழி திருந்த வந்த
வங்கப் பன்னவ னகமகிழ் மணியாய்
தம்மவ ரெனவே தரித்திரார்ப் புரக்கு
மம்மணி யம்மை யாமிவ் விருவரு
மாற்றுமெய்த் தவத்தி னரும்பய னாகத்
தோற்றிமுற் றவத்தாற் சுடாறி வுற்று
நித்தியா நித்திய வத்து நிலையைப்
பத்தியோ டாய்ந்தவன் பார்நசை தீர்த்தவன்
தத்துவச் சழக்கை மித்தையாக் கழித்தவன்
சித்துரு வாகித் திகழ்ந்து நிற்பவன்
நாதாந்த மேவும் போதாந்த நிலையாம்
வேதாந்தம் யாவும் வீதார்த்த மூற்று
முணா யார்க்கு முரைத்திடு நிபுணன்
புணா வுமையைப் புணர்ந்தவற் பணிவோ
னன்னிலை யதனி னலம்பெறத் திகழ்வோ
னுன்னறி வதனிற் பன்னரு மநந்தன்
வளமிகு செல்வத் தளகைக் குரிசி
லுளமகிழ் கொடையில் வளமிகு கன்னன்
நோக்கினிற் கண்ணுத னேக்குறு மதனன்
தேக்குறு வாய்மையிற் றிகழரிச் சந்திரன்
நாய்க்குத் தவிசிடு நலனேயே மான
பேய்க்கும் பிற்படு பீழை யேன்பாற்
றுயினு மிக்க தயாவினை வைத்துச்
சேயினும் மெளிதாச் சீரடி தந்தவன்
சாமி குப்பு சாமி யென்று
நேமி புகலு நாய முள்ளவ
னத்தியு ளெழுந்த வலைநுரை திவலை
யத்தியு ளடங்கிடு மாறே போலத்
தன்னு ளெழுந்த சகமுத லெவையுந்
தன்னு ளடங்குந் தகைமை தெளிந்தோ
னுதலி னுவல கணுவிரு ளகற்றக்
காதலி னன்மதி தீபங் கண்டனன்
கண்டவத் தீபக் கவர்கொழுந் தாக
விண்டனன் பல்ல மேதிகு நீதி

யத்தகு நீதியு ளாதியி லெவரும்
வத்து வணக்கம் வகையாச் செய்ய
வேண்டுமென் றுணர்த்த விளம்பியும் பாயிரங்
காண்டகு கடவுள் கழல்போற் றுநர்க்கே
தாய்ப்பா லன்பு தழைக்கு மாதலின்
வாய்ப்பா வதன்பின் வைத்துந் தாயை
தாயன் புடையார் தமக்கே தந்தைபா
னேயம் வருதலி னேர்மையா வதன்பின்
றந்தையை நிறுவியுந் தந்தையுந் தாயு
முந்தையி லுணரு முதற்றே வாதலின்
றாயுடன் றந்தை சார வைத்துந்
தாயுடன் றந்தைபால் சார்ந்தவன் பினர்க்கே
குருபாற் பரிவு கூடு மாதலி
னருகா வதன்பின் னமைத்துங் குருவை
செய்வ செய்யுந் தெருளா ரியனாற்
றெய்வ நிலைதான் றெரியவேண் டிடலா
லெய்த வமைத்து மிதற்பின் றெய்வந்
தெய்வ நெறியினைச் செகத்தி னிறுவுவோ
னாச னாதலி னன்னதன் பிறகே
யாச னமைத்து மவ்வழி யொழுகுநர்
குடிகளக் குடிகள் கோதிலா வுத்தமர்
மிடிகொளு மத்திமர் மடிமிகு மதம
ரென்று குதலா லிவரை யதன்பின்
குன்று முறையுடன் கோவையா வுரைத்து
மிவர்க ளவாவறுத் திலங்கு மகான்களாந்
தவர்க ளருளினைச் சாரவேண் டுவதென
வவர்கட் கயலே யமைத்து ஞானியை
யுவர்கள் கடாட்ச முற்ற வகந்தாம்
போலி ஞானியின் புன்மை விளங்கலின்
எல வதன்பின் போலி ஞானியை
யியைய நிறுவியு மிவரிய லுணர்ந்தோன்
றயையமை மாணவன் றூனு குதலான்
மாணவ னதன்பின் மாண்புறச் சேர்த்து
மாணவ னுயபின் மனையறங் கோட
லறநெறி யாதலி னதன்பின் மனைவியைத்
திறமுறச் செறித்துஞ் செவ்விதி னில்லற

மாற்றிப் பின்ன ரரும்பெறன் மகற்குக்
கோற்றெடி மருகியைக் கொளன்மா பாயதா
லன்னதற் கயலி லமைத்து மருகியை
நன்னய மருகி துன்னிய பின்னர்
முத்தியை விழைந்து நித்தனு ரடிக்கே
பத்தியைச் செலுத்தல் பாரமா தலினு
லீங்கிதற் கயற்சிவ பத்தி யிசைத்து
மோங்காற் பத்தி யுஞற்று வார்க்கே
யடியார் பத்தி யணேவதா லதன்மருங்
கடியார் பத்தி யணியாப் புகன்று
மன்பர்தம் பணியை யார்வமோ டுஞற்றுநர்
வன்பொருட் செருக்கை மாற்றுவ ராதலா
லதற்கயற் செல்வச் செருக்கை யணேத்து
முதற்பொருட் செருக்கை வதைத்தவர் தமக்கே
பொறுமையைச் செகுக்கும் புலனுண் டாகலாற்
பொறுமையை யதன்பின் பொலிதரப் புனேந்து
மழுக்கா றறிலரு ளணேதலா லதன்மாட்
டிழுக்கா வொழுக்க மெனேத்தினுஞ் சிறந்த
சீவகா ருண்யந் திகழச் செறித்துஞ்
சீவகா ருண்யஞ் சேரப் பெற்று
லயலவர் பொருள்வெஃ காமையெய் தலாலத
னயலமைந் திடக்கள் ளாமை யமைத்துங்
கள்ளா மைக்குணங் கைவரின் பிறன்மனை
யுள்ளா மைவரு முண்மையா லதன்பின்
பிறன்மனை நயவா மைதனேப் பிணேத்தும்
பிறன்மனை விழையாப் பெறுநெறி கூடிடின்
றூய்மைசெய் விக்கும் வாய்மை வருதலின்
வாய்மையை யதன்மருங் காக வகுத்தும்
வாய்மை யுணர்ந்துழி வாராமை யாற்சினம்
வாய்மைப் பினர்வெகு ளாமை வழுத்தியுஞ்
சினவா தவர்க்கே சீரறம் பலித்தலின்
சினவா மையினயற் செறித்துந் தரும
மறச்செய லுளாரே யாண்டா னுதலி
னறச்செயற் கருகி லாண்டான் கிளத்தியுந்
தலைவ னுதற் றகுமடி மையினு

னிலைதலி னதனைய னிகழ்த்தியு மடிமை
யடிமைக டுன்ப மகன்றிடச் செய்குநர்
கடிமையி லிறைபணி காண்குந ராகலி
னடிமை பினிறைபணி புரித லிணைத்தும்
படிமை பாறிடப் பகர்ந்த சீர்த்தி
யநந்த னுறு மறைந்திடற் கரிதேன்
முனந்தவம் புரியா மூர்க்கனென் றுரைப்பே
னொன்றிய சித்தத் துடனிருந் திந்நூல்
கன்றுத லின்றிக் கனிந்தாய் காலை
கன்ன லிரதமுக் கனியிர தந்தேன்
றென்னங் காய்ப்பாற் றேனுவின் பானெய்
கண்டு சருக்கரைக் கலந்தடு வித்து
மொண்டு பருகிடின் முதிர்சுவை தனினுமிக்
கென்னுயி ருணர்வுள மென்பு தசையெலாந்
தன்னிக ரின்றித் தழைந்தினிப் பதுவே

சேந்தமி ழ்ரத்திநகரம்-திருவன்-வல்லை-சண்முகசுந்தர முதலியார்
அவர்கள் மாணவி-பண்டிதை

ஸ்ரீமதி S. கிருஷ்ணவேணியம்மையாரியற்றிய

நேரிசை வெண்பா.

அன்னைமுத லான வறநெறிதேர்ந் துய்வதற்கு
நன்மதி தீப நமக்களித்தா—னன்னயமாய்
சற்குணனுஞ் சாமிகுப்பு சாமித் தமிழ்ப்புலவன்
நிற்குணனுக் கன்பாக நின்று.

ஷை முதலியாரவர்கள் மாணவியும் ஷை அம்மையாரவர்கள்
சகோதரியுமாகிய

ஸ்ரீமதி. த. பதுமாவதியம்மையாரியற்றிய

நேரிசை வெண்பா.

தேவுகுறள் நாலடியைச் சேர்ந்திலங்கு நீதிநெறி
மேவும் பொருளை விரிவாகப்—பூவுலகின்
சன்மவிடாய் தீர்ந்திடவே சாமிகுப்பு சாமிசொற்றான்
நன்மதிதீ பத்தை நயந்து.

ஸ்ரீ ஈசூர் சச்சிதாநந்தசுவாமி யவர்களின் மாணவர்

வேதாந்த ரத்நாகரம்

ஸ்ரீமத்-பி. ஆறுமுக முதலியா ரவர்க ளியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

நிலைமண்டல வாசிரியப்பா.

திருவளர் மருமத் தொருபெருங் கடவுளு
மருவளர் வெண்டா மறையினள் கேள்வனு
மொருவலி விடப்பா கத்தவ னிறைவனு
மளித்த லாக்க னழித்தன்மா லையவாஞ்
செயறம தாணையாற் செயத்தாம் வாளா
மேயசெம் பொருளின் மேவுமோர் பக்கத்
தில்லையெனு மாயையி லில்லையெனற் குரிய
புவியுள தகன்பாற் போந்த மக்கட்
பிறப்பே மேன்மைப் பெற்றித் தாமென
வியம்ப வியல்பே யித்தகை மக்கட்
கியைந்த தநுவோ விகபா போக
மிரண்டு மடைதற் கேற்ற கருவியா
யுற்றதெவ் வணமெனிற் பெற்றதம் வினையே
யிவ்வினைக் கேதிங் கிலைவேறு நாமே
யென்பதற் கைய மிலையே யெனினு
நஞ்சொரு பத்தை நாம்மறந் ததனு
லித்தனை விபரீ தங்கட் கிடனு
யுற்றன மென்ன வுணர்ந்துதன் னுணர்வி
னின்றில மென்ன நிறையுயிர் கலங்கிக்
காணங் களிலே கலந்த தன்மையாற்
சுகதுக் கங்களிற் சோர்வுறு கின்றன
மென்றறி கில்லா திடறுறு காலையி
லறிவின் பமெனு மங்நெறி பற்றச்
சேமமாத் திகழ்தரு செறிபல மதங்கட
மேத மகற்றி வேதவ ளவைகளா
லத்து விதத்தி னரியசித் தாந்த

மெத்திசைப் புலவரு மேற்க வியப்பிய
சங்கரா சாரியன் றனருள் பீட
நான்கதி லொன்றா நற்பீ டத்தி
னுற்றநங் குரவருள் ளோங்கு சிகாமணி
வன்பொழிந் தடுத்த வன்பர்தம் பகுதி
தெரிந்தவர்க் கிலக்கணந் தேர்தர்க் கங்கள்
சூத்திரங் கீதை யேத்துப நிடங்கண்
மாத்திரம் புகழும் மாவாக் கியங்களி
னுளபொரு ளெளிதி னுலகந் தெளிதர
சொற்சுவை யோடு சுலபமா விளங்கச்
சுவாநு பூதியிற் றேர்தரத் திருக்கு
றிருசிய மாதிய திகழ்வே தாந்த
நூற்பல நுவன்ற சால்புடைப் பிரம
பயலொன் றிலாத வறிவுரு வானோ
னீரூ ரெனும்பதி யிலக வுதித்தோன்
சச்சிதா நந்த தயாநிதி தன்பாற்
சார்ந்து சிரவணந் தகவிற் கேட்டுப்
பரிபா கம்பெறப் பரிந்தவர்க் குண்மை
யுரைக்க வுணர்ந்தின் புருதா னுகி
மகிழ்ந்தில் லறத்துமா ஞானியா விருந்தோன்
சுபேதார் பட்டம் பெற்ற திறலின
னையாக் கண்ணெனு மபிதா னத்தின
னுளமன்ன வாய்த்த ருரைக்கக் கேட்டு
னென்பு முருக வன்புரு வாகி
யடைந்தவன் சரணந் திடம்பெறப் பற்றி
நின்றன னருளின னிறைசிந் தனையி
லொன்றினன் சின்னு ளும்பரு மறியாத்
தொம்பத தத்பதத் துருதா னுகித்
தன்முகத் துளவெலாந் தாதலம் பெற்றுய
வின்னியற் பிரச மெனத்தென் மொழியி
னுண்பவர்க் கமுதென வெண்பாப் பறுவலிற்
றிரட்டி நன்மதி தீபமென் றெருறு
வியற்றிச் சென்னையி விடைவிடா தென்றும்
வேதாந் தத்தின் வேறறு பொருள்க
ளேதந் தவிர்த்தவர்க் கினிதருண் மூர்த்தியா

யிருளிரி யினனென வியங்குகோ வடிவேற்
பெயர்ப்பரு ணிதன்முன் பரிசோ தித்தே
வச்சிற் பதித்தன னவன்றிரங் கேண்மி
னெந்நகர் தானு மிந்நகர்க் கிணையில
வென்னு மாளிகை துன்னு சென்னையிற்
றேனும் பேட்டையிற் றொன்மை மரபிற்
றுற்ற குடிகளிற் பெற்ற சிறப்பினன்
பங்கமி லாத வங்கப்ப னெனுமால்
துங்கால் விரதத் துதித்த தூய்மைய
னில்லறந் தானே நல்லற மென்று
சிறுகா லையினு நெறிபிற ழாதோன்
பொறுமை சாந்தம் பொற்புறு செல்வம்
பெற்று வாழும் பெருமையிற் சிறந்தோ
னேழைகட் கன்ன மென்று மளிப்போன்
துறவோர் வரினவர் தூய்கழற் பணிவோன்
பூதி சாதனம் பொலிதரப் பூசிப்
பொன்மணி கண்டிகை பூண்டு சங்கா
னுருவென விளங்கு முத்தம சீல
னடுத்தவர் தமக்கு மகமகிழ் விக்குஞ்
சாமி குப்பு சாமிசற் குணனே.

# முகவுரை.

நிலைமண்டல வாசிரியப்பா.

பொன்னார் மேனிப் புனித சிவனார்
சுவர்க்க முதலாச் சொலுமே வுலகையும்
பிரமன் முதலாப் பிபீலிகை யீறாப்
பன்னு முயிரையும் படைத்தவ் வுயிர்கள்
தன்னென நிலவுஞ் சாட்சியா மறிவைக்
கண்ணென வுணர்ந்து கதியினை யடைய
வுபகா ரமதா யுரைத்துநால் வேத
மருணிறை நான்க தானவே தங்களைப்
பக்குவ மில்லார் பார்த்தற் கரிதென
வாகம புராண வருளிதி காசமா
வெண்ணிலா நூற்க ளியம்பினா ரன்றியும்
தப்பொன்று மில்லாச் சாந்தநால் வரையும்
வேதியர் வடிவாய் வேளாளர் வடிவா
யவனி தன்னி லவதரிப் பித்தே
யெப்பொரு ளிடத்து மெம்பிரா னிருக்கு
முண்மை தன்னை யோதுவித் தருளினா
ரவ்வழி யாலு மறிந்திடா தவர்க்கா
நாயினுங் கடையே னலமிலா வுளத்தி
னாதனா யிருந்தே நன்மதி தீபநூ
னவில்வித் தருளினார் நலமுறிந் நூலு
ளன்னை மகவினை யருளு மருமையுஞ்
சேயினை வளர்க்குஞ் செவ்விய வகையுந்
தாயினைக் காக்குந் தனயர் சிறப்பு
மாயினைப் போற்றா ரடைந்திடு துன்புந்
தந்தையான் மக்கள் தகுகல்வி பெறுதலுந்
தந்தை மகார்க்குத் தனஞ்சேர்த் தளிப்பதூஉந்
தந்தையைப் போற்றுவார் சாரு நலனு
மப்பனுக் கிடுக்க ணாற்றுவா ரிடும்பையு
மீன்றவ ருயிரா யிருக்குங் காலை
யுண்ணுதற் கொன்று முதவா தவர்க
ளிறந்தபின் கரும மிடம்பமாச் செயலு
குருவைச் சிவமாக் கொண்டடி பணிதலுந்
தெய்வ வடிவந் திறவறி வெனலு
மாசன் குடிகளை யாளு முறையுங்
குடிகள் கோல்வழி குவலயத் துறுதலு

முத்தய ருலகி லுற்றிடு திறனு
மத்திமர் மண்ணில் வதியு நிலைமையு
மதமர்கள் கொள்ளு மழிசெய லதுவு
மவத்தை மூன்றனு ளரியதன் வடிவை
யகண்ட மாக் கண்டே யகிலமுந் தானாய்
மிளிருமெய்ஞ் ஞானி மேன்மை யதுவு
மிருவென விருந்து வாவென வந்து
செப்பும் பணிகள் செவ்வே யியற்றி
யேத மொழிகளை யின்மொழி யாக்கொண்
டதட்டி யடித்த லறமென வொப்பி
யாரிய னடியை யரும்புணை யாக்கொளு
நன்மா ணவன்ற னலமிகு செயலும்
பொய்யை மெய்யெனப் புகழ்ந்து பேசி
மெய்யினைக் கேட்க விரும்பினன் போல
மெய்ய ரிடத்து மேவி யிருந்து
மெய்யெனக் குறையென மேன்மை யாய்வினாய்
நிந்தை மொழிக ளிகழ்த்தித் திரியும்
போலி மாணவன் பொல்லாங் கினையுங்
கணவனைத் தேவாக் கருதிப் பணிசெயுங்
கற்புறு மனைவியி னற்செய லதுவு
நஞ்சினை நிகர்த்த வஞ்சகி வினையு
மாமன் மாமியை மாண்புடன் போற்று
மருளுறு மருகியி னழகிய செயலும்
புன்குண மருகியின் புன்மைச் செயலுஞ்
சித்தி தருவது சிவனன் பெனலும்
பத்தரைச் சிவமெனப் பணிந்து துதித்திரு
பாதம் விளக்கிப் பதம்பல கறியுட
ஞர்வமா வூட்டு மடியார் பத்தியு
நில்லாத் திருவை நிலையெனக் கொண்டு
பொல்லாச் செயலினைப் புரிந்து வருத்துந்
தீய தான செல்வச் செருக்கும்
பிறர்சீர் கண்டு பேதுற லெய்தியுள்
புழுங்கச் செய்யும் பொறாமையின் றிறமு
மெவ்வுயி ருஞ்சிவ மென்றுளத் திங்கிக்
கட்ட மதனைக் கழறவா யில்லாப்
பட்சி விலங்கினைப் பரிவாய்க் காக்குஞ்
செவ்விய நெறியாஞ் சீவகா ருண்யமுஞ்
சிறந்த தேகந் திண்ணமாப் பெற்றுஞ்
செயத்தகு பணிகள் திறமாச் செய்து
நிதமு முண்டு நிமலனைப் போற்று
தன்னியர் பொருளை யவாவிக் கொள்வார்
கள்ள மகற்றக் கள்ளா மையுமே

வையமேத் திடப்பிறன் மனைநய வாமையுந்
தலையற மாகக் கலைபுகல் வாய்மையுஞ்
சாந்த நிலையுறத் தகுவெகு ளாமையு
மனமிலார்க் குண்டி யளிக்கத் தருமமு
மாட்களை யாடிற மறையாண் டானு
மஞ்சா தேமுன மாற்றுபா வத்தா
லேவல்செய் யாளா யிடுக்கணு றடிமையு
மன்னவ ருணை வரும்பணி புரிவோ
ரின்னல் செயாவகை யிறைபணி புரிதலு
மமைந்தவிந் நூற்பிழை யகற்றி யளித்தவன்
யாவ னெனின்யா மறைகுறுங் கேண்மோ
முந்தைப் பவத்தான் மூதறி வில்லார்
பாங்கா வுணர்ந்து பாநிலை யடையச்
செந்தமிழ் முடிபுந் திருவருட் பான்மையும்
வேத நெறியும் விமல னிருப்பும்
காரு போலக் கைம்மா றெணும
லவைதொறுஞ் சென்றுசென் றறையும் விபுத
னேநிசா லடியரை யுறவெனக் கொண்டோன்
கொடியோர் நட்பைக் கூற்றெனக் காய்வோன்
கண்ட வெவர்க்குங் கண்டென ஞானம்
விள்ள வுணர்த்தும் விமலன் மேலோ
னெவர்க்கு நல்லோ னின்றமிழ்ப் புலவ
னகண்டமாத் தன்னை யகமுறக் கண்டோ
னுலகுடல் பொய்யென வுண்மையா வறிந்தோன்
வேதாந்த தர்க்க போதக னெனவே
படிமீ தெவரும் பட்சமாப் போற்றுங்
கோவடி வேலெனுங் குருபா னுமா
லன்னவ னருண்மிக் காற்றுத விக்கிங்
கிவைவன வின்மையா லிலகுறு மன்பா
லல்லும் பகலு மவனடி பணிந்து
சொல்லும் பணியைச் சோர்வறப் புரிவனே.

இங்ஙனம்,
தே. அ. கு.



ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நம:.





# நன்மதி தீபம்.

## பாயிரம்.

### விநாயகக் கடவுள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

ஆனை முகத்தானை யன்புருவாக் கண்டேத்தி
யேனைகுறை நீக்கியே யிந்நூலிற்—றேனையொத்த
நன்னீதி யெல்லா நவின்றே னவநவமாப்
பன்னூலுஞ் சம்மதிக்கப் பார்த்து. (௧)

### சுப்பிரமணியக் கடவுள் வணக்கம்.

நால்வேதம் போற்றுகின்ற ஞானசிவ வாறுமுகா
கால்பணிவார் வன்பிறவி காய்கந்தா—மால்கொளுளம்
போக்கி யெனையெங்கும் பூரணமாக் கண்டேத்தி
யாக்கினே னிந்நூலை யாய்ந்து. (௨)

### சொரூப வணக்கம்.

பூரணமா வெங்குமே போக்குவர வற்றபொரு
ளாரணனாய் நற்சிவமாய் நானியா—யாரணமா
யங்கிங் கெனாத வறிவேத்தி நீதியெலாஞ்
சங்கையறக் கண்டளித்தேன் முன். (௩)

திருமால் வணக்கம்.

நாரா யணப்பொருளே நல்லோ ருளத்திருப்போய்
தோரா தவருள்ளிற் சேரானே—யோராத
நாயே னளித்தலிந்நா ளுவலவர் நன்றேற்கத்
தாயே வருளெனக்குத் தா. (ச)

சங்கர பகவத் பாதாசாரிய சுவாமி வணக்கம்.

உண்மைநிலை யோரா வுலகோர் மயக்கமற
வுண்மைநிலை யீதென் றுரைத்தருளி—யுண்மையிலாக்
கள்ள மதமெல்லாங் கண்டித்த சங்கரனும்
வள்ளலடி நெஞ்சே வழுத்து. (ரு)

செம்பாக்க நகரம்,

பொன்னம்பல சுவாமி வணக்கம்.

பொன்னம் பலவா புகழ்ஞான வின்கரும்பே
யென்னையீ டேற்றுவித்த வெம்மானே—முன்னை
யடியவர்தம் பத்திசெய வாளாக்கி விட்ட
வடிமுடிவி லாமுதே யாள். (சு)

பார்த்தவிட மெல்லாம் பாவடிவ மாகவே
கூர்த்த வறிவாற் குறிக்கொண்டு—பூர்த்தி
நிலையுற் றிருக்க நியமித்த தேவே
யலைவற் றிருக்க வருள். (எ)

சச்சிதானந்த சுவாமி வணக்கம்.

உலகர்பல காலஞ்செ யொப்பி றவத்தா
லிலகிருர் வந்துதித்த வெந்தாய்—மலமற்ற
ஞானசிவ சூரியனே நானியற்று மிந்நூலை
யூனமறச் செய்வா யுவந்து. (அ)

சச்சிதா நந்தஞ் சகமெல்லா மென்றுணர்த்தச்
சுத்தசச்சி தாநந்தத் தொல்பெயரை—வைத்துவந்த
சச்சிதா நந்தனெனுஞ் சற்குருவின் பொன்னடியை
யுச்சிவைத்திந் நூல்பகர்வே னோர்ந்து. (கூ)

ஐயாக்கண்ணு சுவாமி வணக்கம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கற்பனை கடந்த சோதி கருணையா லென்போல் வந்திங்
குற்பவ மாதி யில்லா வொப்பிலாச் சிவமீ யென்றென்
றற்புத வாக்கா லென்னை யாண்டரு ளையாக் கண்ணே
கற்பனை நூலெ னுது காத்தருள் செய்வாய் போற்றி. (௧௦)

## இந்நூலின் முறை.

நேரிசை வெண்பா

எங்கு நிறைந்தசிவ மேதமிலாச் சங்கரனுப்
பங்கமறத் தோன்றியே பன்மதத்தின்—சங்கையெலாம்
போக்கிநீ பிர்மமெனப் பொய்யா துரைத்தமுறை
யாக்கினே னிந்நூலை யாய்ந்து. (௧௧)

இந்நூல் செய்ததன் காரணம்.

அண்டபகி ரண்டங்கட் கப்பாலுக் கப்பாலாப்
பண்டைமறை சொற்ற பாவடிவாக்—கண்டென்னை
யானந்த மெய்தியதா லாக்கினே னிந்நூலைத்
தானறிவ தாகித் தனித்து. (௧௨)

அற்றவரீ வார்கட் கறையவிலை யிந்நூலைக்
கற்றவழி நில்லாக் கசடர்களைப்—பற்றில்லா
நீதிவழி காட்டி நிமலனுக் காளாக்க
வோதினே னென்போன்றூர்க் கோர்ந்து. (௧௩)

இந்நூலின் பெயர்.

நீதி யறியா நெறியறியா வென்மனத்தை
யாதி யறிவா மனவிலிட்டு—வேதித்து
நன்மதி தீப நவின்றேனென் போல்வார்க்குப்
பொன்னிதிபோ லிங்கே புரிந்து. (௧௪)

அவையடக்கம்.

உதிரிக்கு மண்சுமந்தோ னுள்ளத் திருக்க
வெதிரி யெனக்கில்லை யென்னு—மதிவிளங்கச்
சொற்றேனிந் நூலதனுற் றாடியார் நல்லோர்கள்
கற்றுணரார் காய்வார் கடிந்து. (௧௫)

பாயிரம் முற்றிற்று.

# நூல்.

## தாய்.

தாய்சீ ரருள்கோடு சாற்று வேனெனல்.

நேரிசை வெண்பா.

மாசிலா வன்னை மகிமைக் குணமுரைக்க
வாசிலான் றேர்வ னடியேற்கோ—மாசின்றிச்
சொல்ல வெளிதன்றுஞ் சொல்லவரு டுண்டியதால்
கல்லாதேன் செப்பலுற்றேன் கண்டு. (க)

ஆண்சேய் பிறக்க வனைதவஞ் செய்வாள்.

பொன்னோடு காணி புகழோடு வாழ்ந்தாலு
மென்னகுறை மைந்தனிலா வில்வாழ்க்கை—யென்றெண்ணி
நாதனை வேண்டி நமைப்பெற்ற வன்னைதனைக்
காதலா லன்னமிட்டுக் கா. (உ)

செல்வமெலாம் போக்கிநற் சேய்க்காத் தவம்புரிந்
தல்லும் பகலு மறஞ்செய்து—செல்வமக
னென்று பிறப்பானோ வென்றெண்ணிப் பெற்றவனை
நன்று பணிவாய் நயந்து. (ங)

ஆண்மகவு பெற்றிடுதற் கன்னை விரும்பியே
பேண்டவங்கள் செய்தாள் பெரிது—மாண்சேய்
பிறந்ததென்ற போதே பிழைசெய்யும் பந்தந்
துறந்தார்போற் காண்பாள் சுகம். (ச)

தாயார் மகவைத் தாம்பேறு மருமை.

மறந்துபெற்று ணம்முடம்பை மாதவனைப் போற்றி
யறனல்ல யாயா வசடா—மறந்து
மனநோகச் சொல்லற்க மங்கையர்சொற் கேட்டுக்
கனமாத் துதிபுரியக் கல். (ரு)

ஒருநாள் வளர்த்தகட்ட மோதவொண்ணு தாயின்
கருவிலுறு கட்டங் கணிக்க—வருவாரார்
தாய்குணத்தை நோக்கிடிலோ தந்தை யிணையாகா
ளுய்ந்துணர்வா ரீதறிவா ரார்ந்து. (சு)

நவநவமாப் பாடி நயந்துசீ ராட்டிப்
பவமகற்றுஞ் சேயுற் பவிக்கத்—தவமிருந்து
பெற்று வளர்த்தாளைப் பேய்போல வாட்டுவா
னெற்றிற்கா வானீ யியம்பு. (எ)

மாதா மகவை வளர்க்கு மருமை.

தொப்பை தளாமற் சோர்ந்துமனம் வாடாம
லெப்போது மீயெறும் பேருமை—றப்பின்றிப்
பக்கத் திருந்தென்றும் பால்கொடுத்துப் போற்றனையைத்
துக்கமுறச் செய்வாரார் சொல். (அ)

பாயும் படுக்கையுமாய்ப் பன்னோய்கொள் காலத்தி
னுயும் விரும்பாத நம்முடம்பைத்—தேயு
மனதோ டனமின்றி மாவிரத நோற்றுக்
கனமாப்போற் றன்னைதனைக் கா. (கூ)

உடம்பை வளர்த்தழகா வோர்பேர்நன் கிட்டுத்
திடம்படக் கல்வியிற் றேற்று—மடமில்லா
தன்னைதனக் கன்னமிடற் கன்பின்றி வாடுகின்றான்
தன்மனைவி சொற்கேட்பான் றான். (கo)

நாம்பிழைக்கத் தாமருந்தை நாடியுண்டு பத்தியமாய்த்
தேம்பி யழுதுபல தெய்வத்தை—யோம்பப்
பிரார்த்தனைகள் செய்தாயைப் பேணு தொழிந்தால்
நிராதரவாய் நிற்போ நிலத்து. (கக)

என்னதவஞ் செய்தோ மிவன்பிறக்க வென்றுன்னைப்
பொன்போ லெடுத்துள்ளம் பூரித்துச்—சென்னிமுத்த
மிட்டுன்னைக் காத்த வினியநற் றுய்சொல்லைத்
தட்டா தவளடியைத் தாழ். (கஉ)

பத்திநெறி காட்டிப்பின் பன்னூல் வழிகாட்டி
முத்தி பெறநம்மை முன்விட்ட—பத்தினித்தாய்
சித்த மகிழச் சிறந்த வடிதொழுவாய்
நித்தியம்பெற் றுய்ய நிலத்து. (கங)

நீபெற்ற பிள்ளைதனை நீவிழிபோற் காத்தென்று
நீபெற்ற நல்ல நிதியனைத்து—நீபெற்ற
பிள்ளைக் களிப்பதுபோற் பேயா நினையுமுன்றாய்
கள்ளமின்றிக் காத்தனளீ காண். (கச)

### மகான்களுந் தாயை வழுத்தி னாரெனல்.

சோதிவடிவாகித் துலங்குதிரு வள்ளுவனா
ராதி பகவனென வன்னையினை—யோதிமுனே
நற்குறளைப் பாடியே நாட்டினார் தாயன்பு
கற்கவெளி தாகவே கண்டு. (கரு)

அன்னைமுதற் றெய்வமென வான்றோர் புகழவ்வை
பன்னிப்பன் னிப்புகன்ற பண்பறியா—துன்னியுன்னிக்
கற்றதனா லென்பயனாங் காட்டிற்பெய் கார்போலாஞ்
செற்றமற்றிவ் வுண்மையினைத் தேர். (கசா)

துறவுநிலை யிற்சிறந்த தோமில்வெண் காடர்
மறமில்லா நெஞ்சு மயங்கித்—திறமாத்
துதித்தழுதா ரன்னைக்காச் சொன்னார்பல் பாடல்
கதித்தவகங் காரிநீ காண். (கள)

மனைவிமன நொந்தாலு மாதா வருந்தக்
கனவினிலுங் காண்பாரோ கற்றார்—மனமாண்ட
பட்டினத்தார் தாயைவிட்டுப் பாரிதனைப் பாடினரோ
துட்டகுண நெஞ்சனே சொல். (கஅ)

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டோ
ருருமை யருமையென வன்னை—பெருமைதனை
பாடிப் படித்தழுதார் பண்புறுதாய் நற்குணத்தை
யோடித் திரியுளமே யோர். (ககூ)

இராமனுந் தாய்சொலா லெய்தினன் காடெனல்.

காமமிலாச் சீராமன் கைகேசி சொற்கேட்டு
நேமமின்றிச் சென்று னெடுங்காடு—வாமமிகு
மந்தப் பலனு லசுரகுலம் வேரறுத்தான்
சிந்தைசெய்து நீயிதனைத் தேர். (உ௦)

தாய்சொலா லொருத்தியைத் தழுவின ரைவர்.

குந்தி யுரைகேட்டுக் கோதறுதி ரௌபதியை
யைந்துபேர் பங்கிட் டகமகிழ்ந்து—நிந்தையின்றி
வாழ்ந்தமை யாற்பகவான் மாறு தருள்செய்தா
ளுழ்ந்திந்த வுண்மை யறி. (உக)

சத்தியி னம்சமே தாய்வடி வம்மெனல்.

தாய்சொல்லே மந்திரமாத் தட்டாதுட் கொள்ளுவிரேல்
காய்குணங்கண் மாறக் கதியுறுவீர்—தாய்தன்னை
யாரா நினைத்தீர்க ளாதிசத்தி தானன்றோ
சீராய்ப் பணிமின்க டோர்ந்து. (உஉ)

அன்னை தானே யனைத்து மாமெனல்.

தாயே குருதெய்வந் தாயே தருமமெலாந்
தாயே தனமுதலாஞ் சம்பத்துத்—தாயே
பதவிசொலும் வேதம் பரமார்த்த ஞானந்
திதமாமிவ் வுண்மையினைத் தேர். (உங)

அன்னை யிலையே லனைத்து மிலையெனல்.

வித்தின்றி யில்லைமரம் வேதமின்றி ஞானமிலை
யத்தனின்றி யில்லை யகிலாண்ட—மொத்திவற்றைத்
தாயின்றே லின்றுந் தாணிமுத லெப்பொருளுந்
தாயுண்டே லுண்டனைத்துந் தான். (உச)

தாய்போற் குற்றந் தனைப்பொறுப் பாரிலை.

அன்னைதனைக் கோபித் தவமதித்துப் பற்பலவா
வென்னகுற்றஞ் செய்தாலு மின்புறுவா—ளன்னைபோற்
குற்றம் பொறுப்பார் குவலயத்தில் வேறெவர்தாஞ்
சற்றிதனை நோக்குட் டனித்து. (உரு)

தாய்சீர் விளக்கத் தாயுமா னுன்சிவன்.

தாய்பெருமை யானெழுதத் தாரணியி லேடில்லை
தாய்குணத்தைச் சாற்றவோர் நால்போதா—வாய்ந்தறியத்
தாயானு னெஞ்சிவன் றக்கோர் மொழிபற்றி
யோயா துளத்தே யுணர். (உசு)

தாய்க்கொப் பன்னந் தனையலா லிலையெனல்.

அன்னை தனக்குவமை யாதாமென் ருயுமிடத்
தன்னமலாற் கூற வறிவில்லை—பொன்மணியோ
மாறுபொரு ளொப்பன்று மற்றன்னைக் கன்னமுமோ
கூறி னெருபுடையொக் கும். (உஎ)

தாய்க்கொப் பாவார் தரணியி லிலையெனல்.

அன்னை தனக்குநிக ராய்ந்திடி னெங்குமிலை
முன்னைப் பெரியாரு முன்னிமுன்னி—யன்புருவாந்
தாயைப் புகழ்ந்துரைத்தார் தாரணியிற் றெய்வமென
நாயையொத்தாய் நீயிதனை நாடு. (உஅ)

தாய்பணி செய்யிற் சற்குரு கிடைப்பார்.

அய்ய மெடுத்தேனு மன்னைதனைக் காப்பாற்றிச்
செய்ய திருவடியைச் சேவித்தா—லுய்யவா
னன்பரிடங் காட்டியே யாட்கொள்ளச் செய்திடுவா
னன்மதியா லிந்நெறியை நாடு. (உகூ)

இடம்பச் செயல்விட் டன்னுளைப் போற்றெனல்.

பார்புகழ வெண்ணிப் பகட்டுவது நன்றல்ல
லூர்வணங்க வாழ்வதிலு மொன்றுமில்லை—யார்வமுட
னன்னை மகிழ வனுதினமும் வேண்டுவதந்
தன்னிப் பணிசெய்ய வோர். (௩௦)

தாய்க்குப் பிணுண்பவன் றுனே தேவெனல்.

தாய்க்கிட்டுண் ணுர்செய் தருமமெலாம் பாழாகுந்
தாய்க்கிட்டுண் ணுர்சொல்லைச் சட்டைபண்ணுந்—தாய்க்கிட்டே
புண்ணுநல் லுத்தமனை யொப்பில்லாத் தெய்வமெனக்
கண்ணுடையார் கைதொழுவார் கண்டு. (௩க)

தாயைப் பழிப்பார் தனமிழப் பாரெனல்.

நாரியென்றும் பூரியென்றும் நாய்கழுதை பேயென்றுங்
காரி யுமிழ்ந்துதைக்கக் கால்காட்டி—நேரின்
மனநோவச் செய்திடுவார் மாதாவை யந்தோ
தனமாண்டுந் துன்புறுவார் தாம். (௩௨)

தாயழ விட்டுத் தலயாத்ரை செயேலெனல்.

க்ஷேத்திரங்தோ றும்பண்பாச் சென்றுடி யுந்தீர்த்தஞ்
சாத்திரங்கள் போற்றுகின்ற தாய்தன்னை—யேத்தாக்
குருடர் குவலயத்திற் கொள்வதில்லை நன்மை
கருவகலா ரென்றுமே காண். (௩௩)

தாயன்பி லான்பூசை தாராது பயனெனல்.

அன்னைதனக் கன்னமிடா தாற்றுஞ் சிவபூசை
யென்ன பயனளிக்கு மேதமுளாய்—பன்னுங்கா
னல்லா ரிகழ்ந்திடுவார் நாதன் சிரித்திடுவான்
சொல்லார்ந்து வாழாய் துணி. (௩௪)

தாய்க்குடை நல்கா னுய்க்கோப் பானெனல்.

அன்னமுட னுடையிலா தன்னை யலையவே
யன்னமீந் தாடை யறிவையர்க்கு—மின்ன
வலங்கரித்துக் கூடி யகமகிழ்வான் பாவி
நலமறியா னுயொப்பா னுடு. (௩௫)

மனைவிசொற் கேட்டு மாதாவை வைவான்.

பெண்டி ருரைகேட்டுப் பெற்றவளை நிந்திக்கின்
றண்டம் பிடித்த நமன் சக்காத்தாற்—றண்டித்து
நாய்கழு குண்ணவுனை நன்றாகப் பங்கிடுவான்
வாய்மையிது வாகு மதி. (௩௬)

மாதாவிற் குணவிடான் மனைவியோ டுண்பான்.

எடுத்து வளர்த்ததா யேக்குற் றிருக்கத்
துடுக்காச்சொற் றேகையொடு தோய்ந்து—படுக்குமிலின்
மிட்டாய்லட் டோடு மிருகம்போ லுண்ணனன்றே
மட்டிச்சாம் ராணி மதி. (௩௭)

தாயழ மனைவி தனையலங் கரிப்பான்.

இழிந்த துணியோடு கேடுற்றாய் நிற்க
வழிமனத்துப் பாவி யரிவைக்—கொழிவின்றிப்
பார்ப்பார் மகிழப் பளபளப்பாய்ப் பட்டுடுத்திப்
பார்த்து மகிழ்வான் பரிந்து. (௩அ)

தாய்மதி கேளான் றாரந்திட் டேற்பான்.

துப்புணர்ந் தன்னைதான் றக்கபடி புத்திசொலி
னெப்பி மனமகிழா யுள்ளன்பிற்—றப்புடைய
பன்னிகோ பித்துப் பழமுறமே நாயென்றாற்
சென்னிமல ரென்றேற்பாய் சீ. (௩௯)

தாய்க்கிடான் மாமி தமர்க்கிடு வானெனல்.

தாய்க்கிட்டால் வாழ்த்திடுவாள் சாந்தமதி யுண்டாகத்
தாய்க்கிடான் றன்மாமி சந்ததிக்கு—வாய்க்கக்
கடன்பட் டழிப்பான் கதறியழு தாயை
விடம்போ லினைப்பான் வெறுத்து. (௪௰)

மாமியுனைப் பெற்றாளோ மாமன் வளர்த்தானோ
சாமி யறியநீ சத்தியஞ்செய்—காமி
வயிறு வலிக்க மகிழ்ந்தின்று டன்னை
மயிர்பிடித்து மாட்டுவதோ மாண்பு. (௪௧)

தாயி னுறவை நாயுற வெனேலெனல்.

தாயுறவு நாயுறவுஞ் சாற்றுமிடத் தொன்றென்பார்
பேயறிவு கொண்ட பெரும்பித்தர்—காயுற்ற
தீய பழக்கமிலார் செப்புவரோ விவ்வாறு
நேயமற்றாய் காண்பாய் நினைத்து. (௪௨)

தாயைப்போற் றார்பேறுந் தண்டனை கிளத்தல்.

தாயார் பசித்திருக்கத் தாரத்தோ டுண்டிருந்து
வாயாலே பற்பலவா வம்புரைப்பார்—ரோயாது
நாயாய்ப் பிறந்தலைவார் நானிலத்தோர் தாமிகழ
வாயாற் புழுக்கக்கு வார். (௪௩)

மாதா மனநோவ மண்டலத்தில் வாழ்ந்திருப்பா
ரேதாய்ப் பிறப்பாரோ விங்கறியேன்—றீதாங்
கழுதைகழு காவாரோ கண்குருடா வாரோ
வழுங்கணரா வாரோ வயர்ந்து. (சச)

சின்னஞ் சிறுவயதிற் சீரா வளர்த்ததாய்
தன்னைப்போற் றூயேற் றருமனுன்றன்—சென்னி
பிளக்க வடிப்பான் பெருநாகில் வீழ்த்தி
யளப்பி றுயர்செய்வா னூர்த்து. (சரு)

அன்னை பசித்திருக்க வாயிழையோ டுண்டையோ
மன்னி மகிழ்ந்திருக்கு மாபாவி— தன்னை
மலம்புசிக்கச் செய்து வதைத்திடுவா னேமன்
புலன்சிதறத் தண்டாற் புடைத்து. (சசு)

மழுவெடுத் தன்னை மகிமைசொல் வேனெனல்.

எந்நன்றிக் கும்மொப் பியம்பலா மன்னைசெய்
நன்றிக் குவமை நவிலவொணு—தென்றே
மழுவேந்திக் காட்டிடுவேன் மாநிலத்து ளோர்க்குப்
பழுதின்றி மாதாவைப் பற்று. (சஎ)

---

# தந்தை.

தந்தை மகிமை சாற்ற வரிதெனல்.

துப்பொப் பிலாதவருட் டந்தைகுணங் கூறுதற்கா
வப்பா குருவே யகமதிருந்—திப்போது
தந்தை யருட்குணமுந் தக்கமைந்தர் நற்குணமுஞ்
சிந்தை மகிழ்ந்துரைக்கச் செய். (சஅ)

தந்தை பிணுவர் சற்குரு வாதியோர்.

தந்தைகுரு தெய்வமெனத் தக்கசிவ ஞானிகடாஞ்
சிந்தை மிகமகிழ்ந்து செப்புரையு—ணிந்தையிலாத்
தந்தைதனை முன்னுரைத்துச் சற்குருவைத் தெய்வத்தைப்
பிந்தி யுரைத்ததிறம் பேண். (சகூ)

தந்தை தனக்குமுனே சற்குருவு மீடாகா
விந்தையிலாத் தெய்வமு மேயில்லை—தந்தைதா
னில்லாக்கா லுமெங்கே யென்னறிவோ நன்றாக
நல்லானே தந்தைபணி நாடு. (ருo)

தந்தைமைந் தற்பெறத் தவம்புரி வானெனல்.

புத்திரப் பேறு பெறவே தவஞ்செய்து
சத்திரமுங் கட்டியன தானமிட்டுப்—பத்தியுடன்
காத்தளித்த தந்தை கனையாகக் கேடுசெய்வான்
மாத்துயரங் கொள்வான் மகி. (ருக)

தந்தையே கல்வி தனயனுக் கீவான்.

உடம்பை வளர்த்திடுவா ளொப்பற்ற வன்னை
யிடம்படக் கல்விதனிற் றேற்ற—மடமில்லாத்
தந்தைக்கே பட்சமுண்டு தக்ககடன் பட்டேனும்
பந்தமறக் கற்பிப்பான் பார்த்து. (ருஉ)

சுத்தமதி போதித்துத் தூய்மையுறப் பள்ளிவைத்துச்
சித்த மகிழ்வோடு தேசிகன்பாற்—புத்திவாக்
கல்வி தனயனுக்குக் கற்பித்த தந்தையினைக்
கொல்லநினைப் பான்மகனோ கூற்று. (ருங)

பள்ளியிலே வைத்துப் பலகலையுங் கற்பிக்க
வள்ளி யளித்துப்பொன் னாரியர்க்குத்—துள்ளித்
திரிகின்ற காலந் திரியா தடக்கு
மரியதந்தைக் கென்செய்தா யாய்ந்து. (ருச)

பிதாவே சேய்க்குப் பெருந்தன மளிப்பான்.

ஈனங் கருதா திடுக்கண் பலபட்டு
மானம் வளாத்தன் மைந்தனுக்—கான
பொருடேடிக் கொண்டுவந்து போற்றுகின்ற தந்தை
யிருபாதம் போற்று னெவன். (ருரு)

நாக்கடுக்க வோடியே காசிசம் பாதித்துக்
காவ்வளர்க்க வேண்டுமெனக் காப்பாற்றிப்—பால்கொண்
டிரவும் பகலுமுனை யென்னிவளர்த் தானைச்
சிரமுறச் செய்வதென்னோ செப்பு. (ருகு)

பிதாசெலு நெறியிற் புத்திரன் செல்வான்.

தந்தைமதி மைந்தர் தமக்கென்ற துண்மையே
தந்தைதன் மைந்தர்முனே தப்பிதமா—நிந்தைதரு
பொய்யுரைப்பா னேயாயின் புத்திரனும் பொய்யுரைப்பான்
மெய்யுரைக்கின் மெய்யுரைப்பான் மிக்கு. (௫௭)

ஆனதினுற் றந்தை யறநெறியிற் றூனொழுகி
மானங் குலங்கல்வி வாய்மைநிலை—தானமொடு
சுட்டிச்சுட் டிக்காட்டிச் சுத்தமதி போதிக்கின்
மட்டியே யாகான் மகன். (௫௮)

தந்தைசெய் நன்றியைத் தகவறி வாயெனல்.

கல்விதக் தானென்றுங் கைமருவு செல்வத்தை
மல்க வளித்திட்டான் மாறின்றிப்—புல்ல
வுடம்பை வளர்த்தா னுயர்ந்தார்முன் விட்டான்
கடனறி தந்தையெனக் காண். (௫௯)

தந்தையை வருத்தித் தலஞ்செலிற் பயனிலை.

சோறுசோ றென்றழுது சோருகின்ற தந்தைக்குச்
சோறுதுணி தந்து துதியாமன்—மாறுபட்டுக்
கண்டகண்ட கோயிலெலாங் கைகுவித்துத் தெய்வத்தைத்
தொண்டுசெய்வ தாலென்னுஞ் சூழ்ந்து. (௬௦)

மாசின்றித் தந்தைசொலும் வண்மையுரை கேட்குமைந்தர்
காசிக்கேன் போதல் கழறுவீர்—பேசிடிலோ
தந்தைக் கடங்காச் சதிகார மக்கடா
நிந்தையுரை யென்பரிதை நேர்ந்து. (௬௧)

தந்தைதன் பத்தி தந்திடும் முத்தி.

தந்தையுரை தட்டினவன் சாமிபணி செய்வதெங்ஙன்
றந்தையுரை கேட்பான் றகுதிபெறுந்—தந்தை
மனமகிழப் போற்றுவான் மாசகன்று வாழ்வான்
தினம்பணிவா னெய்துமுத் தி. (௬௨)

சிவனுந் தந்தைக்குச் செய்கிறார் கருமம்

சிவன்மகவாத் தோன்றினன் செய்தவவல் லாளற்
கவன்பெருமைக் கில்லை யளவு—சிவனின்றும்
பிள்ளையென வொப்பிப் பெரிய வருணைதனிற்
கள்ளமின்றிச் செய்கருமங் காண். (௬௩)

தந்தைக் கிடானிலாள் தமர்க்கழிப் பானெனல்.

மனைவிமா மன்மாமி மைத்துனிமார் தம்மைக்
கனவு தனினுங் கருதிக்—கனமாப்பொ
னெண்ணிச் செலவழித் தேங்கவிட்டான் றந்தைதனைக்
கண்ணிழுந் தேயழுவான் காண். (௬௪)

தந்தையைப் போற்றான் றண்டனை யடைவான்.

அடித்துக்கோ பித்தே யறியாக்கா லத்து
மடிநீக்கிக் காத்தபிதா வாட—விடிபோன்ற
சொற்காட்டி யன்னமிடாத் துட்டர் தமையேமன்
பற்காட்டி யேதகர்ப்பான் பல். (௬௫)

மனையாளுந் தானுமா மைந்தரொடு கூடி
யனைதந்தை யேங்க வடித்து—நினைவாக
வுண்டுடுத்தி வாழ்கின்ற றோரா ளவன்றன்னைத்
தண்டிதண்டி யென்பான் சமன். (௬௬)

குலப்பழுது சற்றுமிலாக் குற்றமற்று டன்னை
மலமற்று வாழ மணந்து—நலமாகத்
தந்தவனை வையுஞ் சதிகார மாக்கடா
மெந்தகதி யாவாரோ விங்கு. (௬௭)

தந்தைக் குணவிட்டுத் தக்கபணி செய்யாதான்
சொந்தப் பொருளிழந்து துக்கித்துப்—பந்துக்கள்
கூப்பி டளவுங் குரங்கா விழித்திருப்பான்
சாப்பிடுதற் கன்னமின்றித் தான். (௬௮)

தெருவி லிருந்துபா தேசிபிச்சை யென்றே
யரியதந்தை கூற வடிப்போர்—நரியாய்ப்
பிறந்தலைந்து புள்ளாய்ப் பெருவலையிற் சிக்கி
யிறந்தொழிவா ருண்மையி தெண். (௬௯)

### தந்தையைப் போற்றான் சாவா னயலிடம்.

தந்தைக்குத் தப்பிழைத்தோன் றன்மக்க ளாலடிபட்
டெந்த விதத்து மிடர்ப்படுவான்—சொந்தமெனு
மில்லி லிறவா னிறப்பா னயலிடத்து (எ0)
நல்ல பணமிருந்து நம்பு.

### பிதாவினைக் காவான் பேணுவான் மனைவியை.

பொருடேடி வைத்துநற் புத்திகற் பித்த
வருளப்ப னுடைக் கழவிட்—டிருள்கொண்
டடபாவி யாயிழைக் காடை பணியீயு
நடைபிணமே யென்னுவாய் நாடு. (எக)

தந்தை யிரந்துண்ணத் தன்மனைவி யோடுண்ணு
மந்த மதியீன மாபாவி—தந்தை
மனமெரிய நீவாழ்தல் வாழ்வன்று மீளா
வினநாகஞ் சேர்வா யிசைந்து. (எஉ)

### தந்தை குளிரில் தவிக்கச்செய் வான்கதி.

குளிரில் படுத்தழக் கோதில்லாத் தந்தை
குளிரின்றி மங்கையொடு கூடித்—தளிரிலு
டுங்குமாப் பாவி சுகித்துறங்க வில்லின்றி
யேங்குவா னெக்காலு மிங்கு. (எங)

### பிதாவிடம் வழக்கிடின் பிழையுறு வானெனல்.

தந்தை யுரைவெறுத்துத் தாவென்று செல்வத்தைத்
தந்தையிடஞ் சண்டையிட்டுத் தர்க்கித்து—நிந்தை
வருமாறு செய்து வழக்கிட் டழிவான்
மருவான்றன் வாழ்நாளின் மாண்பு. (எச)

### தந்தைதாய் தொண்டே தவமெலா மாகும்.

தந்தைதாய் தம்மைத் தளர்ந்த பருவத்துத்
தந்தாடை யன்னந் தரும்பணிசெய்—தந்தமிலாத்
தெய்வம்போற் போற்றியே சீராட்டிச் சேவித்தாற்
செய்தவமெ லாமாகுந் தேர். (எரு)

# தாய் தந்தை.

பெற்றார் கருமம் பெருமைக்காச் செய்வார்.

அன்னை யுயிர்த்திருக்கு மக்காலத் தாடைநல்கா
னன்னை யிறந்தா லணியாடை—தன்னை
நடுவீட்டி னிற்படைத்து நங்கைக் கனிந்து
கெடுவான் களிப்பான் கிளர்ந்து. (எசு)

ஆடையிலா தன்னை யழுதிறந்த பின்னரந்தோ
வாடை படைக்க வகத்தெண்ணி—யாடைதனை
யன்னைக் கெனவே யரிவைக் களந்தெடுப்பா
னுன்னிநல் லாவணத்தி னுற்று. (எஎ)

இனியசிற் றுண்டிக ளீன்றவர்தா வென்றால்
கனிவொடுநல் காது கசந்து—முனிவா
னிறந்தபினன் னோர்கடமைக் கில்லிற்பல் லுண்டி
மறந்திடா மற்படைப்பான் மாடு. (எஅ)

உடம்புயி ரோடிங் குலவுகா லத்திற்
றிடமா வனைதந்தை தின்னப்—பிடியன்ன
முண்ணென் றுரையா னுயிர்போன பின்கருமம்
பண்ணுவா னூர்மெச்சப் பார்த்து. (எகூ)

மாதா பிதாவுயிராய் வாழ்நாளி லன்னமிடார்
மாதா பிதாக்கண் மரித்தபினர்த்—தீதாங்
குணத்தினு ளார்புகழக் கோடிப் பணத்தை
மணல்போ லிறைப்பார் மகிழ்ந்து. (அ0)

தயிர்ச்சாத மன்னைதந்தை தாவென்றா லீயா
னுயிர்த்திருக்குங் காலையுயி ரோடின்—றயிர்க்கலச
தானந் தருவான் சதகோடி யானாலு
மானதந்தை தாய்க்குதவா தாய். (அக)

# குரு.

குருவின் மகிமை கூறு வேனெனல்.

என்னப்பன் ஞானகுரு வெற்களித்த நல்லறிவா
லுன்ன வரிய வுயர்குருவின்—றன்பெருமை
சொல்லத் துணிந்திட்டேன் சொல்லவொணு வின்பத்தா
லெல்லையினைக் காணும லிங்கு (அ௨)

ஆன்ம தரிசன மளிப்பான் குருவெனல்.

உடலை வளர்த்திடுவா ரொப்பறுதாய் தந்தை
யுடலுண் மறைந்திருக்கு முன்னைத்—திடமாகக்
காட்டிடா ராரியனைக் கண்டுபணி செய்வாயேற்
காட்டுவா னுன்னையவன் கண்டு. (அ௩)

குருவரு ளில்லார் குருடரா வாரெனல்.

குருமார்க்க மில்லார் குருடா வலைவார்
குருமார்க்க முள்ளவரைக் கூடின்—மருணீங்கத்
தன்னாலே யோதித் ததாகார மாகவே
மன்னுவா ரென்று மகிழ்ந்து. (அ௪)

குருசிவ மென்றுணர் கோளார்சிவ ஞானம்.

குருசிவ மாக்கொண்டு கும்பிடா ருக்கு
வருமோ சிவஞான வாழ்வு—குருவைச்
சிவனயன் மால்வடிவாச் செப்புமறை கீதை
யவமகற்றி யன்னார்க்கா ளாகு. (அ௫)

ஆசா னருளிலார்க் கீனத்து மிலையெனல்.

குருவில்லான் ஞானந்தான் கூறின் மயலாங்
குருவில்லான் சொல்விடமாங் கோதில்—குருவில்லான்
றன்னை யுணரான் றருமம் புரிந்திடான்
பன்னியர்சொற் கேட்பான் பரிந்து. (அ௬)

சற்குரு புகழைச் சாற்ற லரிதெனல்

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டோர்
பெருமை யளவிட்டுப் பேசப்—பெரியா

ரறியேமென் பாரே லடியேனெவ் வாறு
பொறிகண் டுரைப்பேன் புகழ்ந்து. (அஎ)

சுருதிக்கு மகான்சீர் சொலற்கரி தாமெனல்.

மனவாக்கிற் கெட்டா மறைப்பொருளாய் நின்ற
மனமற்ற ஞானி மகிமை—யுனற்குச்
சலித்த தெனின்வேதஞ் சார்போத னோரான்
மலியுநிட் காமமலான் மற்று. (அஅ)

---

# தெய்வம்.

தேசிக னருளாற் றெய்வ நிலைசொலல்.

முத்தமிழைக் கற்றோரு முத்தர்களுந் தாமிருக்கச்
சித்தசுத்தி யில்லாச் சிறுநாயேன்—பத்தருக்குச்
சித்திமுத்தி யீந்தருளுந் தெய்வநிலை கூறுகின்றேன்
நித்தன் குருவருளா னேர்ந்து. (அகூ)

தெய்வநிலை யாழத்தைத் தேர்ந்தபா ஞானியலா
லய்யமற மற்றோ ரறிவிக்கார்—செய்ய
குருவரு ளாற்கண்டு கூறமுன் வந்தேன்
றிருவருட் பாங்கினுற் றேர்ந்து. (கூ0)

தெய்வமி லாமதமுந் தெய்வமி லாச்சகமுந்
தெய்வமி லாதருக்கன் றிங்களிலை—தெய்வந்தா
னில்லையென் பாருக்கிதமாவிந் நூலதனிற்
சொல்லினேன் றெய்வநிலை சூழ்ந்து. (கூக)

தேசிக னருளாற் றெரிந்தேன் றேவெனல்

தெய்வ மிருக்குமிடந் தேடித் திரிந்தலைந்தேன்
றெய்வநிலை யின்னதெனத் தேசிகனு—லய்யமறக்
கண்டேன் புலவர் கருதுதெய்வம் யானெனவுட்
கொண்டேன் மகிழ்ந்தேன் குளிர்ந்து. (கூஉ

### சிவனு முணர்வையே தெய்வமேன் றுனேனல்.

ஆதியந்த மில்லா வறிவேநற் றெய்வமெனக்
கோதில்லா வீசன் குருந்தடியி—லோதினனற்
றன்னைத் தவிரத் தனித்தெய்வ மில்லையென
வுன்னுட்பார் மாணு வுவந்து. (கூ௩)

சிவஞான போதஞ் சிவன்காத்திற் றுங்கித்
தவவாத வூரர் தமக்குச்—சிவமாகும்
போதமே நீயென்று போதித் தருள்செய்தான்
காதலுட னன்மாணு காண். (கூச)

துங்க பரஞான தூய வசிட்டமுனி
செங்கைமழு வேந்துஞ் சிவனைப்பார்த்—திங்குன்னைப்
பூசிக்குந் தன்மை புகலெனக் கென்னவா
னேசித் துரைப்பா னெகிழ்ந்து. (கூரு)

நினைப்பைவச மாக்கு நிமல வசிட்டா
வனைத்தான பூசையினு மான்ம—நினைப்பாக
வங்கஞ் சுடுத லமலமா பூசையென்று
னிங்கெவரு மீடேற வே. (கூசா)

வினைத்தேகந் தன்னை விரும்பியா னென்னே
லுனையறியில் யானங் கொளிர்வே—னெனைத்தான
பூசையினு மேலான பூசையிது வேயாகு
மாசையறுத் தார்க்கேயீ தாம். (கூஎ)

### அரனரி யுணர்வையே யறைந்தார் தேவேன.

சனகாதி நால்வர் தமக்கர்ச் சுனர்க்கு
மனமாண் டிருக்க வகுத்துற்—பனமாகாப்
பூரணமாந் தெய்வநீர் புன்மைவிட்டுக் காண்மினென்றார்
நாரணர்முக் கண்ணர் நயந்து. (கூஅ)

### முருகனு முணர்வையே முதற்போரு ளேன்றுன்.

குட்டிப் பிரமனுக்குக் கூறிப் பிரணவத்தின்
மட்டி லறிவுருவா மாப்பொருளைச்—சுட்டியே

யிட்டதெய்வ நீயென் றியம்பினா னம்முருகன்
மட்டிக் குணத்தாய் மதி. (௯௯)

பெரியா ரறிவையே பேசினார் தேவென.

தத்தாத் திரயன் றகுபிரமன் முத்தையன்
தத்துவரா யன்சனகன் சங்ரகுரு—வித்தகஞ்சே
ரிந்திரபீ டத்தாசா மெந்தைகா பாத்ரிவர்
முந்தறிவே தெய்வமென்றார் முன். (௧௦௦)

சிதம்பர சாமி திகழ்சாந்த லிங்க
னிதஞ்சேர் குமாரதே வென்பார்—விதமகன்ற
தன்னறிவே தெய்வமெனத் தாரணியோர் தாமுணர
முன்னுரைத்தார் தந்நூலின் முன். (௧௦௧)

தண்ணிறைந்த செல்வத்தைக் காறியுமிழ்ந் தேவந்து
மண்ணின் மதிக்க மயக்கமற் றெண்ணில்லாப்
பாக்கடமைப் பாடிப் பாவறிவே தெய்வமென்றார்
மாப்பெரிய பட்டினத்தார் மற்று. (௧௦௨)

குருமொழியை யேயிலக்காக் கொண்டுமுனற் சேந்தர்
பெருவிறகை விற்றுமாப் பெற்று—மருவுணவாச்
செய்தடியார்க் கூட்டிமுன் சேடத்தைப் பின்னுண்டு
தெய்வமுணர் வென்றுணர்ந்தார் தேர்ந்து. (௧௦௩)

அறிவான தெய்வமே யண்டமெலா மென்னக்
குறியகன்ற வுண்மைநிலை கூடிப்—பிறிவகன்ற
தாயுமா னார்தாஞ் சகமுய்யத் தாமுய்ய
வேயுமா சொற்றாரீ தெண். (௧௦௪)

அழுதமு தானந்த மாகத்தற் கண்ட
வழுவில்லா நற்றாயு மானார்—பழுதில்
சனகன் சுகன்வியா சன்னறிவே தேவா
மனமாரக் கண்டுரைத்தார் மற்று. (௧௦௫)

பற்பல தேவாப் பகர்த லறிவையே.

ஆறுமுக னீச்சுவா னானைமுக னம்பிகையாக்
கூறுமிவ ரெல்லாங் குணியறிவே—தேறி

னறிவே யனைத்துமா மாதலினு லென்று
மறிவேமெய்த் தெய்வ மறி. (க0கூ)

அறிவைத்தே வாக்கொளி னடைபய னிவையெனல்.

காலபய நீக்குங் கசடறுக்கு மால்போக்குஞ்
சீலமெலாஞ் சேர்க்குஞ் சிவமாக்கும்—வாலறிவை
யுள்ளபடி நல்லா ருரைத்த நெறிசென்று
கள்ளமனம் விட்டுணர்ந்தக் கால். (க0எ)

உணர்வை யுணரு முபாய மீதேனல்.

வாயுவாய் வானனலாய் மற்றவையா யுட்பொருளா
யாயுஞ் சிவமா யமாறிவைக்—காயு
மனமற்றார் காண்பார் மயக்கமற்று வாழ்வார்
மனவயமா னார்காணர் வாய்ந்து. (க0அ)

மருள்கொண்டார் காணர் மறைப்பொருளாந் தன்னை
யருள்கொண்டா ருள்ளே யறிவா—யிருளி
லெடுப்பதரி தெப்பொருளு மெண்கணிருந் தாலு
நடுக்கமறு தீபமன்றி நன்கு. (க0கூ)

அய்யோ புலவீ ரகண்ட பரவெளியைச்
செய்ய வறிவான தெய்வத்தை—வெய்ய
நினைவற்றுச் சற்றேனு நின்றறியா தந்தோ
கனமோகங் கொண்டீர் கதித்து. (கக0)

உண்மையாய்த் தம்வடிவை யோரா துணர்வில்லார்
மண்மதிக்க மாறுக மான்மனத்தா—லுண்மை
தனித்திருந்து பாராமற் றர்க்க மிடுவார்
தனித்தெய்வம் வேறென்பார் தாம். (ககக)

அறிவான தெய்வமா வாக்கைநினை வற்றார்
பிறிவற்றென் றுகப் பிறங்கிக்—குறியின்றிக்
கண்டுரைத்தார் தம்மறிவே கைகுவிக்குந் தெய்வமெனப்
பண்டைமறை சம்மதிக்கப் பார்த்து. (ககஉ)

காதலற்று நல்லறிவைக் கண்டதுவாய் நில்லாது
காதலுற்று வீணுகக் கண்டவிடம்—பேத

மனமுடனே யேமிக மாறுபட்டுத் தெய்வ
முனவறியா தற்றீர்தன் புள். (௧௧௩.)

எல்லாரு மிவ்வறிவோ வேகமனத் தார்க்கொளிரும்
பொல்லா மனத்திரையைப் போக்கினாற்—சொல்லார்ந்த
தெய்வ முணர்வே திருமறையுஞ் சொற்றதிதே
மய்யற் றறிவீர் மதித்து. (௧௧௪)

தெய்வ முணர்த்துஞ் செய்யநூ லிவையெனல்.

ஈதைவா சிட்டங் கிளர்ஞானக் கைவல்யஞ்
சூதை யொழிபிர்ம சூத்திரகன்—மேதைதரு
சுத்தமா நூல்கள் சுகசொருபத் தெய்வத்தை
மத்தமறக் காட்டு மதி. (௧௧௫)

செய்யநூற் கற்றோன் தெய்வ முணர்த்துவான்.

அற்பநூல் கற்றுள்ள வாரியனைக் கூடினாற்
பற்பல தெய்வம் பகர்கிற்பா—னற்பவமி
றெய்வமாத் தன்னைத் தெளிந்தவனைக் கூடினா
னய்யுறிலை காட்டிடுவா னோர். (௧௧௬)

உண்மைத் தெய்வ முணரா ருளறுவார்.

உள்ளபடி தெய்வநிலை யுத்தமர்பாற் கேளாது
கள்ளர்சொலக் கேட்டுக் கடைப்பிடிப்பா—ருள்ளம்போன்
முன்னுரைக்குப் பின்னே முரணு மொழிந்தழிவார்
சன்னிநோய் கொண்டவர்போற் றாம். (௧௧௭)

கற்பனை கோள்வார் கதியடை யாரேனல்.

கனிந்த கனியிருக்கக் காயருந்து வார்போ
லினியபர தெய்வத்தை யேத்தாய்—முனிவுதரு
கற்பனையைத் தெய்வமெனக் கண்டு பணிகின்றாய்
நற்பயனை யென்றடைவாய் நாடு. (௧௧௮)

அய்யோ புலவீ ரறிவாமெய்த் தெய்வங்கண்
டுய்யா தவமாக வூறூா—நய்யவே
கால்கடுக்க வேயோடிக் கண்ணிழந்து தெய்வத்தை
மால்கொண்டு போற்றுவதோ மாண்பு. (௧௧௯)

தெய்வம் பலவல தேரினேன் றுமெனல்.

பிரமன் சிவன்மால் பிராந்தியலா வில்லை
பிரமன் சிவன்மால் பிரியார்—பரமாந்
தொழிறன்னை முன்னிட்டுச் சொற்றனர்மூன் றாக
வழிமனத்தா ரீதறியா ராய்ந்து. (௧௨௦)

சத்திசிவன் வேழமுகன் சண்முகன்மால் வேறென்பார்
நித்தனு மாரியனை நேசிக்கார்—பத்தியுறச்
சொற்றதலால் வேறில்லை சோதிப்பீர் தன்னேட்டிற்
கற்றுணர்ந்தார் தம்மைமிகக் கண்டு. (௧௨௧

குணக்கில்லாத் தெய்வங் குசடர்க் கறைந்தார்
பிணக்கில்லா ஞானப் பெரியா—ரிணக்கமா
வுத்தமர்க ளிவ்வுளவை யோர்ந்திடுவார் மற்றவர்தா
மெத்திறத்துங் காணா ரிசைந்து. (௧௨௨)

பற்பல தெய்வம் பகர்கருத் திதுவெனல்.

குறங்குமன நிற்கக் கருதித்தெய் வங்கள்
பிறங்கு கருமம் பிரித்துத்—திறமாக
நின்றுதனைக் கண்டு நிராமய மாங்குணக்
குன்றேறி னார்வகுத்தார் கூர்ந்து. (௧௨௩)

அறிவையறி யாதார்க் கனந்ததெய் வங்கள்
பொறிவாயி லைந்தவித்த புண்ய—ரறிவின்றன்
பக்குவத்தை நோக்கிப் பகர்ந்தா ரருளாலெத்
திக்கினுந் தெய்வமொன்றே தேர். (௧௨௪)

தான்சித் தெனும்வரை சாமிதோன் றுதெனல்.

அன்னியமாத் தெய்வ மவாவுற்றுத் தேடளவுங்
கன்னியர்த மின்பம்போற் காணுமா—லுன்னுள்ளே
வத்துநிலை காட்டா வரைபோனாற் கற்றுமுஞ்
சித்துத்தா னென்னுந் தேர்ந்து. (௧௨௫)

என்னைக் கண்டபி னின்புற் றேனெனல்.

அகண்ட வறிவாய வாநந்தத் தேவை
யிகபரமெ லாமாய வென்னைத்—தகவாகக்
கண்டு சுகிக்கின்றேன் கண்ணாலயா னிச்சுகத்தைக்
கொண்டு மகிழ்வீர் குறித்து. (கஉசு)

சுத்தாதி யோடு தனுகரண சீவன்முத
லெத்தாலுந் தாக்காத வென்வடிவைச்—சுத்தமாந்
தெய்வமெனக் கண்டு இருக்கு வடிவானேன்
பொய்த்தெய்வம் போற்றேன் புகழ்ந்து. (கஉஎ)

அரனரி யுரைக்கினு மறிவலாற் கோளேனெனல்.

ஆரணத்திற் கொவ்வா தறையும்பொய்த் தெய்வத்தைக்
காரணமாக் கொண்டேற்கோங் கைகுவியோ—நாரணனோ
டாதிசிவன் சொற்றாலு மாமோதிக் கோமேயாஞ்
சோதிவெளி யானதினாற் சூழ்ந்து. (கஉஅ)

என்கடன் றன்னை யியம்பி னேனெனல்.

அள்ளக் குறையாத வாநந்த வாமுதை
யுள்ளபடி யுண்ட வுவகையால்—விள்ளவே
சொன்னபடி யோர்வார்தாந் தூயசிவந் தாமாகப்
பின்னமின்றி வாழ்வர் பெரிது. (கஉகூ)

ஆனதினாற் கற்றவரே யன்பறிவைத் தெய்வமென
வூனமறக் கண்டா லுணர்வாவீ—ரினச்
சுருதிசொலா திவ்வுளவைச் சொன்னே னருளாற்
கருதுவதீ தங்கள் கடன். (கஙo)

ஆசையறக் காம லநந்தனால் கற்றாலுங்
காசு தனையே கருதுகின்ற—வேசைதனை
யொத்தவிபு நெஞ்ச ருணர்வாரோ வெங்குநிறை
சத்தவறி வாந்தேவைச் சூழ்ந்து. (கஙக)

உடலற் றுயிற் றுலகநோக் கற்றுத்
திடமுற் றுணாவல்ல தேவை—மடமைமிக்
கய்யோ மதிமயங்கி யங்குமிங்குந் தேடியே
மெய்வருந்து கின்றார் மிக. (கௌ௨)

தெய்வ நிலையைத் தெரிந்தார் வாழ்திறம்.

அகண்ட வமல வறிவாந்தெய் வத்தைச்
சுகவடிவாய்க் கண்டதனாற் சோக—மிகலின்றி
யெத்தொழிலுஞ் செய்கின்றா ரேதமெல் லாமொழித்தார்
புத்திமயக் கின்றிப் புரிந்து. (கௌ௩)

முன்மூன் றுகத்தினு முத்தியெய் தியநெறி.

தேகபல மிக்காந் திறத்தான்முன் மூன்றுகத்தோர்
சோகமுடன் பஞ்சாக்னி சூழநடு—வாகநின்று
கட்டம் பலவடைந்து கண்டு களித்தார்க
ளிட்டதெய்வ வீச்சுரனை யே. (கௌ௪)

கலியினின் முத்தி கணத்தினி லுறுமெனல்.

தேகபல மில்லையெனத் தேர்ந்திக் கலியுகத்தில்
யோகபலன் றன்னாலே யுத்தமர்கள்—மோகமற்றுக்
கண்டுஞா னத்தாற் கணத்திற் சிவமறிய
விண்டா ருலகுய்ய வே. (கௌ௫)

ஒருகணத்தி னிக்கலியி லுண்மைத்தெய் வத்தைத்
தெருள்வடிவாக் கண்டு தெளியாய்—மருள்கொண்டு
தேகாதி நாட்டத்தாற் றேடுகின்றாய் தெய்வத்தை
வாகாகா தீது மதி. (கௌ௬)

உத்தம ராதியர்க் குரியதே விளம்பல்.

உத்தமர்க்குத் தெய்வந்தா னெப்பில்லா வீச்சுரனே
மத்திமர்க்குத் தெய்வ மனம்போலாம்—புத்தியின்றி
யிட்டம்போற் கோடிப்பா ரெவ்வுயிருங் கொன்றுண்பார்
துட்டவத மர்க்குடம்பே சூர். (கௌ௭)

காட்டேரி காத்தான் கறுப்ப னிருசியுடன்
வீட்டுமுனி காளி வெறிவீரன்—நாட்டிவரைக்
கும்பிட் டழைப்பார் குலதெய்வ மென்றிழிஞர்
தம்பட்டம் பம்பைகொண்டு தாம். (கஙஅ)

தெய்வமி யாதெனவே தேர்ந்தவர்பாற் கேட்டுணர்ந்து
தெய்வ நிலைதன்னைத் தேராதார்—பொய்யான
பாவாடை ராயன் பகர்மாட னுமிவரைத்
தேவாகக் கொள்வார் திகைத்து. (கஙகூ)

குட்டிச்சாத் தான்பேய் குடிகார னுமிருளன்
தொட்டியச்சின் னன்காளி தூர்க்கையம்மை--யொட்டிவரும்
பூதங் குளுமாயி போரண்ண மார்கடமை
யேதமுளார் போற்றுகின்றா ரிங்கு. (கச0)

## அரசன்.

### நீதி மன்ன னெறியினைக் கிளத்தல்.

புனிதவுரு வாமன்னன் பொற்பாகப் பூணு
மினிதான பூடணமே தென்னின்—முனியா
மழைபோற் குடிகள்பான் மாறா வருளே
விழையணிய தாமால் விரும்பு. (கசக)

புண்ணியமெ லாந்திரண்டு பூதலத்தை யாள்கோவாய்
நண்ணிப் பிறக்குமென நால்வேதந்—திண்ணமாச்
சொற்றதுண்மை யாதலினாற் றொல்லையறக் காக்கின்ற
கொற்றவன்றன் சொற்றநெறி கொள். (கசஉ)

ஈசனுக்கு மன்ன னிணையாவா னெங்கெண்ணி
லீசன்போல் யார்க்கு மிதமேசெய்—தாசின்றிப்
காப்பதா னீதிசெய் காவலன்றன் கட்டளையை
நீப்பவர்துன் பேற்பார் நிலத்து. (கசங)

அழுஞ்சேய்க் கிரங்கு மனைபோற் குடிபால்
வழுவா திரங்கிவாழ் மன்னர்—பழுதுறார்
சேனைபலம் வேண்டார் திருவருளே முன்னிநின்
றுணவெலாஞ் செய்யு மவர்க்கு. (கசச)

குடியிடத் தன்புடைய குற்றமில்வேந் தூக்குக்
குடியே படையாக் குவியு—முடிதரித்த
வேற்றரசும் வந்தெதிர்க்கா மேவிடினும் வெற்றியுறுன்
சேற்றினட்ட கம்பமொப்பான் றேர். (கசரு)

கோல்கோணி னற்குடியுங் கோணுமே வேற்றரசுங்
கால்பேர்த்து வந்துபல கட்டஞ்செய்—தால்போ
றழைத்தவரை யுங்கெடுக்குந் தாண்டிப்போ நீதி
மழைபொழியா கிழா மதி. (கசசு)

தீங்கிழைப்பார் தம்மைச் சிறைசெய்ய வெந்நாளும்
பாங்காகப் பாவிமக்கள் பார்த்தஞ்ச—வோங்கமுறை
போலீசுடனே புலிபோன்ற சேவகரை
வேலியென வைத்தனன்மன் மிக்கு. (கசஎ)

---

# குடிகள்.

## குடிகணெறியைக் குறிப்பிட் டுரைத்தல்.

அரசன்பு செய்தா லரன்பாலன் புண்டா
மாசன்பு செய்யா ரழிவ—ராசனே
யீசனு வானு லிலகிவ் வுலகினுக்குப்
பாசமுட னன்னவன்சொற் பற்று. (கசஅ)

அரசன்சீ ராணைக் கடங்கி நடத்தல்
வரமென் றறிஞர் வகுத்தார்—திரமாகத்
தெய்வம்போ லுட்கொண்டு தீங்கிழைக்கா தன்னவனுக்
குய்யுநெறி செல்வார்க்கா ரொப்பு. (கசகூ)

தந்தைபோற் கோமகனைச் சந்ததமு மார்வமுடன்
சிந்தித் தவனன்பாய்ச் செப்புவண—முந்த
வொழுகுவதே நற்குடிகட் குற்றநெறி யாகும்
வழுவினுற் கேடு வரும். (கரு0)

செங்கோலின் முன்னென்றுஞ் செப்புவதற் கொன்றில்லை
யெங்குமா சாணை யிலகுவதா—லிங்கவனைப்
போற்றிப் பணிந்து புகழுற்று வாழ்வதுவே
யேற்ற செயலாகு மே. (கருக)

அாசாணை தேவாணை யற்பமுற்றட் டாதார்
ரிமா நெறியிற் றிகழ்வார்—பாசிவனைப்
பாங்காத் துதிபுரிவார் பாவத்திற் கஞ்சிடுவார்
நீங்காச் சுகமுறுவார் நேர்ந்து. (கருஉ)

அாசு னியமித்த வாணை கடக்குந்
திாவறிவி லார்தம்மைச் சீறி—மருளப்
பிடித்துமான் றத்திற் பிழைகாட்டித் தண்டித்
திடிப்பரே சேவகர்க ளே. (கருங)

விதிவிலக்குக் கூறுகின்ற வேத மொழியை
யதிபிரிய மாகவா யாமன்—மதிகெட்டுக்
கண்டதே காட்சியெனக் கண்டபடி தீமைசெய்வா
ருண்ணவன மற்றலவா ரோய்ந்து. (கருச)

விலக்கே விதியா வெறுதுசெய் வாரை
விலக்கறப் பற்றியே வீர்—கலக்கமுறத்
தள்ளி யடிக்கத் தயங்கியமு தாவென்பார்
வின்னும்வா யின்றி விரைந்து. (கருரு)

விதியா எடவார் வெகுண்டுசண் டையிட்டு
மதியார்சி யாயமன்றின் மன்னி—மதியோர்
பதைபதைக்கப் போடும் பயனைக் கொடுத்து
வதையுறுவார் நாளு மலிந்து. (கருசு)

தீயரிடங் கூடளவுந் திக்குணங்க ளேயர்குந்
தூயரிடங் கூடிடிலோ தூமதியாந்—தீயவர்தா
மில்லாக்காற் போலீ செழிற்கோர்ட்டுச் சேவகர்க
ளில்லை யுலகத்தி லே. (கருஎ)

## உத்தமர்.

உத்தம ருடைய வொழுக்கங் கூறல்.

உத்தமா யுள்ளார்க ளொப்பில்லாத் தம்மறிவைச்
சித்தநிலை தாண்டித் தெரிசிப்பார்—சுத்தசிவன்
வேறுள்ளா னென்றெண்ணார் வேதாதி சம்மதிக்க
வாறுநிலை நிற்பா ரறிந்து. (கருஅ)

அதிகமா வுண்டுறங்கா ராவலுற்றுச் சீரு
ரதிகமாக் கற்றூர்போ லாடார்—மதிகெட்டு
முன்னொன் றுஞ் சொல்லார் முதியோர் கழகத்திற்
பின்னிருப்பா ரான்றோர் பிரிந்து. (கருகூ)

துஞ்ச றமக்குளதாத் துக்கமுற் றேகலங்கா
ரெஞ்ஞான்றுந் தம்மிலே யின்புறுவார்—கஞ்சவிலைத்
தண்ணீர்போற் கூடிச் சகத்தோடு வாழ்ந்திடுவா
ருண்ணீர்மை நீங்காதோ ருற்று. (கசுo)

## மத்திமர்.

### மத்திமர் நடையை வகுத்துக் கூறல்.

மத்திமா யுள்ளவர்தா மாமிசத்தோ டேமதுவைச்
சித்தமகிழ்ந் துண்டு சிவனில்லைச்—சத்தியமா
வென்றுரைத்து வாதுபுரிந் தெப்போதுந் தர்க்கிப்பார்
நன்றிசெயார் நாளு நயந்து. (கசுக)

## அதமர்.

### அதமர்கள் செய்யு மழிசெயல் கூறல்.

அதமரா வார்க ளனுதினம்பல் லோரை
மதயானை போல மருட்டி—நிதமுங்
களவுசெய்து சீவிப்பார் காதல்வலை வீழ்வா
ரளறிடைதப் பாதாழ்கு வார். (கசுஉ)

அதமர்க்குத் தெய்வமில்லை யன்புண்மை யில்லை
யதம ரறங்கடமை யாற்று—ரதமர்செய்ந்
நன்றிம றந்திடுவார் நல்லுரையென் றுங்கேளார்
தன்யரிவ ராவதெங்ஙன் சாற்று. (கசுஙு)

பொய்த்தெய்வம் போற்றிடுவார் புள்ளா டெருமைபன்றி
முத்தர் வெறுத்துரைக்க மூடத்தாற்—சித்த
மகிழ்ந்துகொன் றானுண்பார் வன்சுற்றஞ் சூழச்
சுகமெங்ங னுற்றிடுவார் சொல். (கசுச)

நல்லறிஞர் நன்கறிவர் ஞானி நடைதன்னைப்
புல்ல ரறிவதெங்ஙன் புன்மதியில்—கல்லா
மனத்தார் மகிமையிலை மாதவர்பா லென்றே
சினத்தா லழிவர் நகைத்து. (கசுரு)

மனதின் றிடக்கல்லார் மாதரொண நீக்கார்
தினமுலகா வெம்பித் திரிவார்—வனம்வாழ்
மிருகத்தோ டொப்பாவார் மேலோரைக் கண்டு
பெருகருள்பெற் றுய்வதெங்ஙன் பேசு. (கசுசு)

நல்லார் சபைநடுவே நாணமற்றுச் சென்றிடுவார்
நல்லாரைக் கண்டா னகைத்திடுவார்—நல்லார்தா
முண்டுடுத்தி வாழ்வரோ வோகோகோ வென்றிகழ்வார்
கண்ணறைய ராவார் கதித்து. (கசுஎ)

நல்லா ரிருக்குமிட நாட்டினுக் கப்புறமே
நல்லார்கட் கில்ல நடுக்காடே—நல்லார்
தொழில்புரிவ தில்லையெனச் சொல்லிப் பழிப்பா
ரிழியதம மாக்க ளிசைந்து. (கசுஅ)

நன்னாள் விரதமிலை நல்லீசன் கர்மமிலை
பொன்னே யழியாப் பொருளாகு—மென்றெண்ணி
யுண்டுறங்கி வீணே யொழிப்பார்க ளூட்கடமைச்
சண்ட வதமர் தனித்து. (கசுக)

கூடத்தி பணிசெய்வார் கொண்டபெண்டை விட்டிடுவா
ராத்திரமாப் பேசி யகங்கரிப்பா—ரேத்திடே
நல்லாரை வந்திக்கார் நாடிகழத் திங்கிழைப்பார்
பொல்லா வதமர் புகைந்து. (கஎ௦)

காலை யெழுந்திரார் கால்கை முகங்கழுவி
நாலை யடக்கி நடுநில்லா—ரோலை
நமனு லனுப்பளவு நல்லார்சொற் கேளா
ரமா வதம ரழன்று. (கஎக)

நல்லார்குற் றேவல்செயார் நங்கையர்க்குத் தொண்டுசெய்வார்
பொல்லாரைக் காணிற் புகழ்ந்துரைப்பார்—பொல்லாக்
கொலைபுரிவா ருணுண்பார் கோட்சொல்லே கொள்வா
ரலையூச னோரதம ரார்த்து. (கஎஉ)

பணிசெய்தா றுண்ணார் படைகொண் டிருப்பார்
துணிவோடு பொய்ம்மொழிகள் சொல்வார்—பணிவாக
நன்மதியி னைக்கேளார் நல்லார் பகைகொள்வார்
புன்மதியைக் கொள்வதமர் பொய்த்து. (கஎ௩)

அற்றார்கட் கன்னமிடா ராகமறா லாய்ந்திடா
ருற்றாரை வைவா ருதவிசெயார்—கற்றாரைக்
கண்டால் வெறுத்திடுவார் காமன் கதைபடிப்பார்
சண்ட னிகாதமர் தாம். (கஎ௪)

நீதிநெறி யோரார மனீளப்ப சங்கிப்பா
ராதிசிவா வென்றே யகத்தெண்ணார்—சாதிகுலம்
வேறுபிரித் துப்புகல்வார் வேதத் துளவறியார்
சோறுநல் காவதமர் சூழ்ந்து. (கஎ௫)

## ஞானி.

அறிஞர் மகிமையை யறியா துலகேனல்.

மலவுடலு மென்னு மடையாறி வாரோ
மலமற்ற சான்றோர்தம் மாண்பை—மலமிகலாற்
சீறி யிகழ்வார்கள் சித்தாதி யில்லையென
மாறி னாகுறுவார் மாண்டு. (கஎ௬)

உலகர்போன் ஞானிக ளுலாவு வாரேனல்.

மாதரோ டுற்றுலு மாபோகந் துய்த்தாலுங்
கோதற்ற ஞானமாங் குன்றுற்றோர்—பேதமற்ற
சாதனையை விட்டகலார் சாட்சியா யேயிருப்பார்
காதலினை விட்டே களித்து. (கஎஎ)

அல்லலுற் ருர்போ லபிநயிப்பா ரல்லாம
லல்லன்மெய்ஞ் ஞானி யடைவதில்லை—தொல்லை
வினைசான்ரு வார்க்கே விளங்குமிவ் வுண்மை
வினைவயத்தார் காணார் விழைந்து. (கஎஅ)

சித்தும் புரிவார் செயலற்றுந் தாமிருப்பா
ரத்தன்ருன் வேறளரு வர்ச்சிப்பார்—செத்தார்க்
கழுவார் களிப்பார்க ளாளுஞ் சற்றும்
பழுதுருர் ஞானிகடாம் பார். (கஎகூ)

பிரம ஞானியே பெரியரா வாரெனல்.

வயதிற் பெரியவனு வாய்மைநூற் கற்றுஞ்
சுயவறிவைக் காணுன் றுரோகி—வயதிற்
பெரியன் பெரியனல பீடாரு ஞானப்
பெரியன் பெரியனெனப் பேசு. (கஅ0)

திரிமூர்த் தியினுஞ் சிறந்தோன் மகானெனல்.

மூவருங் கண்டு முடிவணங்கு ஞானிகட்கி
யாவரை யொப்புரைப்பேன் யானிங்கே—மூவருந்தாம்
பேருர்க ளாலநந்த பேதமுற்ருர் ஞானிகளுக்
கோருரும் பேருமில்லை யோர். (கஅக)

அறிஞர்க் குளமே யாதன மென்னல்.

காதலற்றுத் தங்கிலையைக் கண்டபா ஞானியர்க
ளோத லுருக லொழிந்திரா—ரோதின்
மனவா தனத்தறிவை வைத்து நிட்டை செய்வார்
நினைவை யொழிக்க நினைத்து. (கஅஉ)

ஞானி தரிசன நலமெலாந் தருமெனல்.

முத்தர் தரிசனமே மூவர் தரிசனமா
முத்தர் திருப்பணியே முத்திதருஞ்—சித்தமறச்
சேவித்தா லுண்மைச் சிவஞானச் செல்வமுறு
மாவிக் கவரே யரண். (கஅந)

வேத முடிவா நூல் வேற்றுமைதீர் வாசிட்ட
மேதமிற்கை வல்ய மெழிற்கீதை—வாதற்றுக்
கற்றறிவாய் நின்ருரைக் கண்டன்பாய்க் கைதொழுதால்
பற்றெழியு ஞானமுறும் பார்த்து. (௧அ௪)

மகான்க டரிசன மறலிதுன் போட்டும்.

உள்ளபடி தன்னை யொளிவடிவாக் கண்டவரைக்
கள்ளமற நோக்கிடிலோ காலபய—முள்ளபடி
யில்லைவே தத்தானே யேதமற விம்மைதனி
லல்லற் றறிவாவா ராய்ந்து. (௧அ௫)

பெரியார் சித்தைப் புரியா ரென்னல்.

உடம்பை யுலகை யொருங்கே விடுத்த
திடஞானச் செல்வத் திறலோர்—மடநாட்டச்
சிவர்முன் சித்துவித்தை செய்யார்கள் செய்தாலு
மாவ தழிவதில யாம். (௧அ௬)

சித்தென்ன செய்யுஞ் செகமகிழச் செய்வதன்றி
யத்தனடி காட்டா தறிவிலரே—மத்தர்
புகழ்ந்தாவ தென்னும் புகழாக்கா லென்னு
மிகழ்புகழின் ஞானிகளுக் கிங்கு. (௧அ௭)

சத்தறிவா நந்தஞ் சகமெல்லா மென்றறிந்தோர்
சித்தேன் புரிவார் செகமதிக்க—முத்தர்தஞ்
சன்னிதியின் முன்னே சகம்பந்தா வாடுவதை
யுன்னியறி யாததென் னுற்று. (௧அஅ)

செய்கைசெய் விக்கையற்றுச் சித்தமறத் தற்கண்டார்
வய்யகத்தில் வாழும் வகைதன்னை—யய்யாகேள்
காந்தமலை போலக் கருமமில் லாதிருப்பர்
மாந்தாது காணுர் மதித்து. (௧அ௯)

செயலற்று நிற்குந் திகழ்காந்தத் தின்முன்
மயலற் றிரும்பாடு மாபோற்—செயலில்
வெளிவடிவாம் ஞானிகண்முன் மின்னுலக மாடும்
வெளியுரு கட்டகய மே. (௧௯௦)

முத்தர்க டம்மை மூன்றுல குங்கொளும்.

கனிந்தகனி தன்னைக் களங்கமிலா வீட்டை
யினிதாக் கொளல்போ லெவரு—முனிவற்ற
வுள்ளமுடை யாரை யுவந்துலக மூன்றென்றுங்
கள்ளமின்றிக் கொள்ளுங் களித்து. (௧௬௧)

## போலிஞானி.

புறநடிப் புடையார் போலிஞா னியரெனல்.

வான்கோழி மாமயில்போல் வன்னச் சிறைபெறினும்
வான்மகிழ மாமயிலை மானுமோ—வான்ஞான
நல்லாரைப் போல நடித்தாலும் ஞானமிலார்
நல்லாரா வாரோ நவில். (௧௬௨)

சொல்லான் மயக்கிச் சொரூபநிலை யைக்கண்ட
நல்லாரைப் போல நடித்திடுவார்—கல்லாமே
நல்லா ரிடஞ்சேர்ந்து நாலைந்து பாக்கடமைச்
சொல்லி யிகழுடைவார் சூழ்ந்து. (௧௬௩)

போலி ஞானிகள் ஞாலப்பற் றேற்றுவார்.

பாட்டா லுரையாற் பகட்டுவார் சிரியர்போல்
வீட்டுநெறி காணுத வீண்குருக்க—ளேட்டுப்
படிப்பே பொருளாப் படியென்பார் ஞாலத்
தடிப்பையே யேற்றுவார் தாம். (௧௬௪)

பிணக்குள ஞானி யிணக்கமா காதெனல்.

தூயர் குணமிகுதி சொல்லக் களிப்படையார்
தீயர் குணமுரைக்கின் செவ்விதென்பார்—தீயர்தமைப்
பார்த்தாலும் பாவம் பரிசித்தான் மாபாவஞ்
சேர்த்துவைத்தாற் செல்வம்போந் தேர். (௧௬௫)

நல்லாரை வைவோர் ஞானியா காரெனல்.

சாத்திரத்தை யேத்தித் தவவேடங் கொண்டையோ
கேத்திரத்தை மேற்செருகி நீள்வஞ்சர்—காத்திரமாப்
பேசுவார் தம்மைத்தாம் பேரொளியாக் கண்டார்போ
லேசுவார் நல்லாரை யே. (௧௬௬)

## சித்தாதி செய்வதால் முத்தரா காரேனல்.

வேடத்தான் ஞானியல வேதமுத லாகமங்க
டோடமறக் கற்றுலுந் தூயால—வேடனைகண்
மூன்றறினு முத்தால முக்கோடி சித்துக்க
டான்செயினு மெய்யால தாம். (௧௯௭)

## பாவனு ஞானிகள் பணம்பறிப் பாரேனல்.

பூனைபோற் கண்மூடிப் புத்தியிலா தாரிடத்து
மானைத் தரித்தோன் மகிமையெலாந்—தேனைப்
பழிக்கப் பகர்ந்து பணத்தைப் பறிக்கு
மிழிகுணத்தா ரொன்றுமில ரே. (௧௯௮)

நடையுடை யாற்றம்மை நல்லரெனக் காட்டார்
நடையுடையின் றன்மையறி நல்லோர்—நடையில்லார்
வேட்டியுந் தாழ்வடமும் வேதாந்தப் புத்தகமுங்
காட்டிப் பொருள்பறிப்பார் கண்டு. (௧௯௯)

கள்ளமனம் போக்காக் கசடர்தமை ஞானியென்பா
ருள்ளபடி தம்வடிவை யோராது—வள்ளல்போற்
கண்டிகை தாழ்வடங் காவிதிரு நீறணிந்து
தொண்டரையே மாற்றுவார் சூழ்ந்து. (௨௦௦)

கட்டுக் கடங்காக் கசடர்தமை ஞானியென்பார்
துட்டுக் குபதேசஞ் சூழ்ந்துசெய்வார்—மட்டின்றி
வாய்ஞானம் பேசி மதியிலரை யேமாற்றப்
பேய்போ லலைவார் பிறழ்ந்து. (௨௦௧)

பெரியா ரிடத்துப் பிழையறவாய்ந் தார்போ
லரியபொரு ளீதென் றறைந்து—துரியநிலை
கண்டார்போ னின்று கருதிப் பொருட்கொள்ளை
கொண்டுசெல்வார் ஞானியரோ கூற்று. (௨௦௨)

புலான்மயக் கருந்துவார் நலாரிய ரலரெனல்.

காஞ்சனத்தைத் தேடியங்கோ கள்சாரா யம்மயினி
வாஞ்சையா வுண்டுமே வாதாடித்—தாஞ்ஞானி
யென்றுபுகல் வாருலகை யேமாற்றி வஞ்சிப்பார்
வன்றுயர்க்கா ளாவார் வலிந்து. (௨௦௩)

கோழிபன்றி யாடு கொழுக்கவைத்துக் கொன்றுண்பா
ராழிமச்ச மெல்லா மவித்துண்பார்—கோழியண்டங்
கொண்டுவாச் சீடர்களைக் கோபிக்கு ஞானிகளோ
வண்டினர்துன் போட்டுவா ராய். (௨௦௪)

கறையறு ஞானிகள் முறைமறந் தறைவார்.

சுருதி யனுபவஞ் சுழுத்தி மாறுப்
பெருகவே தாந்தங்கள் பேசு—மருளர்தமைப்
பட்டம் பகலினின்று பானுவிலை யென்றுரைக்கு
மட்டிக்கொப் பாக மதி. (௨௦௫)

சுருதியொக்கப் பேசார் சொலில்வாடி நிற்பார்
தெரிவுளர்போற் சீறிச் சிரிப்பார்—பரிவாக
வுண்ண மறவா ருளநிற்க நிட்டைசெயார்
வண்ணவண்ண மாவுடைகொள் வார். (௨௦௬)

ஞானியெனத் தம்மைத்தா நாறு தெடுத்துரைப்பார்
ஞானியெனுஞ் சொற்குரைதா னுட்டென்னில்—யோனி
வழிவந்த மாமிசத்தை மார்புதட்டிக் காட்டிப்
பழிபாவஞ் செய்வார் பரிந்து. (௨௦௭)

பொய்யுரையைப் போக்கார் புலாலருந்த றன்னைவிடா
ரய்யமற்ற நல்லா ரகங்கலங்க—வெய்ய
வுரைபுகன்று நிந்திப்பா ருய்யுநெறி காணார்
தரைக்குப் பொறையிவரே தாம். (௨௦௮)

எச்சாத்ர மேனு மிசைப்பனைவர்க் கும்விளங்க
விச்சைசிறி தும்மிலையெற் கென்றெவ்வாத்—துச்சவுரை
சொல்லி மகிழ்வான் றளியும் பொருந்தாமற்
கல்லாக் கயவன் கறுத்து. (௨௦௯)

தேடரிய வாஞ்ஞான தேசிகரைக் கண்டவர்பாற்
றோடமறத் தம்வடிவைச் சோதிக்கார்—கூடவே
பேசுவார் பேய்போற் பிழைநலநோக் காமலே
காசுபெறு வீணர் களித்து. (உகo)

உடம்பைநா னென்பா ருடம்பியா தென்றாற்
றிடம்படக்கூ றாது திகைப்பார்—மடமிக்குத்
தியரிடங் கேட்டவணஞ் சீரில்லாச் சொற்கடமைத்
தாயரிடஞ் சொல்வார் சுளித்து. (உகக)

உளத்துறவு கொள்ளா ருண்டிக் கலைவார்.

அகத்திற் றுறவா ரகப்பற்றி லென்பார்
சுகவுணவு தேடியெங்குஞ் சோர்வா—ரிகபரத்தின்
சாதனை யாதென்றாற் சாற்றிடா ரெள்ளளவு
மாதவவே டத்துண் மறைந்து. (உகஉ)

அனமுணே மென்பா ரழிபொருள் பறிப்பார்.

நினைவற்றுத் தன்வடிவை நேர்ந்தறி யாது
வினவிப் பொருளை விரும்பித்—தினமும்
அனம்விட்டே னற்பழத்தோ டாப்பாலு வென்பா
ருனிலென்று ஞானியல வோர். (உகங)

உண்டிக் குழல்வார் கொண்டிடார் குருமொழி.

காடிக்கூ ழேனுமெரி கண்டவிடத் துண்டாறி
யோடியலை நெஞ்சை யொழிக்காதார்—வாடி
யறுசுவையூண் டேடியுண்பா ரன்பினிலை கண்டு
பெறுவதெங்ஙன் றேசிகன்சொற் பேறு. (உகச)

பட்சணங் கொடாரைத் தட்சணம் வைவார்.

பலகார பட்சணம் பற்பலகேட் டுண்பார்
கலைஞானங் காட்டிக் கயவ—ரிலையென்று
னிந்தித்துக் கோபிப்பார் நீர்தாமோ வள்ளலென்பார்
சொந்தவறி வோராதார் சூழ்ந்து. (உகரு)

பருப்பொடுநெய் யாதி பலவாக்கேட் டுண்பார்
பருக்க வுடம்பு பனிபோல்—பருப்போடு
நெய்யாதி யில்லாக்கா னீகெட்டா யென்றிகழ்வார்
பொய்ஞ்ஞானி யாவார் புலர்ந்து. (உகசு)

போலிஞா னிக்குப் புத்தி புகட்டல்.

உடம்புள் ளிருக்கின்ற வுன்னைக்கா ணென்று
திடமாப் பெரியருரை தேர்ந்து—மடநீக்கிக்
கண்டுள் ளறிவைக் களிக்காம லிவ்வுடம்பைக்
கண்டுவப்ப தென்ன கருத்து. (உகஎ)

சோற்றுடம்பைத் தானென்றுந் துக்கசுகந் துய்ப்பதெது
போற்றுமுணர் வின்றியின் போகமுண்டோ—நாற்ற
மலமூத் திரத்தின் மயமா மடியுஞ்
சலவுடனீ யாவாயோ சாற்று. (உகஅ)

தண்ணீரி னின்றுகொண்டு தாகவிடாய் தான்கொண்டிங்
குண்ணீரைத் தேடி யுழல்வதுபோற்—றண்ணு
மறிவுருவாத் தானிருந்து மானந்தந் தேடி
வெறிகொண் டலைவதென்னோ விள். (உகக)

சனிசீழ் மலமூத்ரந் தங்குங் கணமா
மினிவுடனீ யாமோ விசைப்பா—யொளியா
யிருக்குமுனை நோக்கி யிருப்பாயே லென்றும்
விருந்தாகாய் வேதன் விழிக்கு. (உஉ0)

உடலுயிர் பேதந் திடமுறக் கூறல்.

உடம்பென் றுணர்வென் றுரைக்கு மிரண்டி
லுடம்பை முதலா வுரைக்கி—லுடம்பதுதான்
றன்னையறி யாது தனக்கயலுந் தானறியா
தென்னவகை யான்முதலா மிங்கு. (உஉக)

உணர்வா லியங்கு முடம்புமுத லெவ்வா
முணர்வின்றே லில்லையா மொன்று—முணர்வோ
சுயஞ்சோதி யான்மாவே சோதித் துணரி
னயமாமா னந்த நமக்கு. (உஉஉ)

பேரறிவின் சிற்றறிவின் பேத முரைத்தல்.

பேரறிவு சிற்றறிவாப் பேசு மறிவிரண்டுள்
பேரறிவே பிர்மமெனப் பேசுமறை—பேரறிவு
மூன்றவத்தை மூன்றுடல மூன்றுவினைக் கப்பாலாய்ச்
சான்றாகு மென்றுந் தனித்து. (௨௨௩)

சிற்றறிவு ஞாலவின்பே சேர்கதியென் றேமயங்குஞ்
சிற்றறிவு யானென்னற் றேகமெனுஞ்—சிற்சொருப
முள்ளதன்று தொல்லையெனு மொப்பின்மறை தப்பென்னுங்
கள்ளமெலாங் கொள்ளுங் கதித்து. (௨௨௪)

## மாணவன்.

நன்மா ணவர்தம் தன்மங் கிளத்தல்.

சாதனநான் குற்றுச் சலிப்பற்று நிற்பதனுக்
காதாமீக் கொண்ட வறிஞர்தாம்—போத
வகத்தும் புறத்துமே யாய்ந்தறிந் துண்மைச்
சுகத்திருக்குஞ் சீடரெனச் சொல். (௨௨௫)

குருவைச் சிவமாக் கோள்வான் மாணவன்.

தன்னிலையை யுற்றுணரத் தாகங்கொண் மாணவன்ற
னன்னியனு வெண்ணிடா னரியனை—முன்னும்
பரசிவனக் கண்டு பணிந்து தொழுது
கரங்குவித்து நிற்பான் கசிந்து. (௨௨௬)

தன்னைக் காண வுன்னுவார் சீடர்.

பொல்லாரைக் கண்டகல்வார் போகார் புலன்வழியே
கல்லார்போற் காட்டிக் கடைநிற்பா—ல்லில்லா
தொன்றாந் தனைக்காண வோர்குருவைத் தேடிடுவார்
நன்மா ணவர்தா நயந்து. (௨௨௭)

தனைக்கண் டவனே சத்துணர் மாணவன்.

உடம்போ டிருந்து முடம்பை மறந்த
திடவா ரியனுர்சொல் சீரை—மடமற்றுத்
தானுக் களித்துச் சகத்தோடு வாழ்ந்திருப்பான்
கோனாகு மாணவன்றான் கூர்ந்து. (௨௨௮)

அடாதன செய்யான் விடாதுதற் காண்பான்.

புறங்கூறான் பொய்யுரையான் புத்திமதி யுள்ளான்
திறஞானச் செல்வத்தைத் தேர்வா—னறநூல்கள்
கூறுநெறி சென்றிடுவான் கோலங்கள் கொண்டிடான்
பேறுபெறு நற்சிடன் பெட்பு. (௨௨௯)

அருள்பெறு மாணவ னயன்மனை பாரான்,

சிறுமை பெருமையெனுன் றேசிகன்றே வென்பான்
சிறுமையுற்றுஞ் செம்பொருளைத் தேர்வான்—பொறுமையே
கொள்ளுவான் பெண்ணுருவைக் கூர்ந்துநோக் கானிழிந்த
தள்ளுவா னற்சிடன் றான். (௨௩௦)

புலன்களை மாணவன் றலங்களைச் சுற்றிடான்.

குருசொன் மலையிலக்காக் கொள்ளுகின்ற சிடன்
குருவைச் சிவனாகக் கொள்வா—னருளும்
விளங்கு முலக வெறுப்புமுண் டாகுந்
தளங்கான் றலஞ்சுற்றிச் சோர்ந்து. (௨௩௧)

ஒருமொழி கேட்டோன் சிறநூ லோதான்.

ஒருமொழியி னால்விளங்கு மொப்பில்பே ரின்புக்
கொருகோடி நூல்களைற்றுக் கோதல்—குருசொல்
மலையிலக்காக் கொண்டு மனமற்று நிற்பா
னலவறுநன் மாணாக்க னாற்று. (௨௩௨)

தீய மாணவர் செயலினைக் கூறல்.

பக்கத் திருக்கும் பாகுருவைக் கண்டனாகார்
தக்கன்போன் மாறாய்ச் சமர்புரிவார்—தக்கவரைக்
கண்டாலு மேத்தார் காணமற நிட்டைசெயார்
பண்டைவினை யின்றொடர்பால் பார். (௨௩௩)

பெண்பணி செய்வார் பேதைமா ணாக்கர்.

உண்மைநிலை கேட்க வுவந்தார்போல் வந்திடுவார்
பண்ணார் மொழியார் பணிவிடா—ரண்ணாவென்
றேத்திப் பணிவா ரிதயத்திற் பத்தியுறார்
சாத்திகமா ணாக்கர் நடித்து. (௨௩௪)

தூங்கிடு மாணவ ரேங்கிடு வாரெனல்.

படிப்பார்க டோத்தரிப்பார் பத்தியுளே மென்பா
ரிடிப்பார்ந்த சொல்லிவிடா ரென்றுந்—தடிப்போலத்
தூங்கிச் சுகிப்பார்க டோகையரே தெய்வமென்பா
ரீங்கிவரோ சீட ரியம்பு. (உஙரு)

ஒப்புக்குக் குருவென் ருேதுவார் தீயோர்.

ஒப்புக்கொப் பாரிப்பாட் டோதியமும் மாதரைப்போ
லொப்புக்கா சானென் றுரைப்பார்க—ளொப்புக்குக்
கற்பார் கருத்திற் கடுகளவும் வையார்க
ணற்றவயில் லாச்சீடர் நைந்து. (உஙசு)

வஞ்சகச் சீடர் மரபினைக் கிளத்தல்.

ஐந்தை யடக்கா ரறிஞர்தமக் கேவல்செயார்
நைந்துன்னு ரீச னளினபத—மைந்துடனே
நெஞ்சுவந்து புண்ணியங்க ணீள்கனவி லுஞ்செய்யார்
வஞ்சமுறு சீடரென்பார் வந்து. (உஙஎ)

உலகப் பெருமைக் குவப்பர்தீ மாணவர்.

உண்டிச் சுவைக்கு முபசாரப் போற்றலுக்குந்
தண்டவணக் கத்திற்குந் தாமகிழ்வார்—பண்டறிஞர்
சொற்றநெறி நின்று சுகசொருப மாகார்கள்
மற்றிவரோ சீடர் மதி. (உஙஅ)

மருளருக் கில்லை குருவரு ளென்னல்.

காமிக்கு முத்தியிலை கண்ணில்லார்க் கில்லைபுவி
சாமிக் கிலையே சலிக்குமன—மாமிவைபோ
றுஞ்சு மருளர்க்குத் தூய குருவருடா
னெஞ்ஞான்று மில்லையென வெண். (உஙகூ)

தேசிகன் றெய்வமாத் திகழிலின் பாமெனல்.

ஆரியனே யீசனென வாய்ந்தகத்தெண் ணுதவருக்
காரியன்சொ ஞரிசொற்போ லாகுமா—லாரியனே
வேதப் பொருளா விளங்கியகா லந்தனிலே
யேதமிலா வின்பமெழு மே. (உசo)

# மனைவி.

## மூவகைப் பெண்களின் முறைமை கிளத்தல்.

உத்தமப்பெண் மத்திமப்பெண் ணேதகமப் பெண்ணெனவே
யித்தரையிற் பெண்க ளிருப்பரென—முத்தர்தா
நாட்டினர் முன்னாளி னன்றமுப் பேதத்தைக்
காட்டிடுவேன் சீராக் கதித்து. (உசக)

பத்தா வுடனிறப்பாள் பார்க்குமிடத் துத்தமப்பெண்
செத்தபின் றேகம்விட்டாள் செப்புங்கால்—மத்திமப்பெண்
ணாள னிறந்தபினே யாளனையே யாண்டவனு
ணீளவர்ச்சிப் பாளதமி நேர்ந்து. (உசஉ)

## நற்குண மனைவியின் போற்பினை யுரைத்தல்.

பெண்ணுருவாற் பெண்ணுகாள் பெண்மைக் குணம்பெருக
வண்ணலென நாயகனை யாதரித்துக்—கண்ணிமைபோற்
போற்றிப் பணியெல்லாம் பொற்புடனே செய்கின்ற
தேற்றமுளா ளபெண்ணுவாள் தேர். (உசங)

## பதிமேற் கோட்கள் பகரா ளுத்தமி.

ஆளனே தெய்வமென்பா ளாளனுக்குப் பின்னுண்பாள்
கோளுரையாள் கொண்டவன்மேற் குற்றமுற—வாளனே
நாள்கிழமை தெய்வமென நாளுந் துதித்திருப்பாள்
கேள்பெருக்கு நங்கை கிளர்ந்து. (உசச)

மொழியை மறுக்காள் முகங்கடுத்துப் பேசா
ளிழிவுரையா ளுயகனை யென்றும்—பழிசொல்
லுரைத்தா றனக்கே யுறும்பாவ மென்பாள்
விரைத்தா மரைமுகத்தாள் மிக்கு. (உசரு)

## நல்லவள் சீடன்போ லுயகற் போற்றுவாள்.

நல்லசிவ வாரியன்று ணண்ணியநன் மாணவன்போற்
சொல்லைத் தடுக்கா டுணைபுரிவாள்—செல்வத்
திருமகள்போ லுயகனே தேவனென்பா ளுளு
மொருமைமனத் துத்தமியா ளோர்ந்து. (உசசு)

மணாளன் மொழியை மறுக்கா ளுத்தமி.

நாயகனார் கூறுமொழி நால்வேத நற்பொருளாத்
தூய மனத்தோடு சூழ்ந்துகொள்வா—ளுயகன்ற
னுள்ள மகிழ வுபசரித்துப் போற்றிடுவா
டெள்ளறிவார் பெண்ணரசி தேர்ந்து. (உசஎ)

கற்றவள் கணவனைக் கனவினு மிகழாள்.

கணவனினுங் கற்பாசி கற்றவளா னாலுங்
கணவனைத் தாழ்வாக் கருதாள்—கணவன்
றெழுநோய னேனுந் தொழுதுபணி செய்வாள்
பழுதின ளாயினிபோற் பார்த்து. (உசஅ)

கணவன் பாதம் பணிவணன் மனைவி.

காலை யெழுந்து கறைப்பறக் களைத்துலக்கிச்
சேலை தனைக்கட்டிச் சீராகக்—காலைப்
பணியெல்லாந் தான்செய்து பத்தாவின் பாதம்
பணிவாள் பதிவிரதை பாங்கு. (உசகூ)

கொண்டவன் குறிவழி கொண்டவள் குணவதி

எதிர்த்துரையாள் கோபியா ளேலாத செய்யாள்
பதிப்பொருளா நாயகனைப் பாவித்—திதமாக்
குளிர்ந்தமுகங் காட்டிக் குறிப்பறிந் தென்றுங்
களித்துப் பணிவாள்பெண் காண். (உரு௦)

பத்தினி நங்கை பதறிப் பேசாள்.

கூடன்கார னுக்காள் கணவன் வருந்தப்
படபடெனப் பேசாள் பதறி—யடபாவி
சண்டாளா வென்று சகஞ்சிரிக்கத் தர்க்கமிடாள்
கொண்டவனைத் தெய்வமென்பாள் கூர்ந்து. (உருக)

குணவதி துட்டக் கொழுநனைத் திருத்துவாள்.

தாய்மனத்தை நோவச்செய் சாந்தமிலா நாயகற்குச்
சேய்மொழிபோ லின்னுரைகள் செப்பியே—வாய்மை
யெடுத்தெடுத்துக் காட்டியவ னேதகுணம் போக்கி
வடுத்தவிர்த்து வாழ்வாள் மகள். (உருஉ)

நாயகன் றேடவரு நற்பொருளைச் சந்ததமு
நேயமொடு நல்லார் நிகழ்த்தியவா—மாயமின்றிப்
பங்கிட் டருந்தப் பகர்வாள் கணவனுக்குத்
துங்க வறிவுடையாள் சூழ்ந்து. (உருங)

நற்குண மனைவி நலமெலாம் பெறுவாள்.

வரவுதனை நோக்கி வகுத்துச் செலவு
காவின்றிச் செய்யுநற் காந்தை—வரமா
நிறைசெல்வ முற்று நிமல னருளாற்
குறைவற் றிருப்பாள் குளிர்ந்து. (உருச)

சாவித்ரி சரிதையைச் சான்றாப் பகர்தல்.

சாந்தகுண சாவித்ரி தன்மாமன் மாமிதமக்
கீந்தருளக் கண்க ளெமன்பாற்பெற்—றாந்துணையாந்
தன்னா யகனுயிருந் தன்கற்பி னாற்பெற்றுப்
பன்னாள்வாழ்ந் துற்றாள்சீர் பார். (உருரு)

நன்மனைவி போல நடிப்படீ மனைவியும்.

நெற்பயிர்போற் புல்லு திறத்தாலொத் துற்றாலு
நெற்பயிர்தா னாகுமோ நீண்டுறுபுல்—கற்பில்லாள்
கற்புவதி போற்புறத்திற் காணநடித் தாலுந்தான்
கற்புவதி யாவாளோ காண். (உருசு)

தீய மனைவியின் செயலிது வாமெனல்.

மூதேவி சண்டாளி மூழ்கியன்பா யன்னமிடாள்
வாதே புரிந்துநிதம் வம்புசெய்வா—ளோதக்
குளித்தாலுந் தோய்த்திடாள் கூறையினை யன்பன்
விளித்தால் குரைப்பாள் வெறுத்து. (உருஎ)

சிறுதெய்வம் போற்றுவா டீக்குண மனைவி.

நம்பனடிக் கன்புசெயு நல்லறிவார் நாயகனை
வம்பிழுத்து வீணாக வாதிட்டுச்—செம்மையிலாக்
காட்டேரி தெய்வமெனக் கற்பித்தே யாடறுக்க
காட்டுபவ ணாயகியோ நாடு. (உருஅ)

துட்ட மனைவியா னட்டம் வருமெனல்.

துட்ட மனைவியினாற் றாயர் பகைகொண்டு
நட்டம் பலவடைவார் நற்கணவர்—கட்டுதற்கு
வத்திர மும்மற்று வாய்ச்சோற்றுக் கேக்குற்று
நித்திரையுங் கொள்ளார் நிலைத்து.  (உருக)

கணவனைப் பழிப்பாள் கற்பழி மனைவி.

ஆள னுரைகசி யத்தையய லாரறிய
நீள வுரைத்துமிக நிந்திப்பா—ளாளனே
தெய்வமெனக் கொண்டிடாள் செய்யா தனசெய்வா
ளய்வாள்பி னய்நரியா நாடு.  (உகூ0)

கொழுநனைப் போற்றிடாள் கொள்வள்புன் பிறப்பெனல்.

ஆளனுரை தட்டு மரும்பாவி சண்டாளி
தேளதுவாய் செய்யானுச் செந்நாயாய்—காளமுறு
நாகவுரு வாகி நடுக்குற் றழிந்திடுவாள்
பாகமிலா ளாவளிது பார்.  (உகூக)

குணமிலா மனைவி கூற்றையொப் பாளெனல்.

கொழுநன்முன் குந்தி குறுக்குரைப்பாள் பேயென்
றழிவினலார் சொற்று ரதனாற்—கழுதையொத்த
தண்டு பசாரிகளைச் சாற்றலொவ்வா பெண்களெனச்
சண்டன்சண் டன்னெனலே சால்பு.  (உகூஉ)

## மருகி.

நற்குண மருகியின் நடக்கை யிதுவெனல்.

அண்டையெதிர் வீட்டிற் கடுத்தடுத்துச் சென்றிடாள்
கொண்டமா மன்மாமி கோபிக்க—வுண்டைக்
கரிசி திருடி யடிமடியிற் கட்டாள்
கரிசிலா தாளையொத்தாள் காண்.  (உகூ௩)

ஆளனைப் பெற்றெடுத்தா ராதிசிவன் சத்தியென்றே
நீள நினைந்திடுவா ணீவியைப்போ—லாளனிடங்
கோளாறு கூறுள் குளிர்ந்தமுகத் தோடிருப்பாள்
சூளா மணிமருகி சூழ்.  (உகூச)

குணமுள மருகியே குடும்பத் தெய்வம்.

தன்கணவன் றன்மாமி சார்மாமன் மைத்துனரைப்
பொன்போலப் பாராட்டிப் போற்றுகின்ற—நன்மருகி
முவ்வுலகும் போற்று முதற்றெய்வ மாமென்ன
வெவ்வுலகும் போற்று மினிது. (௨௬௫)

மூதாதை பெறுவர் முத்திநன் மருகியால்.

மருமகள் மாமி மனமொத்து வாழ்ந்தாற்
றிருமகள் செல்வஞ் சிறக்கு—மருமகளான்
முத்தியந் தக்குடும்ப மூதாதை கள்பெறுவார்
சத்திய வான்சரிதஞ் சான்று. (௨௬௬)

மாமன் மாமியை மதிப்பணன் மருகி

நித்தந் துதிப்பா ளிமலையென மாமிதனை
யத்தனு மாமனென வர்ச்சிப்பாள்—சுத்த
மனமில்லா ராயினவர் வன்னெஞ்சை மாற்றித்
தினமும் புரிவாணற் சீர். (௨௬௭)

செய்ய மருகி சீரெலாம் பெறுவாள்.

பத்தாவைப் பெற்ற பரதெய்வ மாமியெனச்
சுத்த மனத்தோடு தோத்தரித்து—நித்தந்தன்
பத்தாவுன் முன்னே பரிந்தவட் கன்னமிடு
முத்தமியு ருததென் றோது. (௨௬௮)

குணமிலா மருகி குடிகெடுப் பாளெனல்.

சண்டைக் கிழுத்தடித்துத் தன்மாமன் மாமிதமை
யண்டை யயலினுளா ராவென்னக்—கண்டவிடத்
திட்டலி தோசைவடை யேற்றுக்கா றுதுண்டு
கட்டம் பலசெய்வாள் காய்ந்து. (௨௬௯)

சீரிலா மருகியாற் றீராத் தரித்திரம்.

புத்திசிறி தேனுமிலாப் புன்மருகி வாழ்குடும்ப
நித்தந் தரித்திரத்தி னீங்காது—பத்தாதான்
வேலைக்குச் சென்றாலும் வேலைகிடை யாதயர்வா
ருலைக் கரும்பா வயர்ந்து. (௨௭௦)

### தகாதன செய்வா டகவிலா மருகி.

காலை யெழுந்திராள் கால்கைகள் சுத்திசெயாள்
காலை மடக்காள் கணவனெதிர்—காலைதனிற்
செய்பணியை மாமிதனைச் செய்யென்பாள் காலனைப்போ
லய்யு மகளோ வுவள். (உஎக)

### மாமன் மாமியை வருத்துவ டமருகி.

சுகமுற் றிருக்கச் சுதனுக்குக் கொண்ட
மகணம்மெண் ணத்திற்கு மாறாய்த்—தகவில்லா
நாய்போன்ற ளென்னிதென நன்மாமன் மாமியெண்ணக்
காய்வாள் மருகியோ காண். (உஎஉ)

### குடும்பங் கலைப்பாள் குணமிலா மருகி.

துண்டுதுண்டா வுண்டி சுகித்துண் குடும்பத்தைச்
சண்டையிட்டு வேறாக்கித் தன்பதியைக்—கண்ட
விடங்கடன் வாங்கச்செய் தேசப் பலரு
மடங்கா தலைபவள்பெண் ணன்று. (உஎங)

தாய்தந்தை சோதரரைத் தன்கணவன் விட்டகல
வாய்ந்த தலையணை மந்திரத்தை—யேய்ந்திடவே
போதனைகள் செய்தென்றும் பொல்லாங்கெ லாம்விளைப்பாள்
வாதனைசெய் கூற்று மதி. (உஎச)

### துன்மருகி கொள்ளுந் துன்ப மீதெனல்.

அத்தை மனமகிழ வன்பா நடவாதா
ணித்தம் பிணியா னிலையழிந்து—சித்தவதை
யேமன்றன் றூதுவா லெக்காலு முற்றிடுவா
டமனத்தா லென்றுந் திகைத்து. (உஎரு)

பசித்திருக்க மாமியார் பார்த்திருக்க மாமன்
கசிக்குமன் பின்றிக் களித்தே—யுசிதவுண்டி
யுண்டு மகிழ்மருகி யூரிகழ நாயாகி
யண்டவிட மின்றியலை வாள். (உஎசு)

## சிவபத்தி.

### பத்தி நிலையைப் பகர்ந்த திறற்கேனல்.

நாம்பிழைக்கப் பத்திநிலை நன்கமைத்துச் சாத்திரத்திற்
பாம்பணிந் தாடும் பரமனையே—யோம்சிவா
சங்கரா வீசா சதாசிவா சம்புவெனத்
துங்கமுறச் சொற்றுவந்தார் சூழ்ந்து. (௨௭௭)

### சிவார்ச்சனை செய்தாற் சித்தஞ் சுத்தியாம்.

சித்தசுத்தி யெய்தளவுஞ் சீரார் சிவபூசை
பத்தி வழுவாமற் பண்ணுவிரேற்—புத்தியின்மை
யென்னேமன் வந்தா லெழுந்து சிவகுரு
தன்றாள்கொண் டேயுதைப்பான் சார்ந்து. (௨௭௮)

### பத்திசெய் வாரைப் பரமன்காப் பானெனல்.

துக்க மகற்றிச் சுகவடிவ மாக்குபான்
பக்கத் திருந்தென்றும் பத்தர்தமைத்—தக்கபடி
சோதனை செய்துநன்றாத் தூய்மைசெய் தாட்கொள்வான்
வாதனையெல் லாமொழிய வாய்ந்து. (௨௭௯)

## அடியார் பத்தி.

### சிவனடி யார்போற் சிவன்வரு வானெனல்.

அடியவரை யாள வடியார்வே டங்கள்
படிமீது கொள்வான் பரமன்—கொடியவரோ
விதறியா தையோ விகழ்ந்திங் கடியவரை
வேதனைகொள் கின்றார் விரைந்து. (௨௮௦)

எவ்வுயிருந் தாமா விலங்கும் பரமசிவன்
கவ்வுமல மற்ற கருத்தார்த்த—செவ்வி
யடியார்க் கருள்செய்த லன்பருருக் கொண்டோ
கொடியா ருருக்கொண்டோ கூறு. (௨௮௧)

அடியருச் சிட்ட மவமதிக் கொணுதேனல்.

அடியா ரரனென் றகமகிழ்ந் துன்னி
யடியாரோ டுண்பா ரறிஞு—ரடியார்க
ளுண்ட துணவெறுப்பா ரூர்மலத்தின் சூகரமா
மண்டனிலே வந்துழல்வார் வாய்ந்து. (௨அ௨)

அடியவர் சேட மருந்துவா ரடைபயன்.

அடியாரோ டுண்ண வருவருப்பார் மூட
ரடியா ரானலவோ வாய்மி—னடியார்தா
முண்டதன்பா லுண்டா ருடனே சிவமாவார்
தொண்டுசெய்வ தெல்லாந் தொலைத்து. (௨அ௩)

அன்பரை வைவோ ரந்தக ரேயெனல்.

அடியா ரிடஞ்சென் றறிவைவளர்க் காது
குடிஞானி பாற்போய்க் குழம்பித்—தடிஞானங்
கேட்ட பழக்கத்தாற் கேடுரைப்பா ரன்பர்களை
நாட்டக் கபோதியென நாடு. (௨அ௪)

அடியார் பணியே யனைத்துந் தருமேனல்.

அகமும் புறமுமொத் தன்பர்பணி செய்தா
லிகமும் பரமு மினிதா—மிகமோ
டிருக்களவுஞ் சீர்த்தியா யேதமின்றி வாழ்வா
ரிருக்கின்றேன் யானொருவ னிங்கு. (௨அ௫)

தொண்டரைப் போற்ருர் துன்ப முறுவார்.

மாதேவர்க் கன்பர் மலரடியைப் போற்ருதார்
தீதேய் கொடுநரகிற் சேர்ந்தழுங்கிக்—கோதார்ந்த
நாயாய் நரிகழுகாய் நானிலத்தி லேபிறந்தே
யோயாத் துயருறுவா ரோர். (௨அ௬)

## செல்வச் செருக்கு.

முன்றவாத் தம்முள் முதலது பொருளவா.

மண்ணாசை பெண்ணாசை மாப்பொன்னி னாசையென
வெண்ணாசை மூன்று மிவற்றுள்ளே—யுண்மையாப்
பொன்னாசை யேமிகவும் பொல்லாத வாசையென்றார்
முன்னாசை விட்டார் முனிந்து. (உஅஎ)

பொன்னில மாதர்நசை பொங்கமுடன் செப்பவந்த
மன்னுகை வல்லியமா மாநூலுன்—பொன்னைமுனே
செப்பியது மூன்றிற் சிறந்ததுபொன் னாசையென்று
தப்பியுல குய்ந்திடற்கே தான். (உஅஅ)

பணவாசை போலமற்றைப் பாவநில வாசை
யுணக்கா தொழிக்கி னொழியும்—பணமோ
நிலமாத ராசைவிட்ட நீடுறவி னையு
மலக்கழிப்ப தாருணரா தார். (உஅகூ)

பணமயக் கிலாமை பாரி லரிதேனல்.

பணத்தின் மயங்காதார் பாரதனி லில்லை
பணச்செருக்கோ நல்கும் பவத்தைப்—பணங்கொண்டு
தீமை நெறியகற்றிச் செய்யவரும் புண்ணியங்க
ளுமை தமையகற்றுந் தேர். (உகூ௦)

இழிஞரே செல்வரை யிதஞ்சொலி யழிப்பார்.

கூடிச் சிநேகிப்பார் குற்றமுண்டேன் மன்னிப்பார்
வேடிக்கைக் கூத்திற்கும் வேசிக்குந்—தேடியத்தன்
வைத்த பணமழிக்கு மார்க்கங்கள் கற்பிப்பார்
கைத்தகனி யாக்கிடுவார் கண்டு. (உகூக)

நன்னெறி வருபொரு ணலமேலாந் தருமெனல்.

பாவமற வந்த பணம்பசியாற் றற்குதவும்
பாவமற வந்தபணம் பத்திதருந்—தேவன்
குருக்கோலங் கொண்டாளக் கூட்டுவிக்கு நெஞ்சின்
மருளகற்று மூட்டு மதி. (உகூஉ)

## செல்வச் செருக்காற் சிதைந்தா னிந்திரன்.

கருவில் துருவாசர் கண்ணுதலைக் காசித்
திருநகரிற் பூசை செயுங்கா—லருளீசன்
றந்தான் கமலமலர் சாந்தமுனி யேற்றிருகை
சிந்தித்து வைத்தான் சிரத்து. (உகூஙு)

இந்திரனுக் கீயவவ னேற்றொருகை யால்யானைக்
கந்தரத்து வைத்தான் களிறப்பூச்—சிந்திக்கீழ்
காலா லரைத்ததனைக் கண்டுமுனி வேந்துரைப்பா
னாலால மென்ன வழன்று. (உகூச)

தவநோக்கி யீசன் றரும்பிரசா தத்தை
யவமதித்த நின்கம் மறுக—புவனிமிசை
யென்றுமுனி தந்த விருஞ்சாபம் போக்கிடாப்
பொன்றுபொரு ளிச்சைதனைப் போக்கு. (உகூரு)

## பணமேனிற் பிணமும் பாழ்வாய் திறக்கும்.

பணமென்றாற் சாம்பிணமும் பாழ்வாய் திறக்கின்
பணமென்று லார்மயங்கார் பாரிற்—பணமயக்கா
லானை யுடன்கெட்டா னுயிரங்கண் ணிந்தனெனி
லேனையரெவ் வாறுய்வா ரேய்ந்து. (உகூசு)

## நகுடனுஞ் செருக்கா னுசமுற் றானெனல்.

பொன்னாடு பொற்பூண் புகழ்முனிவர் தாங்கிடுஞ்சீர்
பன்னாள்வீ யாவுடம்பும் பாங்கொடுகொண்—மன்னு
நகுடன் செருக்குற்று நாகவடி வானான்
மகுடமா மீகைகொண்டு வாழ். (உகூஎ)

## பொருட்செருக் கதனாற் புகுந்தீங் கெலாமெனல்.

பணத்தாசை கொண்டு பரதவிக்கு நெஞ்சே
பணத்தாசை யேற்றுவிக்கும் பற்றை—நிணத்துடலைத்
தானென் றறிவிக்குந் தக்கார்நட் பைப்போக்குங்
கோனென் றகங்கரிப்பிக் கும். (உகூஅ)

பணஞ்சேர்க்க வேட்டோர் பழிபாவங் கட்குத்
திணமஞ்சார் போற்றிடார் தெய்வங்—குணமாச்
சலிப்பற்று நிட்டைசெயுஞ் சாதுக்க டம்மை
வலித்தழிவார் வீணாக வம்பு. (உகக)

பணம்பகை யாக்கும் பணமுறவுண் டாக்கும்
பணமோபா லிக்கும் பழியைப்—பணத்தி
னுளவறிந் தார்பசித்தார்க் கூற்றிக்கூ ழேனு
முளமகிழ்வார் நாளுநா முற்று. (௩௦௦)

உண்ணா ருடுக்கா ருதவிசெயார் யாவருக்குங்
கண்ணாற்கண் டாலுங் கழித்திடுவா—ருண்ணாரைப்
பெண்டிரைவிட் டில்விட்டுப் போவா வேசியர்க்குத்
தொண்டுசெய் தேமடிவார் சூழ்ந்து. (௩௦௧)

ஏழையை வருத்துவார்க் கிதஞ்செயான் சிவனெனல்.

பணச்செருக்கா லேழை பதைபதைக்க வைதா
லணலனுக்குச் செய்யா னருளைப்—பணந்தானு
நீண்டநா ளுன்பா லிலேத்திருக்கு மென்றெண்ணே
லுண்டுமதற் குள்ளறஞ்செய் சார்ந்து. (௩௦௨)

அறிஞர்செல் வத்தா லகமரு ளாரெனல்.

கோடிப் பணத்தைக் குவித்ததிலே தூங்கிடினுங்
கோடி யுளமயங்கார் குற்றமிலா—ராடியொப்பப்
பற்றணுவுங் கொள்ளார்கள் பாமரரை யொத்திருப்பா
ரற்றவர்க்கீ வார்க ளனம். (௩௦௩)

பொல்லாங் கெண்ணி னில்லா தாம்பொருள்.

இன்றுன்பா லுற்றபொரு ளேகுந்தி யெண்ணமுறி
னன்றி யறியா நரிபோலப்—பன்றி
புறமுவது போல வுறமச்செய் தல்லி
அறங்கவொட்டா தாட்டு மினி. (௩௦௪)

பொருளுள்ள பொழ்தே புண்ணியஞ் செய்யெனல்.

நல்லார்க்குச் செல்வமுறி ருடெல்லா நன்மையுறும்
பொல்லார்க்கஃ தூற்றக்காற் பொல்லாங்கா—நல்லார்
பொருளுற்ற போதே புனித வறங்க
ளருள்பெருகச் செய்வா ரமர்ந்து. (௬0ரு)

செல்வச் செருக்குள்ளார் தேவிலை யென்பார்.

பணத்தின் செருக்காற் பானில்லை யென்பார்
பிணத்தின் மயவுடம்பைப் பேணிக்—கணக்கின்றிப்
பார்த்தும் பலரிகழப் பண்பிலவே செய்தழிவார்
மூர்த்தியடி யாரை முனிந்து. (௬0௬)

பொருளையே யுலோபர் போற்றுவார் தேவென.

பணமொன்றை யேசேர்க்கப் பாடுபடு வோர்கள்
பணமதையே தேவாப் பணிவா—ரிணாயு
நாறு மலர்போல நற்பயன்ப டாதழிவார்
தேறு ரறங்க டெளிந்து. (௬0௭)

அனமிடார் செல்வ மல்லல் தருமெனல்.

அன்னமிடார் செல்வங்கண் டான்றோ ரகமகிழா
ரன்னமிடார் சேர்க்கின்ற வப்பணந்தா—னென்ன
பயனளிக்கு மய்யோகோ பாழ்ம்பிறவி போக்கா
துயவறியாப் பேயாநீ யோர். (௬0அ)

# பொறாமை.

பொறாமை யால்வரும் பொல்லாங் கெலாமெனல்.

பொறாமை யுளவளவும் புத்தியுறார் யாரும்
பொறாமை குணச்சிறப்பைப் போக்கும்—பொறாமைதான்
றன்னுடையா னையழிக்குந் தக்கார்நட் பைப்போக்கு
முன்னைத் தவமுறுக்கு மே. (௬0௯)

ஆமையோய்ந் தாலு மழிவாக் கழுக்காறென்
னுமையோ யாம லலக்கழிக்கு—மாமை
யினைற்றைக் கெடுத்துவிடுங் கெட்ட பொறாமை
யிணக்கர் தனையழிக்கு மே. (௬௧0)

பொருமைப் பேய்செயும் புன்செயல் கிளத்தல்.

பொல்லாமை யீயாமை புண்யநெறி செல்லாமை
யில்லாமை வாய்மை யியம்பாமை—வெல்லாமை
யெல்லா முறவாக்கும் யார்க்கும் பகையாக்கும்
பொல்லாப் பொருமையெனும் பேய். (ருகக)

புவனியிற் றேவன் பொருமைவிட் டவனெனல்.

நல்லாமை யீசன் கமலபதம் போற்ருமை
நல்லாரை யேத்தாமை ஞானநிலை—புல்லாமை
கொள்ளச்செய் கின்ற கொடிய பொருமைதனை
தள்ளிவிடு வான்சாமி தான். (ருகஉ)

பொருமை யுள்ளான் புகழடை யானெனல்.

பொருமை குடிகெடுக்கும் புன்மைநெறி சேர்க்கும்
பொருமையுடை யாரே புலையர்—பொருமையுளா
ரெல்லையிலாத் துன்பங்க ளெய்துவார் சாமளவு
மில்லைபுக ழிம்மியுமிங் கே. (ருகங)

கல்லார் களினுங் கடையர் பொருமையர்.

நல்லார்க ளுள்ளுங் கடையாம் பொருமையரை
நல்லார்கண் டாலோ நடுக்குறுவார்—பொல்லா
திருந்த விடமெல்லா மேங்கியுண் ணேவா
வருந்தற்கண் டாவென்பா ரார்த்து. (ருகச)

நல்லன பழிப்பார் பொல்லாப் பொருமையர்.

உண்ணக் களிக்கா ருடுக்க மனம்பொறுக்கார்
பண்ணேடு பாடின் பழித்திடுவார்—விண்ணீர்ச்
சடையா னடியாரைச் சாக்கிட் டிகழ்வார்
கடையாம் பொருமையினர் காய்ந்து. (ருகரு)

பொருமையை யொழியெனப் புகன்றனர் பெரியார்.

எத்தனையோ வாமை யிருந்தாலும் பொல்லாது
சித்தப் பொருமையது தேறியே—பெத்திக்குஞ்
சேர்க்கா தமிழினென்ருர் சேர்க்குந்திப் பாவமெனப்
பார்க்கு ளுயர்ந்தார் பரிந்து. (ருகசு)

போய்புகல் வார்பால் பொருமை நடஞ்செயும்.

பொய்யரிடமே பொருமை நடஞ்செய்யு
மெய்யரிட மெப்போது மேவாது—பொய்யரிடம்
போற்றி விளையாடும் புண்ணியத்தைச் சேர்க்காது
சோற்றுக் கலையவிடுஞ் சூழ். (௩௧எ)

## சிவகாருண்யம்.

சுத்த வுணவாற் றூமதி வருமெனல்.

சுத்த வுணவருந்திற் சுத்தமதி யுண்டாகு
மத்திமலு னுண்ணின் மதிவிளங்கா—சுத்த
வுணவருந்திற் புண்ணியமா மூனமெலா நீங்குந்
தணவா தருளென்றுந் தான். (௩௧அ)

விதிவிலக் காய்வான் விலக்குவா னெனல்.

நமக்காக மாடாடு நாதனளித் தானென்
றெமக்கறிவு கூறு மிழிஞ—விமலன்
விதிவிலக்கு யார்க்கு விதித்ததென வாயின்
மதிகெட்டுக் கொன்றுண்ணுய் மற்று. (௩௧௯)

விதிவிலக்கு வித்தகர்பான் மேவியுண ராது
மதிகெட்டுப் பல்லுயிரை மாய்த்தே—யொதிபோல
வுண்டவற்றி னூனே யுடல்வளர்க்கும் பாவியுனே
தண்டதனுற் கொல்வான் சமன். (௩௨௦)

உயிரெலாங் கடவுளுக் கோத்த மகவெனல்.

எவ்வுயிருந் தம்முயிர்போ லெண்ணாது கொன்றுண்பார்
செவ்வறிவு சற்றுமிலாத் தீயமக்க—ளெவ்வுயிரு
மீசன் படைப்பென்ன வெண்ணுநல் லோரவற்றை
நேசமுற்றுக் காப்பார் நிலத்து. (௩௨௧)

கொலைஞர் பிறப்பெலாங் கொள்வா ரென்னல்.

பாவ மிகுதிபற்றிப் பாம்பாடு பட்சிகளாத்
தேவன் படைத்தவற்றைத் தோாது—நோவவுயிர்
கொன்றவரை நொந்துசன்மங் கோடிகொடுப் பானென்னிற்
றின்றவர்க்கென் செய்யானத் தே. (௩௨௨)

### கொலைப்பாவம் போக்கறங் குவலயத் தில்லையெனல்.

கொலைப்பாவம் போக்கவறங் கோடிசெய் தாலுந்
தொலைக்கா வவையவற்றைத் தூய்தா—வலைக்காம
லெவ்வுயிரு மெவ்வுடலு மெம்முயிரெந் தேகமென்று
செவ்வையாப் போற்றல் சிறப்பு. (௩௨௩)

### புலாலுண் பவரே புவிக்குப் பொறையெனல்.

நாருசிக்காக் கொன்றருந்து ஞானமிலாப் பாமரராற்
பாருலகிற் கென்பயனும் பாமலா—லாருயிரைக்
கொன்றருந்தி யீசன் குரைகழற்பூ சிப்போர்க்குக்
கன்றலலா லில்லை கதி. (௩௨௪)

### ஊனினை யுண்போர் வானினை யடையார்.

ஆக்கை தமிலரிய வாக்கைகொண்ட மானுடர்கள்
காக்கவுயிர் யாவுமென்ற கண்ணுடையார்—வாக்கைவிடுத்
தாக்கை பருத்திடவே யாருயிர்கொன் றுண்கின்றார்
மோக்க மடைவதென்றோ முன். (௩௨௫)

### மாமிச முணிநர மாமிச முணுதலேன்.

மாமிசத்துள் வேற்றுமைதான் மன்னவிலை யாதலினன்
மாமிசமுண் கன்னோர் மனத்தநர—மாமிசத்தைக்
கள்ளுடனே யுண்டு களிக்கா வகையென்னே
விள்ள வெனக்கு விளம்பு. (௩௨௬)

அன்னியசேர் தனதனை யாவலுட னுண்பதுபோற்
றன்மைந்த ருன்றனையுந் தாஞ்சமைத்துத்—தன்னு
ளிக்கவே யுண்டாற் கசக்குமோ வந்தோ
வளியனுவு மில்லா யறை. (௩௨௭)

மாடாடு கோழிமீன் மாண்டா லவற்றையுணு
மூடாநின் றுய்த்தைத மோகமினை—மீடாரு
மக்கண் மடிந்தான் மகிழ்ந்தவர்க ளூனதனை
யிக்கருந்தா வாறென் விளம்பு. (௩௨௮)

ஊனுணி மனையுண் டவனுமூ னுணியே.

தாழ்ந்த வருணத்தார் தம்மனையி லுண்டவர்க
டாழ்ந்தவரே யாகுந் தகைமைபோற்—போழ்ந்துயிரை
யூனுண்ணு வார்மனையி லூனுண்ணுன் றானுமுணி
லூனுணியே யாவனென வோது. (௩௨௯)

பிணத்தைக் கலத்திற் பெய்துண லென்னெனல்.

மக்கட் பிணமடுத்த மாமனையி லேயிருந்தாற்
றுக்க மடைந்தொப்பிச் சோறுண்ணு—மக்கள்
பெருவிலங்கு புள்மீன் பிணங்கலத்தில் வைத்துள்
ளொருமித் துணலென் னுவந்து. (௩௩௦)

மாமிச முண்போர் வயிறே சுடலையெனல்

இடுகாடு தூரமென வெண்ணுங் கொலைஞ
விடுகாடுன் பாழ்வயிறென் றெண்ணு—கடுங்கொலைசெய்
துண்ணும் பிணமெல்லா முன்ற னகட்டினுளே
நண்ணி யெரிவதனை நாடு. (௩௩௧)

புலாலுண வால்வரும் பொல்லாங் கீதேனல்.

நித்திரையிற் செத்தபிண நேருடலைக் காக்கவந்தோ
செத்தபிணந் தின்று சிறப்பாயே—லத்தனுனை
யேமனிடங் காட்டி யிருகூறு வெட்டென்பான்
றுமதயில் லாமலே தான். (௩௩௨)

ஊனுகர் வாரற மூணரா ரேன்னல்.

புலைகொலையைப் போக்கியே புண்ணியராய் வாழக்
கலைவழியாக் கற்பிக்கக் கண்டும்—வலையிட்டு
மீன்பிடித்துக் கொண்டுவந்தான் மேல்விழுந்து வாங்குகின்று
ரேன்படித்தார் நீதி யிவர். (௩௩௩)

மாமிச முண்போர் வதைப்பா ருயிரை.

புலாலதனை நாளும் புசித்தெமக் குண்டா
லெலாவுயிர்கள் பாலுமன் பென்னல்—செலாது
புலாலுண்ணும் வேட்கையது பொல்லாக் கொலையை
நலாதாவாற் செய்விக்கு நாடு. (௩௩௪)

ஊனுண் பவரரு ளுடையே மெனல்போய்.

அருந்திப் புலாலை யனைத்துயிர்கள் பாலும்
அருளுடையே மென்ன வறைத—லருளா
மருட்டி யுலகினை வஞ்சித் தவர்தம்
பொருட்கவரும் பொய்த்தாடிப் பு. (௩௩௫)

கொல்லினே ருயிரைக் கோயி லிடித்ததாம்.

எவ்வுயிரு மீச னிலங்கவுயி ரேயுமுடல்
செவ்வையுறு கோயிலிதைச் சேதிக்கின்—கொவ்வையித
ழம்மையிடங் கொள்ளான்ற னாலயத்தைத் தாமிடித்த
வெம்மைப் பவமுறுமே மிக்கு. (௩௩௬)

உயர்குல மேன்பா ருனுண லென்னெனல்.

இழிந்தவர்பாற் றண்ணீரு மேற்கா ரிழிந்தோ
ரிழிந்தமலந் தின்னுயிரை யிம்சித்—திழிந்ததசை
தின்பா ருலகிற் சிறந்தகுலந் தாமென்பா
ரென்னே யிவர்மடமை யே. (௩௩௭)

புழுத்த புலாலைப் புசிப்ப தேன்னெனல்.

மாக்கறியி லோர்புழு மன்னக்கண் டாலோ
விரக்தி கொளுவார் மிசையூன்—பாக்கப்
புழுத்த தெனினும் புசிப்ப ரிவர்தம்
மொழுக்கை நகைக்கு முலகு. (௩௩௮)

தன்னுயிர் போல மன்னுயிர் போற்றேனல்.

தன்னுயிரைக் கட்டமுற்றுத் தான்காத்தல் போலுலகில்
மன்னுயிரை யெல்லாம் வருந்தியே—யன்னைபோற்
றன்பகற்றிக் காப்பான் றரிசகன்றெந் நாளுமே
யின்பவடி வாவா னினிது. (௩௩௯)

## கள்ளாமை.

உடம்பருமை நோக்குவா ருகவார் பிறர்பொருள்.

அறிவுடனே யாக்கை யானமக் கீந்த
குறியையறி யாமற் குழம்பி—வெறிகொண்
டுடம்புள் ளளவு மொளித்துத் திருடின்
மடமற்று வாழ்வதென்றோ வாய்ந்து. (௩௪0)

திருட்டா லாம்பொருள் தேய்பிறை போற்கெடும்.

பெறுதற் கரிய பிறவி யதனாற்
செறுவற்று வாழத் தெரியாய்—மறுவுற்று
நாய்போ னுழைந்து நடுங்கித் திருடுவையேற்
றேய்பிறைபோற் போமுன் றிரு. (௩௪௧)

களவி னும்பொருள் கனந்தா ராதேனல்.

களவினு மாக்கங் கணக்கிறந்த தேனுங்
களவின்றிச் சத்தியமாக் கைக்கொண்—மிளகளவா
மூதியத்திற் கொப்பாமோ வூரார் பொருள்வௌவு
நீதியறி யானே நிகழ்த்து. (௩௪௨)

நன்னெறிப் பொருளா னலமெலாம் வருமெனல்.

பாவமிலா வூதியத்தாற் பாவமறும் பத்தியுறுந்
தேவனடி சேரச் சிரத்தைவரும்—பாவக்
களவையொழித் தார்க்குக் கடவுடுணை யாவா
ரளவிற்சீ ருண்டா மகத்து. (௨௪௩)

திருடர் திண்ணமாச் சிறையுறு வாரெனல்.

ஈச னளித்த வினிய வறிவினன்
மாசற்று வாழ மதியாது—மோசத்
திருடனென யாருஞ் சிறைச்சாலை சேர்வாய்
வருமியமற் கென்சொல்லு வாய். (௩௪௪)

கள்வர்தாங் கொள்ளுங் கடுந்துன் பிவையெனல்.

தாய்தந்தை தம்பி தமையன் மனைவிமக்கள்
வாய்விட் டலறி வருந்தியழ—நாய்போற்
றிருடுவோர் தம்மைச் சிறையிலவ மான
மருளில்லார் செய்வா ரடித்து. (௩௪௫)

விலங்கிட் டிழிவான வேலைசெய் யென்பார்
கலங்கியழு தாலுங் கனியா—ருலவிவாப்
பார்த்தா லடிப்பார் பதைக்கவுதைப் பார்சிறையின்
மூர்க்கக் காவலரை முன். (௩௪௬)

திருடிச் சிறைச்சாலை சேர்ந்தோர்தன் போர்த்துந்
திருடவே யெண்ணுவது சீரோ—திருடர்தமைக்
கால்விலங் கிட்டுக் கழிமலத்தை வாரென்பார்
கோல்கொண் டடிப்பார் குரைத்து. (௩௪௭)

கண்டா ரிகழ்ந்துரைக்கக் காவலர்க டேடிவரக்
கண்டவிட மெல்லாங் களவுசெய்து—மண்டெரிபோ
லாருஞ் சிரிக்க வயலார் பொருள்வெளவி
னிருய்வ தெங்ஙா னிலத்து. (௩௪௮)

கள்வன் மனைவி கணிகையா வாளெனல்.

திருடன் மனைவியென்றுந் தேர்பரத்தை யாவாள்
திருடன் பொருளிருப்பைத் தேடி—யிருளிற்
றிருடப்போ குஞ்சமயஞ் செவ்விதா நோக்கி
வருபவரைச் சேர்வாண் மகிழ்ந்து. (௩௪௯)

அற்பராங் கள்வர் நெற்பத ரொப்பார்.

களவை மறக்கக் கடுகளவுங் கல்லா
ரளவிலற நூற்கடமை யாய்ந்தென்—கொளகொளெனச்
சொல்லிச் சிரிப்பாவர் துட்டகுணம் விட்டகலார்
நெல்லின் பதரிவர்க்கு நேர். (௩௫௦)

களவுசெய் வார்க்குறுங் கடும்பிறப் பிவையெனல்.

நம்போன்று ரெங்காளு நன்றுப் பழித்திடவே
நம்போன்றார் தம்பொருளை நாந்திருடி—னம்மைப்
பான்மறுசன் மத்தந்தோ பாம்பூனை நாயா
வாச்செய்வா னுள்ளே மதித்து. (௩௫௧)

நெஞ்சினுங் களவை நினைக்கொ ணுதேனல்.

உள்ளத்திற் கள்ளத்தை யுன்னுவதே பாவமென
வள்ளற் குருபானும் வள்ளுவனுர்—தெள்ளியதாச்
சொல்லியது பார்த்திடுக சூதாப் பிறர்பொருளை
மெல்லக் கவர்வார் விழைந்து. (நுடுஉ)

தொலைத்துக் களவைத் தொழிற்செய் துண்ணெனல்.

தன்னில்லாள் புத்திர்பா ரூன்கொண்ட மோகத்தா
லுன்னி யயலா ருடைமைதமைக்—கன்னத்
தெடுத்துச் செலவழிக்கு மீனச் செயலை
விடுத்துழைத் துண்ண விரும்பு. (நுடுந)

சுத்த வுடலோடு சுத்தமதி பெற்றிருந்தும்
பித்தர்போ னெஞ்சம் பிறழ்வுற்றுக்—கத்திச்
சிறையில் வதையத் திருடாதே சீராங்
குறைவில்லை செய்தொழிலைக் கொள். (நுடுச)

பிறர்பொரு ணச்சிடார் பிரானருள் பெறுவார்.

இல்லை பொருணமக்கென் றெண்ணித் திருடுவீரேல்
வல்லை மறுபிறப்பில் வந்திங்கே—யல்லற்
படுவீர் திருடாமற் பாடுபட்டுண் பீரேற்
கடுமிடறன் ருள்பெறுவீர் கண்டு. (நுடுரு)

## பிறன்மனை நயவாமை.

நாய்போற் பிறன்மனை நச்சிடி னரகுறும்.

உத்தமப்பெண் மத்திமப்பெண் ணேதமப் பெண்ணிவர்தஞ்
சித்தமுண ராது திகைப்புற்றுச்—சுத்தியிலா
நாய்போல வன்னுரை நச்சிமயல் கொள்ளுவையேற்
போய்வருந்து வாய்நாகு புக்கு. (நுடுசு)

அறிஞர் பிறனில் யன்னையென் றெண்ணுவார்.

அயலவன்றன் றேவிதனை யன்னையென வெண்ணிப்
பயமுளத்துக் கொண்டறிஞர் பாரார்—நயமுறவே
பார்த்தாக்கா ணேறுபோற் பற்காட்டிப் பாமரர்க
ளார்த்தியுற்றுக் கொள்வா ரளறு. (நுடுஎ)

### தனைப்போற் பிறரையும் நகவோடு கருதேனல்.

அன்னியர்க டம்மனைமே லாசைகொண்டு பேய்போல
வுன்னியுன்னிப் பார்க்கின்ற வூகமிலாய்—நின்மனையை
மற்றொருவன் கூடி மகிழ்ந்தாற் பொறுப்பையோ
நற்றுலைபோ லின்றிதனை நாடு. (௩௫௮)

### பிறன்மனை நச்சுவான் றன்மனை யிழப்பான்.

மனமார வேற்றுமனை மால்கொண்டு கூடின்
கனமுங் கதியுங் கழியு—மினமிகழு
மிம்மையிலன் னான்மனைவி யேதிலன்பா லேகலப்பாள்
வெம்மை நரகமுறு மேல். (௩௫௯)

### பெண்ணுட லனைத்தும் புண்ணுட லாமெனல்.

தொட்ட விடமெல்லாந் தோனரம்பென் பன்றி
யிட்டமுற்ற பெண்பால்வே றேதுளது—துட்டகுணக்
காம னியற்றுகின்ற கற்பனைக்குட் பட்டழியி
னேமன்றண் டிப்பனா கிட்டு. (௩௬௦)

பொற்பணியி னாலன்றோ பூவை யழகுபெறல்
பொற்பணிபோ னாலோ புழுக்கூடா—மற்ப
ரினிக்குங் கரும்புபோ லெண்ணி மகிழ்ந்து
சனிக்காட் படுவார் தளர்ந்து. (௩௬௧)

எவ்விதமா நோக்கிடினு மிம்மாதர் தம்முருவிற்
செவ்வைப் பொருளணுவுஞ் சேர்ந்துளதா—செவ்வையாத்
தேறாத குற்றமே தேர்ந்தான் மலவடிவா
நாறுப் பொருளுளதே னாட்டு. (௩௬௨)

### அச்செலா மொன்றென் றறிந்து பிழையெனல்.

பெருமை யழியப் பிறன்மனைபுக் கந்தோ
விருமை யிழக்கு மிழினா—தெருளுள்ளா
ரச்செல்வ மொன்றென் றறைவதுநன் றாக்கண்டுன்
னிச்சைமனை யாளோ டிரு. (௩௬௩)

மங்கையின் போன்றுன் மனைவியோ டமையெனல்.

மாதருருப்பிரண்டேன் மாதரின்பும் வெவ்வேரு
மாதருருப் பொன்றதனுன் மாதரின்பும்--பேதமில்லை
யாதலினு லன்னியன்ற னுயிழையைப் பாராதுன்
காதலியோ டுற்றுக் களி. (௩௬௪)

அழகு செயானை யணைவா யோவெனல்.

ஆடையணி கந்த மணிமஞ்சட் பொட்டுடனே
வாடைமலர் சூடாத வஞ்சியரைச்—சாடைசெய்து
கூடநினைப் பாயோ கொடுநாற்றங் கண்டுவெறுத்
தோடநினைப் பாயோ வுரை. (௩௬௫)

ஏதிலாள் விழைவா னிடரேலா முறுவான்.

கரும்புநிகர் தன்மனையாங் காந்தை யிருக்க
விரும்பியய லான்மனையை வீணுய்—பெரும்போர்
புரிந்துபகை பாவமச்சம் பொல்லாப் பழியுற்
றெரியாழ்வ தெற்றுக் கிசை. (௩௬௬)

மாதர்மய லுள்ளளவு மாஞானம் பற்ருது
நாதனடி யன்பணுவு நாடாது—வேதனையும்
புன்பிறப்பும் பொய்யும் பொருமை கொலைகளவு
நின்பினிழற் போற்றெடரு நேர்ந்து. (௩௬௭)

அன்பை யழிக்கு மறமொழிக்கு மன்னியர்தம்
பன்னியர்மேற் கொள்ளும் பவக்காத—லன்னியர்தம்
பன்னியரை மாதாவாப் பாவிக்கி னெஞ்சார
மன்னிடுமின் பெல்லா மலிந்து. (௩௬௮)

வேற்றிலாள் விரும்புவார் விட்டிலோத் தழிவார்.

தம்மன்னை போலயலான் ருரத்தை யெண்ணுது
செம்மையறி வில்லாற் சிரித்தெதிரி—லெம்மைத்
தெரியாயா வென்றினிக்கத் தேன்போலப் பேசி
யெரிவீழும் விட்டிலொப்பா ரேய்ந்து. (௩௬௯)

பெண்ணாசை தன்னாற் பிரமனுங் கெட்டான்

நாறிமலம் பீளை நலிமூத்ரஞ் சீழுதிர
மூறித் தழும்பு மொருகுடமா—யாறிடாக்
காமன்றன் கைவலையாங் காரிகைமேற் காமுற்றுப்
பூமனுங்கே டுற்றான் புலர்ந்து. (௩௭௦)

## வாய்மை.

வாய்மையே தெய்வமும் வண்முத் தியுமெனல்.

மெய்யுரையே தெய்வமென்பர் மெய்யுரையே முத்தியென்பர்
மெய்யுரையே வேதமென்பர் மேலோர்க—ளையமிலை
யாதலினா லத்த னருள்பெருக்கும் வாய்மைதனை
மாதவமாக் கொள்வாய் மதித்து. (௩௭௧)

எல்லாச் சமயமு மேற்றிடு முண்மையை.

எச்சமயத் தோர்க்கு மிதமாகு முண்மையதிங்
கச்சமறக் கொள்வா ரறிவுடையா—ரச்சமிலா
வென்பிலதொத் தாரோலா ரின்படைய வென்றுமே
நன்மையவர்க் கில்லையென நாடு. (௩௭௨)

இருமைப் பயனையு மெய்துவார் வாய்மையார்.

இம்மை மறுமை யிரண்டிடத்து மாறாது
நம்புகழ் செல்லுமிதை நன்கறிவீ—ரிம்மை
மனதொடு வாய்மை மகிழ்ந்துரைப்போ மாயிற்
சினமின்றிச் செப்புவமெய் தேர்ந்து. (௩௭௩)

பொய்யிலார் தமக்குப் புகழெங்கு மாகுமெனல்.

பொய்யில்லார் நெஞ்சிற் புராரி குடியிருப்பான்
பொய்யில்லார்க் கெங்கும் புகழாகும்—பொய்யில்லா
ரேழைகளை யிம்சைசெயா ரேதேனு மிட்டுண்பா
ரேழைகடா மானாலு மிங்கு. (௩௭௪)

மெய்ம்மை தவத்தினு மிக்க தாமெனல்.

ஆரியா வறிவீர் கடலுலகிற் சீர்த்தி
மரியா வரிச்சந்ர மன்னன்—பெரிய
தவத்தாற் சிறந்த தகுகவுசி கன்றன்
றவமழிய மெய்யுரைத்த தை. (௩எரு)

அண்டரெலாம் போற்று மரிச்சந் திரன்சரிதை
கண்டுணர்ந் துண்மை கடைப்பிடித்த—பண்டிதரே
பொய்புகலா ரிவ்வுலகிற் பூதவுடம் புள்ளளவும்
செய்தவமெ லாஞ்செய்வார் தேர்ந்து. (௩எசு)

பொறுமை படைத்தார் பொய்புக லாரெனல்.

வறுமையுற் றாலும் வழுக்கிப்பொய் சொல்லார்
பொறுமை படைத்த புனிதர்—வெறுமையாம்
பொய்யுரையா தார்க்கே புகழு நலமுமா
மய்யமிலு றென்று மதி. (௩எஎ)

பொய்சோலும் வாய்க்குப் போசன மிலேயெனல்.

பொய்யுரைப்பார் வாய்க்கென்றும் போசன மில்லையெனல்
செய்ய மொழியன்றோ தேர்ந்துணர்மின்—வெய்யதாம்
பொய்யை யொழிமின் புகழுடம்பைப் பெற்றிடுமி
னுய்யுநெறி சூழ்மி னுவந்து. (௩எஅ)

புசிப்பிலே யேனும் போய்புக லேலெனல்.

பொய்யுரைக்க வேண்டாம் புசிக்கவூ ணற்றாலும்
பொய்க்கில்லை புண்யம் புகழ்செல்வ—மய்யோ
விருந்தாற்போ லேகிவிடு மிவ்வுடலை நம்பி
வருந்தப்பொய் சொல்லேன் மறைத்து. (௩எகூ)

இழிபோய் புகல்வதி னேற்றுண னன்றெனல்.

பொய்யுரைத்துப் பொய்யுடலைப் போற்றி வளர்ப்பதினு
மய்யமெடுத் துண்ண லழகாகும்—வய்யகத்தீர்
பொய்யால் வினைதுக்கம் போயறிவீர் நல்லார்தஞ்
செய்ய திருவடியைச் சேர்ந்து. (௩அ0)

அசத்திய முரைத்தலி னுக்கைவிட னலமெனல்.

பொய்ப்பொருளைச் சேர்க்கநிதம் புன்மனத்த னெண்ணியென்
யய்யோ வறிய ரழுதேங்கப்—பொய்யதனை [னி
மெய்போலக் கூறியிம் மேதினியில் வாழ்வதினு
மெய்யென் னுடன்விடுதன் மேல். (௩அக)

பொய்புகல் வார்மனை பொல்லா நரகெனல்.

பொய்ச்சாட்சி கூறிப் பொருள்கள் பெருகிடவே
செய்வார் மனைகளே தீநரகம்—பொய்யுரைப்பா
ரில்லத் தருந்தா ரிருக்குமென்று பாவங்க
ளல்லவுள் ளத்தார் நயந்து. (௩அஉ)

பொய்யை யொழியெனும் பொன்மொழி யோரெனல்.

பொய்யை யகற்றுப் புலாலையொழி யென்றறிஞ
ருய்ய நமக்கருளா லோதுமொழி—மெய்யா
வுணராது வீணே யுரைப்போமேற் பொய்யை
யணியமற் கென்சொல்வோ மங்கு. (௩அ௩)

நரகங் கண்டனன் நவின்றுபொய் தருமனும்.

மனமறியப் பொய்யுரைக்கின் மாபாவ மென்ன
வினமா யறிதரும னென்றே—கனமாகப்
பொய்யுரைத்த தானிரயம் புக்கொருநாள் கண்டயர்ந்தான்
செய்யனெனும் பேர்தான் சிதைந்து. (௩அச)

பொய்ப்புகல் வார்க்குறும் புன்பிறப் பிவையெனல்.

மெய்யொழியப் பொய்யுரைப்போர் மேதினியிற் பன்றிகளா
வய்யோ பிறந்திறந் தல்லலுற்று—வெய்ய
கழுதையுரு வாயுறுவார் காலவன்றான் கட்டிப்
பழுதறவே வாட்டிடுவான் பார்த்து. (௩அரு)

## வெகுளாமை.

சினமிலா தார்க்கே சீரெலாம் வருமெனல்

சினமற் றவரே தெரிசிப்பார் தேவை
சினமற் றவரேசீர் சேர்வார்—சினமற்
றவரே பெறுவா ரருண்முத்தி யென்பார்
பவரோக மில்லார் பரிந்து (௩௮௬)

சீற்றமி லார்க்கே சிவஞா னம்வரும்.

சினமற் றுலகத்தின் சிந்தனையு மற்று
மனமற் றவர்க்கே மகிழ்ந்து—கனமா
வமலஞா னத்தை யருளுவே னென்றான்
விமலன் சினத்தை விடு. (௩௮௭)

சீற்றம் வரும்வழி செப்புவ தாகும்.

கொடிய புசிப்பாற் கொடியர்நோக் காலே
கொடியரிலில் வாழுங் குறையாற்—கொடிய
சினந்தடித்துச் சீரழித்துச் சீரியரை வாட்டி
யினம்பழிக்கச் செய்யுமென் றுமே. (௩௮௮)

கொடிய புசிப்பாற் கோபம் வளரும்.

கொடியதாந் தீப்புசிப்பைக் கொண்டுழல்வா ரந்தோ
கடிநாயைப் போலக் கனல்வார்—குடியோடு
கொன்றுண்ணா தாரே குளிர்சாந்தங் கொண்டொளிர்வா
ரென்றுநன் னூலியம்பு மே. (௩௮௯)

சினந்தடிக்கு மென்றஞ்சித் தீய புசியா
ரனமுமள வாக்கொள்வா ரான்றோர்—சினம்வளா
வூனு மயக்கு முடல்பருக்க வுண்டிடுவார்
மானமிலாத் தீயார் மருண்டு. (௩௯௦)

கோபத் தாலுறுங் கொடுமை கிளத்தல்.

நல்லாரைப் பொல்லாத நாய்போற்பார்க் கச்செய்யும்
பொல்லாரை நட்பாப் பொருந்தவைக்கு—மெல்லார்க்குங்
கீழா விகழவைக்குங் கீர்த்தியிருந் தாலழிக்கும்
பாழாஞ் சினந்தான் பதைத்து. (௩௯௧)

உலகாளுங் கோப முவந்துகொலை செய்யுங்
குலகோத்ரம் பேசிக் குறிக்கும்—தலஞ்சென்று
சன்யாசி யாரென்று தர்க்கமிட் டோடியழு
மின்னலெலாஞ் சேர்க்கு மிசைந்து. (ஙகூஉ)

மானதன்றி மக்களா மாகபட னுங்கா
னினத்தீக் காம னிடர்ப்படுக்கு—மானன்மோ
கன்கோப னுள்ளளவுங் காரியஞ்செய் வாதனு
னுன்கோபந் தன்னை யொழி. (ஙகூங)

கோபனைக்கொள் ளாதார் குவலயத்தி லில்லையாற்
கோபனில் லாக்காற் குறைவிலையாங்—கோப
னிருக்கு மிடத்தி லிருந்திடுமா றுன்பம்
பொருக்கென் றதனை நீ போக்கு. (ஙகூச)

கூற்றினுஞ் சீற்றங் கொடிய தாமெனல்.

தவத்தை யழிக்குந் தனத்தை யொழிக்கும்
பவத்தை யழைக்கும் பரிந்து—சிவத்தையன்பாப்
போற்றுநரைக் கண்டிடிலோ புத்தியிலா ரென்றிகழுங்
கூற்றினுஞ் சீற்றங் கொடிது. (ஙகூரு)

திரிமூர்த்தி செயலெலாஞ் சீற்ற மெனதேனும்.

முக்கண்ணன் பாலிருந்து முப்புரத்தை யானெரித்தேன்
தக்கன்றீ யாகத்தைத் தானழித்தே—னெக்கலையுங்
கற்ற பிரமன் கனத்தையழித் தேனென்னுஞ்
செற்றத்தைக் கொல்வாய் சினந்து. (ஙகூசா)

தாரணிந்த வாலி தனைமாலு ளுற்றழித்தேன்
மாரீனைத்தீய்த் தேனான்கண் மன்னியே—வீர
னெனையொப்பா னில்லையெனு மீனச் சினத்தை
நினைவொழித்த லாலொழிப்பாய் நேர்ந்து. (ஙகூஎ)

சினமுளார் தமக்குச் சிறப்பிலை யாமெனல்.

சினமுடையார்க் கில்லை சிறந்த வொழுக்கஞ்
சினமுடையார்க் கில்லைநற் செல்வஞ்—சினமுடையார்க்
கில்லை யருளற மில்லை சிவஞான
மில்லை குருவருளு மே. (ஙகூஅ)

கோபத்தாற் கௌசிகன் கோட்டினுன் றவத்தை.

தவந்தனமாக் கொண்டருள் சார்கவுசி கன்றன்
றவத்தை யிழந்தான் சகத்தி—லுவப்பொழிக்குங்
கோபத்தா லந்தோ குரங்காகச் செய்யதுகா
ஞபத்தா மென்றே யறி. (நூகூகூ)

சினமுளார் தம்மைச் சிவனழிப் பானெனல்.

அடியவர்கொண் டாடு மகில முதல்வன்
கொடியசினங் கொள்வார்பாற் கோணிப்—படியிற்
பிறர்பழிக்கச் செய்து பெருந்துன் பளிப்ப
னறநெறியி னிற்ற லழகு. (௪00)

சிவனர் தமக்குச் சீற்ற மிலேயெனல்.

கூற்றுதைத் தான்புரங் கோபித் தெரித்தானென்
றேற்றிப் பரமன்மீ தின்புறுவாய்—சாற்றிதற்குத்
தக்க பிரமாணந் தானுரைத்தா னீவெகுளாய்
நக்கன் சினப்பதிலே நாடு. (௪0௧)

உலகவா வுளார்தமக் கொழியா தாஞ்சினம்.

இச்சகத்தை நம்பிப்பொன் னிச்சைவைத்தார் தம்முள்ளே
யச்சோ சினத்தை யழித்தவா—ரிச்சைதா
னுள்ளளவுங் கோப மொழியா தழிக்குமே
கள்ளமனத் துள்ளே காந்து. (௪0௨)

# தருமம்.

நிட்காம தானம் நீக்கும் பற்றை.

வந்த பணமதனை வாலறிவன் றந்ததென
வந்தமிலா வீசர்க்கு மன்பர்க்குஞ்—சந்ததமுங்
கற்றவர்க்கு மற்றவர்க்குங் காமமற் றீவாயேற்
பற்றிரியு ஞானமுறும் பார். (௪0௩)

தீநெறி வருபொருள் தீதிற் காமெனல்.

புண்ணியத்தால் வந்தபணம் புண்ணியமே செய்விக்கும்
புண்ணியமில் லாதுவந்த புன்பொருடான்—றிண்ணமாக்
கூத்தி குடிகொலே கோர்ட்டிற்காங் கொள்ளைக்காங்
கூத்திற்காம் பேய்க்காங் குறி. (௪0௪)

செத்தபின் பொருளாற் சேர்பய னிலையெனல்.

எத்தானஞ் செய்தாலு மென்னாகு மன்னமுனே
முத்தரெலா மன்ன முதலெனலாற்—செத்த
பிறகு பணத்தாற் பெறும்பயன்றா னுண்டோ
இறவறிவா லாய்ந்தறத்தைச் செய். (௪௦௫)

அனமளிப் பவனுக் காரியன் கிடைப்பான்.

சோறிட் டுபசரிப்பார் சுத்தவறி வுள்ளார்தாஞ்
சோறிடலே நல்லறமாச் சூழ்ந்துணர்ந்து—சோறிட்டாற்
றூய்ய வறிவாந் துரியநிலை ஞானிவந்
துய்யுநிலை காட்டிடுவா னோர். (௪௦௬)

பொருளவா வுளார்க்குப் பொல்லாத் துன்பெனல்.

பணப்பிரிய முள்ளார் பசித்தவருக் கீயார்
பணப்பிரியர் தூங்கார் படுத்துப்—பணத்துளவு
கண்ட வறிவுடையார் காய்பசியைக் கொண்டவர்க்குத்
தண்டனிட்டுச் சோறிடுவார் தாம். (௪௦௭)

செல்வமோ ரிடத்துந் திரமா நிலாதெனல்.

இன்றைக் கிருந்திங்கே யெவ்விடத்தோ நாளையுறு
நன்றியி லாப்பொருளை நம்பாதே—மன்றி
னடிக்கும் பெருமா னளினபதச் சீரைப்
படிப்பவருக் கீபொருளைப் பார்த்து. (௪௦௮)

பொருந்தியொரு தானமிராப் பொல்லாப் பொருளால்
விருந்திட்டின் புற்றிடுக மேலா—மருந்தவத்து
ஞான குருவருளா லென்றுணர்க வத்துநிலை
யீனப் பிறப்பறுக்க வே. (௪௦௯)

தூங்கவைத் திப்பணந்தான் றுட்டரிடஞ் சென்றுன்னை
யேங்கி யழச்செய் திரக்கவைக்கு—மாங்கதனை
யின்றைக்கு நாளைக்கென் றேமாற்று தேயறஞ்செய்
மன்றாடி செய்வனருள் வந்து. (௪௧௦)

ஈக்காம்போ லிப்பணந்தான் னுண்டியுருண் டோடிவிடு
நக்கனடி யார்கடமை நன்கழைத்துத்—துக்கமற
வன்ன மளித்துவர் காதரிப் பாயானாற்
பின்பிறப்பி லேயுதவும் பேண். (௪௧௧)

மழவிடையா னன்பருக்கு மாப்பகையாஞ் செல்வ
மழவிட் டகலு மதனை—வழவழெனக்
கற்றா ரறியார் கனவனதா னஞ்செய்யார்
கற்றா ரெனவே கசிந்து. (௪௧௨)

புனிதர் பொருளாற் புந்தி மருளார்.

பகைநட் புருவாப் பரந்த பணத்தா
லகமருளா ரென்று மறிஞர்—சகமீ
தநிதி மகிழவவர்க் காம்பணிகள் செய்வார்
விதிகைப் படாரென்று மே. (௪௧௩)

புண்ணியப் பொருளாற் புரிந்தன நல்கெனல்.

போனசன னத்திற்செய் புண்ணியத்தால் வந்தபொனை
மானமுடன் போற்றி மதித்தானை—யூனமற்ற
தானங்கட் கெல்லாந் தலையா மனதானந்
தீனருக்குச் செய்வாய் சிறந்து. (௪௧௪)

சாதற்கு முன்னன தானஞ் செய்யெனல்.

உயிர்க்கொப்பாச் செல்வத்தை யோம்பிப் புலன்க
ளயர்வுறச் சாங்கா லழாம—லுயிரோ
டிருக்கும் பொழுதே யெளியவருக் கன்ன
முருக்கமுட னிட்டுண் ணுவந்து. (௪௧௫)

எளியவர்க் கீதலே யீகை யாமெனல்.

அற்றார்க்கொன் றீவ தறமென்றார் நாயனார்
கற்றதன்ற னுண்மை கடைப்பிடித்திங்—கற்றார்
பசிநீக்காச் செல்வந்தான் பாழிற் செலவாஞ்
சுசிநீங்கார் கொள்வரிது சூழ்ந்து. (௪௧௬)

ஈகை யுளார்க ளீசனைப் பாரேனல்.

இட்டார் பெரியாரென் றெம்மவ்வை செப்பினமை
பட்டாங்கி லுள்ள படியறிக—இட்டார்தா
மீசனுக்கொப் பென்பதலா லென்னுரைப்பே னாதலினா
லேசுதல்விட் டேழைகளுக் கீ. (சகஎ)

அருளுடை யார்க ளறம்புரி வாரேனல்.

மாறிப் பலதுயா மன்னச்செய் செல்வத்தை
யாறியறி வான வருளுடையார்—மாறி
னடம்புரியு நாதன்றன் னல்லடியார்க் காக்கி
மடங்கருக்கி வாழ்வார் மகிழ்ந்து. (சகஅ)

மரணத்தை யெண்ணி மகிழ்ந்தறஞ் செய்யெனல்.

நாய்போலப் பன்னாளு நன்கலையச் செய்பொருட்குக்
காய்குணமே யல்லாது கண்ணில்லை—பேய்போல
வங்குமிங்கு மோடி யலைந்தழிவாய் சாவையெணித்
துங்கவறஞ் செய்யத் துணி. (சகக)

அறம்புரி வார்க ளடைபய னீதேனல்.

பழிநீங்க வந்தபொனுற் பார்த்துப் பசியா
மிழிநீங்கச் செய்யிலவ் வீகை—செழியன்போற்
செய்வித் திகத்திற் சிவனடிசேர்க் கும்பரத்திற்
பொய்விட் டறஞ்செயலே பொற்பு. (சஉ0)

தன்னனு பவத்தைத் தகவோ டுரைப்பது.

முன்னிவ் வுலகின் முதிர்வறுமை யாலியான்
சின்ன வயதிற் சிறுகுற்றுச்—சொன்னபணி
பொன்னுடையார் பாலே புறமு மகமுமொத்துச்
சின்னாள் புரிந்துபொன் சேர்த்து. (சஉக)

அப்பொன்னிற் கிஞ்சித் தருளன் பருக்காக்கி
யொப்பிலனை யிட்டுவந்த வுண்மையன்பாற்—செப்புஞ்
சிறிய பொருளுந் திரளான முங்கொண்
—றியவிருக் கின்றேனின் பார்ந்து. (சஉஉ)

## ஆண்டான்.

எசமான் குறைசோல விறைவனை வேண்டல்.

ஏழையிடத் துப்பணிகொண் டேற்றபொரு ளீயாத
கோழைமனப் பாவிகுணங் கூறுவதற்—கேழை
யுளத்திருந் துற்றவெலா மொப்பி லிறைவா
பளபளெனச் சொல்க பரிந்து. (சஉங)

அரசன் றவிர வனைவரும் பணியாள்.

மன்னனொரு வன்றவிர மற்றவரெல் லாம்பணியாள்
மன்னனைப்போற் பெற்றிடினு மாப்பொன்னைப்—பன்னுங்காற்
புண்யமுளான் மன்னவனும் புண்யமிலா னாளாவா
னண்ணியிவ் வுண்மையினை நாடு. (சஉச)

பணிமுகத்தி லுள்ளோர்கள் பார்த்திபனுக் காளே
யணியணியா மேன்மை யடைந்தே—பணிபட்ட
முற்றுநு மாளே யுயர்பீயே பீயலெம்பே
கற்றுநு மாளேயாங் காண். (சஉரு)

பழவினை யேவலாற் பணிபுரி வாரேனல்.

நிழலி லுறைத்தலைவ னீடேவ லாள
ரழலும் வெயிலி லலைதல்—பழவினையி
னேவலவர் கூலிதனை யேமாற்றிக் கொள்ளுவையேற்
பாவமுனைக் கொல்லும் பகைத்து. (சஉசு)

பாவ வடிவினர் பணிசெய் வாரேனல்.

ஆரா நினைத்தாய்நீ யாளா யிருப்பாரைத்
தோராத செல்வருளந் தேற்றிடற்கா—நோராக
வாள்வேடங் கொண்டிங் கதிபாவம் வந்ததாங்
கேள்விட் டிதனையுட் கொள். (சஉஎ)

அடிமையைக் காக்கி லரனருள் வாய்க்கும்.

இத்தனைநாள் வாழ்க்கை யிருக்குமெனச் சொல்வாரார்
நித்தியமா வாழ்க்கைதனை நீநினையே—லத்தனன்பாற்
றந்தபொரு ளென்றுன்னித் தக்கார்க்கு மேழைகட்கும்
வந்தபணி யாட்கும் வழங்கு. (சஉஅ)

தப்பிருந்தாற் றண்டி தருவ குறைக்காதே
யப்பொப்ப நீங்குமின மாட்கொளவ—ரிப்புவியி
லுள்ளளவு முன்றன்பா லுற்றிடவே கொள்பணியை
வள்ளலா ருள்வனு வந்து. (௪௨௯)

பணியாள் நடுங்கப் பழியா தேயெனல்.

கஞ்சியில் லாமற் கடும்பணிசெய் வாரிடத்து
நஞ்சுபோல் வன்சொ னவிலாதே—யஞ்சி
யகநடுங்க வன்றுருக் கல்லல்செய் யாதே
யிகம்வாழ்த்த நன்மை யிழை. (௪௩௦)

எவலா ளழத்தீ தியற்றுவான் கடையனெனல்.

பொருள்பெரிதா வெண்ணிநீ புன்செருக்குக் கொள்ளேல்
பொருளிருப்பை ஞானிகள்பாற் போய்க்கேள்—பொருணிலையை
யெண்ணிப் பணிசெய்யு மேழைகளை வையாது
நண்ணி யிருக்கவே நாடு. (௪௩௧)

இன்னலொன்று மின்றி யினியநான் குண்டியுணு
மன்னபுண்ணி யத்தா லகங்கரித்து—மின்னலொத்த
மண்வாழ்வை நம்பி மதியின்றி யேவலரைக்
கண்கலங்கச் செய்வான் கடை. (௪௩௨)

கூலி குறைப்பான் கொடியசண் டாளனெனல்.

உடம்பயா வேலைதமை யோய்வின்றிப் பெற்றுக்
கடகடெனப் பேசிக் கடிவீர்—விடுகின்ற
கூலிகுறைத் திவான் கொடும்பாவச் சண்டாளன்
வேலிமுள்ளை யொப்பான் வெகுண்டு. (௪௩௩)

அரைக்கூலி யீவா ரடைவார் நரகெனல்.

பவஞ்செய்து முன்னே பணியாளா வந்தா
னிவனென்ன நெஞ்சத் திரங்கார்—பவத்தைப்
பரிப்பார் பணிவாங்கிப் பாதிப்பொன் னீவா
ரெரிப்பேய் நரகுறுவா ரே. (௪௩௪)

ஏழையை யேய்ப்பான் வாழைபோல் வாழான்.

இஞ்சியிலா தையகோ கட்டபணி செய்தவரை
வஞ்சமனத் தால்கையடி வாயடியா—லஞ்சிடவே
யேழைகளை யேமாற்றி யெண்ணுப்பொன் சேர்க்கின்றாய்
வாழையென வாழாய் மதி. (சாகடு)

நீதிநூற் கல்லார் நிமலனடி போற்றிடார்
சாதியொழுக் கத்துயர்ந்தோந் தாமென்பார்—போதியவா
கஞ்சியற்ற வேழைகள்பாற் கைகடுக்க வேலைபெற்று
வஞ்சிப்பார் வாழாரோ மண். (சாகசு)

அடிமையைக் காவா னடிமையா ளாவான்.

பணிசெய்வார் தம்மிடத்துப் பட்சம்வை யாயேற்
பணிசெய்வாய் பின்னவர்க்குப் பாங்காப்—பணிகொண்
டரைக்கூலி யீவாயே லந்தோ நமன்றான்
றரைக்கரிதாச் செய்வனுனைச் சார்ந்து. (சாகஎ)

செல்வப் பெருக்காற் றிடுக்கிடவே யேழைகளைப்
பல்லைக் கடித்துப் பழியாதே—செல்வ
மிருப்பதுபோற் காட்டிச்சென் றேழையிடத் துன்னை
யிருத்தும் பணியாளா வெண். (சாகஅ)

ஆட்கூலி கொள்வா னடையான் கதியெனல்.

வறியவர் பாலருளை வையா தவரைத்
தறிபோ னினைந்து தடித்த—வெறிமனத்தாற்
கட்டபணி வாங்கிக் கருத்துவக்கக் கூலிதாத்
துட்டவுனக் கில்லைகதி சூழ். (சாகக)

கூலிகட் கின்னுக் குயிற்றுவோர் பதகரெனல்.

கூலிகுறைத் திந்தந்தோ கூலிகளை நிந்திப்பார்
வேலியி லாப்பயிர்போல் வீறழிவார்—மாலிவரை
வேதம் புராணம் வெகுண்டு கழித்திடுமே
பாதகருட் பாதகராய்ப் பார்த்து. (சசo)

இன்னுமை கூலிகளுக் கேறுமா ருச்செய்யு
மன்னர் குணமதிக மாராய்ந்து—சொன்னல்
மிகவிரியு மென்றுவிட்டேன் வீறுறவே வேண்டின்
றருதியா நற்குணத்தைச் சார். (சசக)

## அடிமை.

எசமான் புண்ணியன் னேவலாள் பாவியேனல்.

ஆளடிமை சாட்சி யறிவீர் பவ புண்யம்
ஆளடிமை யில்லா தவிலயிலை—கோளி
லெசமானே புண்ணியவா னெண்ணடிமை பாவி
நிசமிதனை யோர்ந்துய்மி னேர்ந்து. (சசஉ)

ஏவலாள் பணிக ளியற்று முறைமை.

ஆனதனி கன்பா லடிமைத் தொழிற்செயுங்கான்
மானங் குலஞ்சீர் மதியாமற்—றூன
நளனரிச் சந்திர னல்லவர் போலக்
களவின்றிச் செய்க களித்து. (சசங)

எசமான் மகிழ வியற்றுக பணியேனல்.

எசமான் மகிழ வியற்றிற் பணியை
வசமாந் திருவினருள் வந்திங்—கெசமான்று
மில்லாத காலத்தி லேமாற்று வாயாகி
னல்ல திருமுனியு நாடு. (சசச)

முன்னமே செய்பவத்தை மூடா பிறந்தறிந்து
மின்னம் பவஞ்செய்தா லெங்கனுய்வை—யுன்னி
யொளிக்கா துடம்பா லுடையான் மனந்தான்
களிக்கப் பணிசெய் களித்து. (சசரு)

உடம்பு வியர்க்க வுளுற்றுவாய் பணியேனல்.

உடம்பு வியர்க்க வுடையான் பணியைத்
திடம்படச் செய்யிற் சிறப்பா—மடமில்லா
வாழ்வடையத் திம்மாசு மாஞ்சரிதங் கேட்டுணர்மின்
றாழ்வடையா தோங்கிடவே தான். (சசசு)

பிறத்த லுளது பிழைபுரி யேலெனல்.

இப்பிறப் போடுபிறப் பில்லா தொழியுமே
லெப்பவமுஞ் செய்திடலா மெண்ணுமை—யிப்பிறப்போ
போகாமற் பின்றொடரும் பெற்றியி னுற்றொழிலை
வாகாகச் செய்தல் வழக்கு. (சசஎ)

உண்மையாய்ப் பணிசெயி லுறுநல மேலாமேனல்.

வஞ்சகத்தை விட்டுமெய்ம் மன்னப் பணிபுரிந்தா
லெஞ்ஞான்றுந் துக்கமுறு யின்புறுவாய்—நஞ்சுண்ட
மாதேவன் றன்னடியார் வந்தருள்வா ருன்மனையிற்
றீதேய்வ தில்லை திறம். (சசஅ)

எத்தொழிலே யானு மேதமின்றி யெப்போதும்
பத்து முவக்கப் பணிபுரியி—னித்தமு
மீனப்பொய் பாறு மிடுக்கணறும் வாழ்வுவரு
மூனமெலா மோடு மொளித்து. (சசகூ)

உள்ள மறிந்தே யுழைப்பறிந்தே நன்மைசெயுங்
கள்ளெருக்கஞ் சூடுகின்ற கண்ணுதலான்—வள்ளலா
னெங்கு நிறைந்தவனென் றெண்ணிப் பணிசெய்வார்
பங்கமின்றி வாழ்வாரிப் பார். (சடு0)

அந்நாளி லெண்ணு தளவின்றிச் செய்பவத்தா
லிந்நாளி லாளாக வீங்குழைத்த—துன்னு
ளறிந்துபணி வஞ்சமின்றி யாற்றுவையே லீச
னறிந்தின் பளிப்ப னமர்ந்து. (சடுக)

சத்தியமாச் செய்பணியே சாலப் பொருளளிக்குஞ்
சத்தியமாச் செய்பணியே சாமியருள்—சத்தியமாக்
கூட்டும் புகழ்மனங் கோணாது செய்பணியே
நாட்டுவிக்கு ஞானத்தை நம்பு. (சடுஉ)

உண்மைப் பணியால் வண்மையுற் றேனெனல்.

சின்னாட்கு முன்செல்வர் செப்பும் பணிகடமை
யன்னியன்போற் செய்யா தவர்மகிழப்—பொன்போல
நட்டமின்றிச் செய்துபெற்ற நற்கூலி மல்குதென்பாற்
றொட்டமணற் கேணியெனச் சூழ்ந்து. (சடுந)

### சோம்பும் பணியாள் துன்பெலா முறுமெனல்.

திண்ணையிற் படுத்துறங்குஞ் சீற்ற சோம்பர்தா
மண்ணலெச மான்று ளறைபணியை—யுண்மையாச்
செய்யா தவர்களென்று தீரத் தெளிந்துநீ
மெய்யாம் பணிசெய் விரைந்து. (௪௫௪)

சோம்பிச்செய் தோர்பணிமுன் றேல்வற்றிப் புத்தியற்றுத்
தேம்பித் திகைப்பார் தெருத்தெருவாய்—நாம்பிச்சை
யீந்தாலு முண்ணு மிருமன்றே யுற்றிருப்பார்
சாந்தனையுந் துன்புறுவார் தாம். (௪௫௫)

சோம்பிப் பணிபுரியிற் சுத்தவறி வுண்டாகா
சோம்பிப் பணிசெய்யிற் சோறரிதாஞ்—சோம்பியே
செய்துபணி கூலிபெற்றாற் றெய்வம் பொறுக்காது
செய்யுமே துன்பஞ் சினந்து. (௪௫௬)

### வஞ்சப் பணிசெயில் வருந்தீங் கெலாமெனல்.

ஒளித்துப் பணிபுரிந் துத்தமன்போற் காட்டிக்
களித்துப்பொன் வாங்கினமன் காய்ந்தே—விளித்திறுக்கி
குத்திப் பிளந்துபல கூறிடுவா னாதலினாற்
சத்தியமாய்ச் செய்கபணி தான். (௪௫௭)

பல்லார் பழிக்கப் பளகாப் பணிசெய்வார்
பொல்லாப் பிறப்புறுவார் போய்நரகிற்—றொல்லையுள
தண்டனைக ளுற்றிடுவார் சங்கையற்ற ஞானியர்போல்
விண்டதொழில் செய்வதே மேல். (௪௫௮)

மனமறிய வஞ்ச மனப்பணிசெய் வாரோ
வனரேரு மாடையு மற்றுக்—கனமற்ற
வானியல்புட் போலலைவார் மாற்றார்பா லுற்றிடுவார்
தேனில்வீ ழீப்போற் றிகைத்து. (௪௫௯)

தந்தைசொற் போலெசமான் றன்சொல்லையுங் கேட்டிலரைக்
கந்தைத் துணிகஞ்சி கண்டகலும்—பந்த
மனையாள் பகையாவாள் மக்கடுணை யாகா
ரெனையாளி சன்னனை யென். (௪௬௦)

மூனமறியக் கூலிபெற்றும் வஞ்சவினை செய்யிற்
றனமகிழா துன்றன்பாற் றங்கத்—தினமுமே
கஞ்சிக் கலைந்திடையிற் கட்டகந்தை யில்லாது
பஞ்சியொப்பா யெங்கும் பறந்து. (சகூக)

எசமானை யேய்ப்பா ரிழிபிறப் பெய்துவார்.

ஆமாகக் கூலிபெற்றுங் கையார வேலை
திரமாச் செயார்நாயாய்த் தேளாய்—மாமாக
வென்றும் பிறப்பா ரெசமானை யேய்த்தவர்க்குப்
பன்றிப் பிறப்புறுமே பார். (சகூஉ)

# இறைபணி புரிதல்.

சகத்தி லெவர்க்குஞ் சட்டம் பொதுவெனல்.

குடிகடுக்கம் போக்கக் குறித்தாசன் பாங்காப்
படியிலெவர்க் கும்பொதுவாப் பார்த்து—மிடியர்
தனிகரென வெண்ணாது சட்டமது செய்து
கனிவா யளித்ததனைக் காண். (சகூங)

அதிகாரி யாத லறப்பய னாலெனல்.

பெரியவுத்யோ கத்தைப் பெருமானை வேண்டி
யரியவறஞ் செய்திந் நடைந்தாய்—பரிவாக்
குடிகளுக் காம்பணியைக் குற்றமறச் செய்யா
யடிகடுக்க வேயலைப்பா யார்த்து. (சகூச)

சட்ட நெறிநில்லார் கட்டம் புரிவரெனல்.

சட்டம் பொதுவாகுந் தன்மையினைத் தோராது
கட்டமுற வேழைகளைக் காக்கவைத்து—மிட்ட
தனிகர் பணியைத் தகவின்றி செய்து
மனிமகிழ்வ தென்னோ நவில். (சகூரு)

நல்கூர்ந்தார் முன்வரினு நாடாது காக்கவைத்துச்
செல்வர்தாம் பின்வரினுஞ் செய்பணியை—யெல்லார்க்கு
முன்னாகச் செய்து முடிக்குமுத்தி யோகத்தர்
பன்னாளுங் கொள்வார் பழி. (சகூசு)

எவர்க்கும் பொதுவா வியன்றுக பணியெனல்.

ஆரேனு நாடா தவரவர்க் காம்வினையை
யூரேது கண்டே யொருபொதுவாச்—சூரேதும்

வாரா திறைபணிசெய் வாரே லவர்தம்மை
யூரார் புகழ்வா ருவந்து. (சகூஎ)

கணக்குப் புரட்டரைத் தணப்பா ளிலக்குமி.

தொட்ட விடந்தோறுந் தோன்றாத் துணையுண்மை
கட்ட வினையினாற் காணும—விட்ட
கணக்கைப் புரட்டுங் கணக்கரே செய்யா
ளிணக்கமுமக் கென்றுமிலே யே. (சகூஅ)

வினைப்பே தத்தால் வேறுவே றுந்தொழில்.

பாவபுண்ணி யங்களாற் பன்னாச னுதியா
வாவலுறு தோட்டி யளவாக—மாவுலகிற்
பேதமுற்றுச் சிவர் பிறந்துபணி செய்கின்று
ரேதமற்று வாழுநீ யெண். (சகூகூ)

நூலின் முடிபுரை நோன்பெற நுவலுதல்.

ஒருசிவமே யெங்கு மொளிர்கின்ற தோர்ந்து
திருஞான மாகித் திகழ்ந்து—கருவாகு
மாயைமரு வாதபடி மன்னித் திகழ்கின்றேன்
சாயையெனக் கண்டுலகைத் தான். (சஎ௦)

எல்லாரு மென்வடிவென் றேதமறக் கண்டதனு
லெல்லார் குணங்களையு மீங்குணர்ந்து—பொல்லா
ரடைக்குணம்வே றாக வறிஞர்குணம் வேறாக்
கடைந்தறிவைக் கண்டுரைத்தேன் காண். (சஎக)

பழுதகன்று பாரதனின் பற்றறுத்த தாலே
பழுதறவே பார்முறைமை பார்த்து—வழுவின்றித்
தன்வடிவைக் கண்டமுனோர் சாற்றியநூ லைத்தழுவி
நன்மதிதீ பஞ்சொற்றே னுன். (சஎஉ)

வாழ்த்து.

எவ்வுலகும் வாழ்ந்திடுக விந்திராபி டத்தடியா
ரெவ்வமற வாழ்ந்திடுக வெம்மதமுஞ்—செவ்வையுள
வேதம் புராண மிளிர்நன் மதிதீப
நாதன் குருவாழ்க நன்கு. (சஎங)

நன்மதிதீபம் முற்றுப்பெற்றது.

பாயிரம் உட்படச் செய்யுள்—சஅஅ.

சுபம்! சுபம்!! சுபம்!!!



ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்புசாமி யவர்களியற்றிய

## புத்தகங்கள்.

| | | விலை அணா |
|---|---|---|
| 1. | குருஸ்தவம் ... ... ... | 1 |
| 2. | போத விளக்கம் ... ... ... | 2 |
| 3. | சொரூபாநந்த விளக்கம் ... ... | 1 |
| 4. | அநுபவாநந்த விளக்கம் ... ... | 1 |
| 5. | சாமி விளக்கம் ... ... ... | 1 |
| 6. | திருவள்ளுவர் தோத்திர விளக்கம் ... ... | 1 |
| 7. | கற்பு விளக்கம் ... ... ... | 3 |
| 8. | அன்னதான விளக்கம் ... ... ... | 2 |
| 9. | கருணை விளக்கம் ... .... .... | 2 |
| 10. | நன்மதி தீபம் .... ... ... | 4 |
| 11. | விபூதி விளக்கம் ... ... .... | 4 |
| 12. | ஞானசார விளக்கம் ... ... .... | 1 |
| 13. | துறவு நிலை விளக்கம் ... ... ... | 4 |

ஷெ விளக்கங்களும் தீபமும் அரியபெரிய தத்துவ ஆராய்ச்சிகளையும், நீதிகளையும், பல வித்துவான்களின் அபிப்பிராயங்களையும் பெற்று, வெகுஜன சமுகத்தில் புலவர் பலரால் அரங்கேற்றஞ்செய்யப்பட்டனவாம்.

இந்நூற்களின் விக்கிரயப் பொருள், இந்நூற்களின் ஆசிரியர் நடாத்தும் ஸ்ரீ சச்சிதாநந்தசுவாமிகளின் குருபூஜை கைங்கரியத்திற்கே உபயோகிக்கப்படுவதால், இவற்றை யாவரும் வாங்கிப் பெரும் புண்ணியத்திற் காளாவார்களெனத் திருவருளைச் சிந்திக்கின்றனன்.

இல்லற விளக்கம் என்னும் புத்தகம் கூடியவிரைவில் வெளிவரும்.

புத்தகங் கிடைக்குமிடங்கள்.

| | |
|---|---|
| ரிப்பன் பிரஸ், சென்னை. | தே. அ. சாமிகுப்புசாமியவர்கள் |
| கோ. வடிவேலு செட்டியார்,<br>கோமளேசுவரன் பேட்டை,<br>சென்னை. | 36, ஸ்ரீ. சச்சிதாநந்த சங்கத்தலைவர்<br>வெங்கடேச பத்தன் வீதி,<br>பெருமாள்பேட்டை,<br>வேப்பேரி போஸ்டு, சென்னை. |
| வே. சொக்கலிங்கம் பிள்ளை,<br>சுருட்ஷோப், பொறையாறு,<br>தரங்கம்பாடி போஸ்டு. | |

இங்ஙனம்,
காளத்தி. இ. சிதம்பரசாமி புராணிகர்,
7, மணிக்கார செல்டிரி ரோட்,
இராயபுரம் போஸ்டு, சென்னை.